DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1380
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday September 16, 2022

# திருக்கோணேஸ்வரர் ஆலயத்தைக் காப்பாற்றும் வகையில் முக்கிய தீர்மானங்கள் மூன்று

**– யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**




இலங்கையில் புகழ்பெற்ற ஈஸ்வரத் தலங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை வெளியார் ஆக்கிரமிப்பைத் தடுக்கவும் அதை எதிர்க்கவும் அகில இலங்கை இந்து மாமன்றத்தால் மூன்று முக்கிய தீர்மானங்கள் யாழ்ப்பாணத்தில் நிறைவேற்றப்பட்டது.

சைவசமய அமைப்புக்கள் ஒன்றுகூடி ஆராய்ந்து இந்த 3 தீர்மானங்கள் நிறைவேற்றின.

”தமிழர்களின் பூர்வீகச் சொத்தாக விளங்கும் திருகோணமலை திருக்கோனேஸ்வர ஆலயம் அமைந்துள்ள பகுதியில் திட்டமிட்டு சிங்கள வாணிப நிலையங்களை நிரந்தரமாக அமைப்பதற்கு அவசர ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது” என்று இந்து மாமன்றம் தெரிவித்துள்ளது.

(உள்ளே விபரமான செய்தி 17ம் பக்கத்தில்)



# றொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா கடந்த வெள்ளி தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற்றது

கனடாவில் 3ம் வது ஆண்டாக. றொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா கடந்த வெள்ளிக்கிழமை 9ம் திகதி கனடா மார்க்கம் நகரில் அமைந்துள்ள ‘யோர்க் சினிமாவில்’ கோலாகலமாக ஆரம்பமாகியது. அதனைத் தொடர்ந்து சனி மற்றும் ஞாயிறு இரண்டு நாட்களும் பல திரைப்படங்கள் திரையிடப் பெற்றன. றொறன்ரோ சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா

இவ்வருடத்தின் சர்வதேச தமிழ்த் திரைப்பட விழாவின் நிறுவனர் செந்தூரான் நடராசா அவர்கள் தனது குழுவினருடன் இணைந்து ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்திருந்தார். ‘உலகெங்கும் பேசப்படுகின்ற ஒன்றாகவும் தமிழகத் திரைத்துறையினரின் பார்வை கனடாவை நோக்கி திரும்பும் நிலையை இந்த றொறன்ரோ திரைப்பட விழா தோற்றுவித்துள்ளது என்றே கூற வேண்டும்.’ இவ்வாறு தெரிவித்தார் அங்கு உரையாற்றிய கனடா உதயன் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம்.

இங்கு காணப்படும் படத்தில் முதல் நாள் நடைபெற்ற ஆரம்ப வைபவத்தில் சிறப்புரையாற்றிய வர்த்தகப் பிரமுகரும் வர்த்தக ஆலோசகருமான குலா செல்லத்துரை உரையாற்றுவதையும் அருகில் நிறுவனர் செந்தூரான் நடராசா அவர்கள் நிற்பதையும் காணலாம்.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
416 2888882
RE/MAX REALTRON BLUE FORCE
கவாஸ். சோம சச்சிதானந்தன்

# பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தை இரத்துச் செய்யக் கோரி யாழிலிருந்து போராட்டம் தொடங்கியது

- எமது யாழ் செய்தியாளர்



இலங்கையில் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக, தமிழர்கள் மீது பல கொடூரங்கள் இடம்பெற ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. அதற்கான முன்னெடுப்பு ஒன்று யாழிலிருந்து சனிக்கிழமை (செப்டம்பர் 10) தொடங்கியது.

பயங்கரவாதத்தடுப்புச் சட்டத்தை இரத்து செய்யக் கோரி சர்வஜன நீதி அமைப்பு முன்னெடுத்த நாடளாவிய ஊர்திவழிப் போராட்டமாகச் சென்று கையெழுத்து திரட்டும் நடவடிக்கை யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் ஆரம்பிக்கப்பட்டது.

காலை 10 மணியளவில் மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலிலிருந்து சிதறு தேங்காய் உடைப்புடன் ஆரம்பமான இந்த ஊர்திவழிப் போராட்டம் காங்கேசன்துறை தொடக்கம் 25 மாவட்டங்களுக்கும் சென்று அம்பாந்தோட்டையில் நிறைவடையவுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய வாலிபர் முன்னணியும் சர்வஜன நீதி அமைப்பும் முன்னெடுக்கும் கையெழுத்து திரட்டும் பிரச்சார நடவடிக்கையின் ஆரம்ப நிகழ்வில் அரசியல் கட்சி பிரதிநிதிகள், தொழிற்சங்க தலைவர்கள், கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சோ. சேனாதிராஜா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், த.சித்தார்த்தன், ஆகியோரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், சரவணபவான், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், இலங்கை ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின், இலங்கை தமிழரசு கட்சியின் வாலிபர் முன்னணியின் கி. சேயோன், மாகாணசபை முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை தவிசாளர்கள், உறுப்பினர்கள், இலங்கை தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இந்த ஊர்திவழிப் போராட்டம் மூலம் மூன்று நாட்களுக்கு யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று கையெழுத்தைச்



சேகரிக்கவுள்ளதுடன் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களுக்கும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என இதன்போது ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகள் முன்னெடுத்துள்ள இந்த கையெழுத்து இயக்கத்தில் பெருந்திரளானவர்கள் பங்குபெற்று அதற்கு தமது ஆதரவை அளிக்க வேண்டுமென்றும், தற்போது தென்னிலங்கையில் சிங்கள மக்களும் இச்சட்டத்திற்கு இலக்காகி சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களும் இந்தச்சட்ட நீக்கத்திற்கு முழுமையான ஆதரவளிக்க வேண்டும் என்றும் ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர்.

# முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு புலம்பெயர் உறவுகள் உதவி



இலங்கை அரசு விடுதலைப் புலிகள் மீது முன்னெடுத்த கொடூரமான யுத்தத்தின் போது பலவகையில் பாதிக்கப்பட்டவர்கள் இன்னும் அதிலிருந்து மீள முடியாமல் நடைப்பிணமாக வாழ்ந்து வருகின்றனர். ஆயிரக்கணக்கானவர்கள் அங்கவீனர்கள் ஆயினர். வாழ்வாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத பலர் அந்த குறைபாடுகளுடன் வேறு வழியின்றி வாழ்ந்து வருகின்றனர்.

அவ்வகையில் வடக்கு கிழக்கில் இடம்பெற்ற போரின் காரணமாக குறைந்தபட்சம் 500 பேரும் விபத்துக்களின் காரணமாகக் சுமார் 100 பேரும் முள்ளந்தண்டு வடம் பாதித்த நிலையில் இன்றும் பெரும் சிரமத்தின் மத்தியில் வாழ்வது மட்டுமன்றி இவர்களிற்கான விசேட வசதி வாய்ப்பையுடைய மெத்தைகள், சக்கர நாற்காலிகள், கழிப்பறை வசதிகள் என்பன கிடைக்கப்பெறாத நிலையில் கடும் போராட்டங்களிற்கிடையே வாழ்க்கையை முன்னெடுக்கின்றனர்.

அவர்களுக்கு உதவும் வகையில் முதல் கட்ட முன்னெடுப்பாக, வடமராட்சியில் எயனய 91 உயர்தர மாணவர் அமைப்பினரால் உயிரிழை நிறுவனத்தின் பயனாளிகளுக்காக 10 சக்கர நாற்காலிகள் நன்கொடையாக வழங்கப்பட்டன.

VADA 91 உயர்தர மாணவர் அமைப்பின் புலம்பெயர் நண்பர்கள் அண்மையில் வடமராட்சியில் நடந்த ஒன்றுகூடலுக்குக் கலந்து கொள்ள வந்த பொழுது உயிரிழை அமைப்பின் உறுப்பினர்களைச் சந்தித்து அவர்களது தேவைகள் தொடர்பாக கலந்துரையாடியிருந்தனர். இதன்போது அவர்களது வேண்டுகோளின்படியே இந்த 10 சக்கர நாற்காலிகள் மற்றும் முள்ளந்தண்டு வடம் பாதித்தவர்களிற்கான கழிப்பறை வசதிக்கு பயன்படுத்தக்கூடிய சக்கரநாற்காலிகள் என்பவற்றை அன்பளிப்பாக வழங்க முன்வந்தனர்.

அவ்வகையில் VADA 91 உயர்தர மாணவர்கள் சார்பாக முல்லைத்தீவு மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் உமாசங்கர் அவர்கள் மேற்படி சக்கர நாற்காலிகளைக் கையளித்தார்.

போர் முடிந்து 13 ஆண்டுகளாகின்ற நிலையில் முள்ளந்தண்டு வடம் பாதித்த 600 பேரில் மேலும் பலர் இந்த வசதி வாய்ப்பிற்காக இன்றும் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சிரமத்தின் மத்தியில் இருப்பதற்கு ஒவ்வொருவரிற்கும் இதற்கான வசதி வாய்ப்பை ஏற்படுத்துவதானால் முன்னர் 10 லட்சம் ரூபாவும் தற்போது 25 லட்சம் வரையிலும் செலவு ஏற்படுவதே இதற்கான காரணமாகவுள்ளது என்கின்றனர். இதன் அடிப்படையில் இவ்வாறான உதவிகள் தமக்குப் பெரிதும் கை கொடுக்கும் என பயனாளிகள் தெரிவித்தனர்.



# கனேடிய தமிழர் பேரவையின் ஆதரவில் அரசியல் கைதிகளின் உறவினர்கள் யாழிலிருந்து மகசின் சிறைக்குப் பயணம்






ஐ.நா அமர்வு எதிர்வரும் திங்கட்கிழமை (12) ஆரம்பமாகவுள்ள நிலையில் சர்வதேச கவனமொன்றை ஈர்த்துக் கொள்ளும் வகையில் நீண்டகாலமாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உறவுகள் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு மகசின் சிறைச்சாலை நோக்கி பயணத்தை மேற்கொண்டனர்.

"குரலற்றவர்களின் குரல்" அமைப்பு யாழ் ஊடக அமையத்தில் இன்று (10) மதியம் 2 மணியளவில் நடாத்திய ஊடக சந்திப்புக்குப் பின்னர் இந்த பயணத்தை ஒழுங்குபடுத்தப்பட்ட விசேடப் பேருந்தில் பயணத்தை மேற்கொண்டனர்.

தேசிய சிறைக் கைதிகள் தினம் செப்டம்பர் 12ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்ற நிலையில் இந்த பயணம் ஆரம்பிக்கப்பட்டதாக குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்தார். கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் சிலர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு வலுச்சேர்க்கும் வகையில் அரசியல் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், யாழ் மறை மாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளார், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரெழுச்சி இயக்க ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள், யாழ் மாநகர பிரதி முதல்வர் து.ஈசன், யாழ் மாநகர சபை யாழ் மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்க பிரதிநிதிகள் எனப் பலரும் யாழ் ஊடக அமையத்திற்கு வருகைதந்து பயணத்திற்கு ஆதரவு தெரிவித்தனர். அரசியல் கைதிகளைப் பார்வையிடுவதற்கு, உறவினர்கள் சென்று வருவதற்கான போக்குவரத்து ஒழுங்குகளை கனேடிய தமிழர் பேரவை ஏற்பாடு செய்து வழங்கியது.


## வேலை வாய்ப்பு

**Cleaning** வேலைக்கு ஆட்கள் தேவை.
ஸ்காபுறோவில் காலை நேரத்தில் தினமும் 3 மணி நேரம் வேலை செய்ய **Cleaning** வேலையாட்கள் உடன் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
**416 858 6316**

## Room for Rent

**ஸ்காபுறோவில் Ellesmere & Meadowvale சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள வீடொன்றில் மேல் தளத்தில் உள்ள அறை ஒன்று உடனடியாக வாடகைக்கு உண்டு. அனைத்து வசதிகளும் உண்டு. வாகனத் தரிப்பிடமும் வழங்கப்படும்.**
தொடர்புகளுக்கு-
**416 858 6316**

## Tutor Available

Math, Physics and Chemistry
ஆகிய பாடங்கள்

Experienced Tutor is available for online tutoring in the subjects of Math, Physics and Chemistry.

For further details contact Sethu:
(416) 858-4259
Sedumadavan@hotmail.com

## Renovation Workers Wanted

**Workers needed for the following jobs:**

- **Drywall Installation**
- **Painting**
- **Hardwood Installation**
- **Bathroom Reno**
- **Kitchen Reno**

**Call - Siva 416-706-8160**

Canada
We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# அதிசய மனிதர் ஈழவேந்தன் ஐயா. அகவை தொன்னூாரை அடைகின்றார்

பல்துறை ஆற்றலும் நல் ஆங்கிலப் புலமையும் அரசியல் ஞானமும் அழகிய சிரிப்பும் அடங்கா போர்க்குணமும் அமைதி-யின் இருப்பிடமுமாகிய கனடாவாழ் ஈழவேந்தன் ஐயா இன்று வெள்ளிக்கிழமை கனடா வாழ் தமிழ் அன்பர்களால் விழா எடுக்கப்பெற்று கொண்டாடப்பட உள்ளார்.

இந்தச் செய்தி எம் காதுகளில் வந்தொலித்த போது 'நல்ல விடயம் தான்' என்று சொல்லி எம் நாக்கு நடனமாடுகின்ற வேளையில். மனதும் உற்சாகத்தோடு அமைதியாக சம்மதம் தெரிவிக்கின்றது

எத்தனையோ நகரங்களிலும் கிராமங்களிலும் தனது கடந்த கால வாழ்க்கையின் பதிவுகளை கொண்டிருந்த ஈழவேந்தன் ஐயா அவர்கள் தற்போது கனடா என்னும் புண்ணிய தன் வாழ்வை மேற்கொண்டு வருகின்றார். இங்கு அவரோடு கூடிவாழும் சந்தர்ப்பம் பெற்ற நாம் அதிஸ்டசாலிகள் என்றே கருதவேண்டும்.

ஒரு பக்கம் ஒரு வகையான போர்க் குணம். மறு பக்கம் பொறு-மையின் சிகரமாக உயர்ந்தவராய் அவர் என்றும் மிளிரும் மாமனிதர். ஈழுவேந்தன் ஐயா அவர்களது பிறப்பு தொடக்கம் இன்று வரை பல அங்கீகாரங்களைப் இவருக்குப் பெற்றுக் கொடுத்து வந்தாலும். ஐயா அவர்களது கடந்த கால வாழ்க்கை அர்ப்பணிப்புக்கள் அடங்கிய ஒன்றகவே அமைந்துள்ளது என்பதை எம்மில் பலர் அறிந்து வைத்துள்ளோம்.

இலங்கையின் மத்திய வங்கியில் பதவி வகித்திருந்தாலும் அவரது இருப்பு என்பது எப்போதும் ஒரே தன்மை கொண்டதாகவே உள்தை நாம் கவனிக்க முடிகின்றது. தான் இயல்பாகவே கொண்டிருந்த இனப் பற்று மற்றும் மொழிப்பற்று தொடர்பாக அவர் கொண்டிருந்த தீவீரம் என்பது கணக்கில் அடங்கிவிடமாட்டாது.

அகவை 90 ஐ அடையும் ஈழவேந்தன் ஐயா அவர்கள் அரசியலில் ஆர்வம் கொண்டும் அதில் ஈடுபாட்டைக் காட்டியும் நின்ற காலத்தில் 'அதிசய மனிதர்' என்ற நாமத்தை தனதாக்கிக் கொண்டார்.

இதனால் இவர் அரசி-யல் களத்தில் கால் பதிக்க முயன்று அதில் வெற்றி கண்டார். ஆனால் இலங்கைப் பாராளுமன்றத்தில் ஒரு முக்கியமாக உறுப்பினர்களாக இருந்து தமிழ் மக்களுக்காக உழைக்க விரும்பிய அவர். ஏனைய உறுப்பினர்களோ அன்றி நண்பர்களோ அவ்வாறாக இருக்கவில்லை என்பதை நன்கு அறிந்திருந்தாலும் அவரிடத்தில் குடிகொண்டிருந்த அனைத்து திறன்களையும் வளர்த்துக் கொண்டார்.

தான் பிறந்த நாட்டில் ஒரு நேர்மையான அரசியல்வாதியாக செயற்படுவதற்கு அவர் முயன்றாலும், அவர் காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் மாகாண சபை உறுப்பினர்களாகவும் பதவி வகித்தவர்கள் 'விலை' போகின்றவர்களாக மாறிய காரணத்தால், 'உண்மையான' மக்கள் சேவகனாக பணியாற்றிய ஈழவேந்தன் ஐயா அவர்கள் பழிவாங்கப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து. தான் நேசித்த தமிழையும் தமிழ்த் தேசத்தையும் தழுவியபடி மக்களுக்காக குரல் கொடுப்போம் என்று எண்ணத்தில் தமிழ்நாட்டுக்குச் சென்றாலும் அங்கும் அவரால் நிம்மதியாக வாழ முடியவில்லை.

தொடர்ந்து கனடாவில் குடியேறி இங்கிருந்த வண்ணம் தாயக மக்களுக்காக உழைப்போம் என்ற உயரிய எண்ணத்தோடு இங்கு கால்பதித்த அவருக்கு. இங்கும் இடையூறுகளே தொடர்ந்து வந்தன.

ஆனாலும், இன்று 16ம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் அவரை நேசிக்கும் அன்பர்களால் எடுக்கப்பெறுகின்ற விழாவில் அவர் பெறும் கௌரவம் அவரது நேர்மையான வாழ்வுக்கு மதிப்பளிக்கும் ஒன்றாக விளங்கும் என்பதே எமது எண்ணமாகும்.

# வடக்கு – கிழக்கு மக்களுக்கு அதிகார பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும்

## கவனயீர்ப்பு போராட்டத்தில் மக்கள் தெரிவிப்பு




வடக்கு-கிழக்கு மக்களுக்கு அதிகார பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும் என யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சாவகச்சேரி பிர தேசத்தின் மகிழங்கேணி கிராமத்தில் இன்று வியாழக்கிழமை (15) காலை இடம்பெற்ற 100 நாட்கள் செயல் முனைவின் 46 வது நாள் கவனயீர்ப்பு போராட்டத்தின் போது கலந்து கொண்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

"கௌரவ-மான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்" என்னும் தொனிப்பொருளில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவினால் முன்னெடுக்கப்படும் 100 நாட்கள் செயல்முனைவின் 46 வது நாள் கவனயீர்ப்பு போராட்டம் இன்று வியாழக்கிழமை (15) யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சாவகச்சேரி பிரதேசத்தின் மகிழங்கேணி கிராமத்தில் நடைபெற்றது.

இசை செயற்றிட்டத்தில் சாவகச்சேரி பிரதேச மக்கள், சிவில் சமூக அமைப்புக்கள், பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் விவசாய, மீனவ அமைப்புக்கள், என பலரும் கலந்து கொண்டு கௌரவமான அரசியல் தீர்வுக்கான கோரிக்கைகளை முன் வைத்தனர்.

இதன் போது நாங்கள் நாட்டை துண்டாடவோ தனி அரசோ கேட்கவில்லை இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம், எமக்கு வேண்டும் எங்கள் நிலம், ஒன்று கூடுவது எமது உரிமை,வடக்கு கிழக்கு மக்களுக்கு அதிகார பகிர்வு என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும், போன்ற பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது கலந்து கொண்ட மக்கள் குறித்த கோரிக்கைகளை முன் வைத்தனர்.

# மூன்றாவது உலக மனித நேய சமூக நீதி மாநாடு

பெரியார் பன்னாட்டமைப்பு அமெரிக்கா, கனேடிய மனிதநேய அமைப்புக்களுடன் இணைந்து இந்த மாநாட்டை நடத்துகின்றது. ரொறொன்ரோ, ஸ்காபுரோவில் அமைந்துள்ள சென்ரானியல் கல்லூரியில் செப்ரெம்பர் 24 காலை 9 முதல் இரவு 9 வரையும், செப்ரெம்பர் 25 காலை 9 முதல் மாலை 5 வரையும் இம் மாநாடு இரண்டு நாட்கள் இடம்பெறும்.

மானமிகு ஆசிரியர் வீரமணி, தமிழ்நாட்டு முதல்வர் மு.க. ஸ்டாலின்(இணையவழி), கனடிய பாராளுமன்றத் தலைவர் மார்க் கோலன்ட் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்தசங்கரி, மருத்துவர் செந்தில்குமார் மற்றும் தமிழ்நாட்டு, அமெரிக்க, ஈழப் பேராசிரியர்கள், மனித நேய மாண்பாளர்கள் இம் மாநாட்டில் பங்கு பெறுகின்றனர்.

கட்டணம் 100 கனடிய டொலர்கள்

இரண்டு நாட்கள் மாநாட்டில் மூன்று நேர உணவுடன் பதிவு செய்து கொள்ள கீழேயுள்ள இணைப்பைப் பயன்படுத்தவும்.

**periyaricon22.ca** அல்லது **https://centreforinquiry.ca/international-humanism-conference-on-social-justice/**

மேலதிக தொடர்புகளுக்கு: +17083611998

மா.க. ஈழவேந்தன் அகவை 90 விழாவும்,

ஈழவேந்தன் எழுதிய செக்கிழுத்த, கப்பலோட்டிய தமிழன் வ.ஊ.சிதம்பரம் நூல் வெளியீடும்.

குறுந்தட்டு CD வெளியீடும்



அனைவரையும் பங்கு கொண்டு ஈழவேந்தன் அவர்களை வாழ்த்தியும்; அவர் எழுதிய நூலை பெற்றுச் செல்லுமாறும் தாழ்மையுடன் வேண்டுகிறோம். நடை பெறும் இடம்

காலம்:--
செப்டம்பர் 16, 2022 வெள்ளிக்கிழமை மாலை
நேரம்:--
5.00 தொடக்கம் - இரவு 9.00 வரை நடைபெறும்

Scarborough Event Centre
5637 Finch Ave East
Scarborough, ON

ஏற்பாட்டாளர்கள் தொடர்பு இலக்கம்
647-262-5587, 647-808-7766
647-783-3466, 1-613-854-3336

நீண்ட விடுதலைப் பயணத்தில் சளைக்காமல், ஓய்வின்றித் தமிழீழம் என்ற ஒரே குறிக்கோளுக்காக உழைக்கும் உன்னத விடுதலைப் போராளி, "புலிக் கிழவன்" ஈழவேந்தன் இனப்பற்றாளன், மொழிப்பற்றாளன், இன்றுவரை தமிழீழ தீவிர செயற்பாட்டாளன் தமிழீழ தேசியத்தலைவர் மீது இன்றுவரை தீவிரபற்றாளன். தமிழீழத் தேசியத் தலைவரின் இதயத்தில இடம் பிடித்த மாமனிதர்களில் ஈழவேந்தன் குறிப்பிடத்தக்கவர். தலைவரின் பணிப்பில் இந்தியா, கனடா, தென்னாபிரிக்கா மற்றும் மொறிசியஸ் நாடுகளுக்கும் சென்று அமைச்சர்கள், இராஜ தந்திரிகளைச் சந்தித்ததுடன், மொறீசியஸ் சென்று வெளியுறவுத்துறை அமைச்சர் மற்றும் இராஜதந்திர சந்திப்புகளை மேற்கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது விடயமாகும்.

அவரின் அகவை 90 விழாவில், ஈழவேந்தன் அவர்கள் எழுதிய இந்திய விடுதலைக்காக சிறை சென்று, சிறையில் செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன், வ.உ. சிதம்பரனார் என்ற நூலும் வெளியிடப்படும்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# திருகோணமலை மூதூர், மல்லிகைத்தீவு பிரதேசத்தில் "கௌரவமான அரசியல் தீர்வு" கோரி போராட்டம் முன்னெடுப்பு

“கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்” எனும் தொனிப் பொருளில் வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் 100 நாட்கள் நடைபெற உள்ள செயல் திட்டத்தின் 43 வது நாள் கவனயீர்ப்பு போராட்டம் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், மல்லிகைத்தீவு பிரதேசத்தில் திங்கட்கிழமை (12) காலை 10.30 மணி அளவில் இடம்பெற்றது.

இப் போராட்டமானது திருகோணமலை மாவட்ட பாதிக்கப்பட்ட மக்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பெண்கள் இணைந்து எமக்கு நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும்.




எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, என கோசங்களை எழுப்பியவாறு பேரணியாக வருகைதந்ததுடன் தங்களின் உரிமை கோரிக்கையினையும் முன்வைத்தனர்.

குறித்த நிகழ்வில் கிராம மட்ட அமைப்புகள், விவசாய, மீனவ சங்கங்கள், பெண்கள் அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள் மனித உரிமை ஆர்வலர்கள், வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் பணியாளர்களும் கலந்து கொண்டார்கள்.




குறித்த செயல் திட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்களால் 100 நாள் செயற்திட்டத்திற்கான பொது மகஜர் வாசிக்கப்பட்டது டன் வருகை தந்த பொது மக்களுக்கு அரசியல் தீர்வு திட்டம் மற்றும் 13 ஆம் திருத்த சட்டம் தொடர்பான சாதக பாதக விளைவுகள் தொடர்பாக தெளிவுபடுத்தல் வழங்கினார்.

அதே நேரம் அரசியல் தீர்வு விடயத்தில் மக்களின் கருத்துக்கள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பான கருத்துக்களும் உள் வாங்கப்பட்டது.

குறித்த போராட்டம் வடக்கு - கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் 100 நாட்கள் வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# தமிழ் அரசியல் கைதிகள் ஒவ்வொருவரிடமிருந்தும் அவர்கள் எந்தெந்தக் குற்றச் சாட்டுக்கள் சம்பந்தமாக தண்டனை அனுபவிக்கின்றார்கள் என்ற விபரத்தை பெறுங்கள்

## பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன் உறவினர்களிடம் கோரிக்கை



அரசியல் கைதிகள் ஒவ்வொருவரிடமிருந்தும் அவர்கள் எந்தெந்தக் குற்றச் சாட்டுக்கள் சம்பந்தமாக தண்டனை அனுபவிக்கின்றார்கள், அல்லது அவர்களுக்கு எதிராக வழக்குகள் பதியப்பட்டுள்ளன அல்லது தடை உத்தரவு பெற்றுள்ளார்கள் என்ற விபரங்களை எடுத்துத் தாருங்கள் என பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளைச் சந்திக்கச் செல்லும் உறவினர்களுடனான கலந்துரையாடல் சனிக்கிழமை (10) யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது.

இதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உங்கள் பயணம் எமது தமிழ் அரசியற் கைதிகளுக்கு ஒரு பிரகாசமான எதிர்காலத்தைக் கொடுப்பதாக என்று முதற் கண் வாழ்த்துகின்றேன்.

எனினும் அவர்களுக்கு நன்மைகள் உடனேயே கிடைத்து விடும் என்று எண்ணுவதைத் தவிருங்கள். காரணம், எவ்வளவு தான் ஜனாதிபதியானவர் எமக்கு உத்தரவாதங்களையும், உறுதி மொழிகளையும் தந்தாலும் அவர் இன்னொரு இனச் சார்புடைய கட்சியின் ஆதரவை எதிர்பார்த்தே இருக்கின்றார் என்பதை நீங்கள் மறந்து விடலாகாது.

அவர்கள் இவரைப் பாவிக்கின்றார்கள். இவர் அவர்களைப் பாவிக்கின்றார். இது தான் இன்றைய நிலை. இருந்தும் நாம் எமது கடமைகளைக் கட்சிதமாக நடத்திச் செல்ல ஆயத்தமாக வேண்டும்.

இதன் காரணத்தினால் நான் உங்களிடம் இருந்து சில விபரங்களை எதிர்பார்க்கின்றேன் என்பதைச் சொல்லி வைக்கின்றேன். மூன்று விடயங்களுக்கு நான் பதில்களை எதிர்பார்க்கின்றேன்.

ஒன்று, எமது சிறைக் கைதிகள் ஒவ்வொருவரிடமிருந்தும் அவர்கள் எந்தெந்தக் குற்றச் சாட்டுக்கள் சம்பந்தமாக தண்டனை அனுபவிக்கின்றார்கள் அல்லது அவர்களுக்கு எதிராக வழக்குகள் பதியப்பட்டுள்ளன அல்லது தடை உத்தரவு பெற்றுள்ளார்கள் என்ற விபரங்களை எடுத்துத் தாருங்கள்.

இரண்டு, தண்டனை பெறப்பட்டவர்களின் வழக்குகளில் எத்தனை பேர் வெறும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் குற்றவாளிகள் ஆக்கப்பட்டு தண்டனை பெற்றுள்ளார்கள், எத்தனை பேர் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்துடன் சேர்த்து வேறு சாட்சியங்களின் அடிப்படையிலும் குற்றவாளிகள் ஆக்கப்பட்டுள்ளனர், மற்றும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்களே இல்லாமல் வேறு சாட்சியங்களின் அடிப்படையில் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளார்கள் என்ற விபரங்களை எடுத்துத் தாருங்கள்.

மூன்றாவதாக, சிறையில் வாடும் ஒவ்வொரு தமிழ் அரசியல் கைதியும் தற்போது என்னென்ன குறைகளை, குறைபாடுகளை, பாதிப்புக்களை எதிர்நோக்கி உள்ளார்கள் என்பன பற்றிய விபரங்கள்.

இந்த விபரங்களை முன்வைத்து நீதியமைச்சருடன் நான் வேண்டுமெனில் பேச இருக்கின்றேன். ஆகவே கூடிய விரைவில் இந்த விபரங்களை எனக்கு எடுத்துத் தாருங்கள்.

திரு. கோமகன் போன்றவர்கள் இன்னொரு தகவலையும் எனக்குத் தர வேண்டும். அதாவது அசோக டீ சில்வா அறிக்கையானது நான் எவ்வளவு தேடியும் எனக்குக் கிடைக்கவில்லை. அதன் பிரதி எனக்கு வேண்டும். அதிலே கூறப்பட்டிருக்கும் 38 பேரும் 2019ம் ஆண்டுக்குப் பின்னர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் என்று அறிகின்றேன்.

அப்படியானால் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒருவர் கூட நாம் கொடுத்திருக்கும் 46 பேர்களில் அடங்க மாட்டார்களா என்ற விபரம் தேவை. தற்போது அந்த 38 பேரை விடுவிக்கலாம் என்ற கருத்து அரச தரப்பினர் இடையே மேலோங்கி நிற்பதாக அறிகின்றேன்.

அப்படியானால் பல வருட காலங்கள் சிறையில் வாடும் 46 பேருக்கும் எந்த வித நன்மைகளும் கிடைக்காமல் போய்விடுமா? இது பற்றி பேசுவதானால் மேற்குறிப்பிட்ட அசோக டீ சில்வா அறிக்கை என் கைகளுக்குக் கிடைக்க வேண்டும்.

திரு. கோமகன் போன்றவர்கள் அதற்கான உதவிகளைச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

நீங்கள் யாவரும் இன்று பாதுகாப்பாக கொழும்பு சென்று உங்கள் உற்றார் உறவினரைப் பார்த்து வர, இறைவன் உங்கள் ஒவ்வொருவருக்கும் நல்லாசி வழங்குவாராக!

அன்புடன் உங்கள் யாவருக்கும் விடை கூறி அனுப்புகின்றேன். என அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர்**

# காணாமல் போன உறவுகளுடைய புனித போராட்டம் வெற்றியளிக்க சர்வதேச விசாரணையே அவசியம்: செல்வம் அடைக்கலநாதன் MP



காணாமல் போன உறவுகளுடைய புனித போராட்டம் வெற்றியளிக்க வேண்டுமாக இருந்தால் அவர்கள் கோருகின்ற சர்வதேச விசாரணையே அவசியம் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், “ஐ.நா கூட்டத்தொடரில் எங்கள் சார்பாக சுரேன் குருசாமியை அனுப்பியிருக்கிறோம். அவர் ஏற்கனவே அங்கு சென்றிருக்கிறார்.

ஐ. நா தீர்மானத்தின் அடிப்படையிலே எங்களுடைய இன பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். காணாமல் போனவர்கள் உடைய உறவுகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுடைய புனித போராட்டம் வெற்றியளிக்க வேண்டுமாக இருந்தால் அவர்கள் கோருகின்ற சர்வதேச விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்பதே. ஐ.நா தீர்மானத்தை நடைமுறைப்படுத்த கின்ற ஒரு விளைவினை ஐ.நா சபை மேற்கொள்ள வேண்டும்.

அதிலே குறிப்பாக கூறப்பட்ட விடயம் நாங்கள் எங்களுடைய தேசிய கட்சிகளின் தலைவர்கள் கையெழுத்திட்டு அனுப்பியது என்னவென்றால், மனித உரிமை மீறல்களிலே சம்பந்தப்பட்ட முன்னாள் ஜனாதிபதியாக இருந்தாலும், யாராக இருந்தாலும் அவர்களை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை அளிக்க வேண்டும் என கூறி கையெழுத்திட்டு அனுப்பியிருக்கிறோம். இது முக்கியமான ஒரு விடயமாக இருக்கிறது.

அந்த வகையிலே புலம்பெயர்ந்த உறவுகளும் தங்களுடைய செயற்பாட்டிலே முனைப்போடு சேர்ந்து இணைந்து செய்து கொண்டிருக்கிறோம்.

இந்த விடயங்களை ஐ.நா இந்த கூட்டத்தொடரிலே ஒரு முடிவான முடிவாக எடுக்க வேண்டும். என்பதும் ஐ. நாவினுடைய, அதிலே இருக்கின்ற நாடுகளுக்கும் எங்களுடைய கோரிக்கைகளை நாங்கள் அனுப்பியிருக்கின்றோம்.

அங்கே வருகின்ற நாட்டவர்களை சந்தித்து எங்களுடைய பிரச்சினைகள் சம்பந்தமாக கூற இருக்கின்றோம். இலங்கை அரசாங்கம் தங்களுடைய செயற்பாட்டிலே இந்த ஒத்துழைப்பை வழங்க நாங்கள் தயாரில்லை என்று கூறியிருக்கிறார்கள்.

ஆகவே இந்தியா, அமெரிக்கா உட்பட ஏனைய ஐ.நா சபையினுடைய அங்கத்துவ நாடுகள் இனப்பிரச்சினை சார்பாக ஐ.நா எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆதரவை தர வேண்டும் என்பதும் ஆதரவை பெற முயற்சிகளை மேற்கொள்ளுவதுமாக தான் அங்கு நாங்கள் அனுப்பியிருக்கின்றோம்.

புலம்பெயர்ந்த உறவுகளோடு அது சம்பந்தமான செயற்பாடுகள் தொடர்ந்து நடக்கும்” என மேலும் தெரிவித்தார்.

கனடிய செய்திகள் Canadian News

## Canadian Tamil Congress Raised 50000 Dollars for Five Major Hospitals in SriLanka

# கனடிய தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் மாபெரும் நிதி சேர் நடைப் பயணம் வெற்றிகரமாக நடைபெற்றது

### இதன் மூலம் சேகரிக்கப்பெற்ற 50000 கனடிய டாலர்கள் இலங்கையில் உள்ள ஐந்து பிரதான வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும்

### கனடா உதயனுக்கு கனடிய தமிழர் பேரவையின் தலைவர் சிவன் இளங்கோ தெரிவிப்பு...

"இலங்கை அதன் வரலாற்றில் மிக மோசமான சமூக-பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் உள்ளது. ஒரு காலத்தில் வலுவான சுகாதார அமைப்பு வீழ்ச்சியை நெருங்குகிறது, நோயாளிகள் மின் பற்றாக்குறை, மருந்துகள் பற்றாக்குறை மற்றும் உபகரணங்கள் பற்றாக்குறை ஆகியவற்றால் ஆபத்தில் உள்ளனர்.



எனவே இந்த இடர் மிகுந்த காலப்பகுதியில் எமது கனடிய தமிழர் சமூகம் இணைந்து இந்த 50000 கனடிய டாலர்களை சேகரித்திருப்பது மகிழ்ச்சியைத் தரும் ஒரு விடயமாகும். இதன் மூலம் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தொடர்பாக தென்னிலங்கை மக்களுக்கும் ஒரு நல்ல செய்தியை நாம் தெரிவிப்பதாகவும் நான் கருதுகின்றேன்".

இவ்வாறு கடந்த 11-09-2022 அன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கனடிய தமிழர் நிதி சேர் நிகழ்வில் ஆரம்ப உரையாற்றிய கனடிய தமிழர் பேரவையின் தலைவர் சிவன் இளங்கோ தெரிவித்தார். நிகழ்வின் இறுதியில் கனடா உதயன் பிரதம ஆசிரியரோடும் சில முக்கிய தகவல்களைப் பகிர்ந்து கொண்டார்.















14வது வருடாந்த தமிழ் கனடிய நடைபயணம் செப்டம்பர் 11, 2022 அன்று ஸ்காபரோவில் உள்ள தொம்சன் ஞாபகார்த்த பூங்காவில் நடைபெற்றது. இந்த ஆண்டு நடைப்பயணத்தின் மூலம் திரட்டப்பெற்ற நிதி, இலங்கை முழுவதும் உள்ள தெர்தெடுக்கப்பெற்ற 5 மருத்துவமனைகளுக்கு உயிர் காக்கும் மருத்துவப் பொருட்களை வாங்குவதற்கு பகிர்ந்தளிக்கப்படும். மெற்படி தெரிவு செய்யப்பட்டுள்ள 5 மருத்துவமனைகள் பின்வருமாறு:

புற்றுநோய் வைத்தியசாலை - தெல்லிப்பளை
மாவட்ட பொது வைத்தியசாலை வவுனியா மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை
கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை - களுபோவில
மாவட்ட பொது வைத்தியசாலை - நுவரெலியா
Kalmunai General Hospital

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.

**புகைப்படங்கள்: கனடா உதயன், ஈசி 24 நியுஸ் மற்றும் ஐயா4 யு**


# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கிளிநொச்சி — பரந்தன் பகுதியில் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான போராட்டம் முன்னெடுப்பு

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான "மக்கள் குரல்" எனும் தொனிப் பொருளில் 100 நாட்கள் செயல்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் நடை முறைப் படுத்தப்பட்டுள்ள குறித்த செயல் திட்டத்தின் 44 வது நாள் கவனயீர்ப்பு போராட்டம் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டம் பரந்தன் பகுதியில் செவ்வாய்க்கிழமை (14) காலை 10.30 மணி அளவில் இடம்பெற்றது.






குறித்த நிகழ்வில் கிராம மட்ட அமைப்புகள், விவசாய, பெண்கள் அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள் மனித உரிமை ஆர்வலர்கள், வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் பணியாளர்களும் கலந்து கொண்டார்கள்.

குறித்த செயல் திட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்களால் 100 நாள் செயற்திட்டத்திற்கான பொது மகஜர் வாசிக்கப்பட்டது டன் வருகை தந்த பொது மக்களுக்கு அரசியல் தீர்வு திட்டம் மற்றும் 13 ஆம் திருத்த சட்டம் தொடர்பான சாதக பாதக விளைவுகள் தொடர்பாக தெளிவுபடுத்தல் வழங்கினார்.

அதே நேரம் அரசியல் தீர்வு விடயத்தில் மக்களின் கருத்துக்கள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பான கருத்துக்களும் உள் வாங்கப்பட்டது.

குறித்த போராட்டம் வடக்கு - கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் 100 நாட்கள் வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# மன்னார் பகுதியில் உள்ள மீனவர்கள் தொடர்ந்தும் பாதிப்பு — மாவட்ட மீனவ சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம்.ஆலம்



மன்னார் தீவு பகுதியில் முன் னெடுக்கப்பட்டு வருகின்ற காற்றாலை மின் உற்பத்தி கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மண் அகழ்வு காரணமாக மீனவர்கள் எவ்வாறான பாதிப்புக்களை சந்திக்கின்றார்களோ அந்த பாதிப்புகளையே மன்னார் ஓலைத்தொடுவாய் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட உள்ள இறால் வளர்ப்பு பண்ணையினாலும் மீனவர்கள் பாதிப்பை எதிர் நோக்குவார்கள் என மன்னார் மாவட்ட மீனவ சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் செவ்வாய்க்கிழமை (13) காலை 11 மணியளவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் வழங்கப்படுகின்ற பண்ணை வளர்ப்புக்கு குறிப்பாக கடலட்டை, மீன், இறால் வளர்ப்பு போன்றவற்றிற்கு வழங்கப்படுகின்ற அரச காணிகளாக இருந்தாலும் சரி, தனியார் காணிகளாக இருந்தாலும் சரி நாங்கள் ஏற்கனவே குறித்த வளர்ப்பு திட்டங்களுக்கு எதிரானவர்கள் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆனால் குறித்த வளர்ப்பு திட்டம் வழங்கப்பட்ட முறையில் நிறைய முறைக்கேடுகள் காணப்படுகின்றது. ஆரம்பத்தில் சீன கம்பனிகளுக்கு வழங்கப்படுவதாக கூறப்பட்ட விடயம் மீனவர்களின் எதிர்ப்பு காரணமாக குறித்த பகுதி மீனவர்களுக்கு குறித்த திட்டத்தை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதனை நாங்கள் வரவேற்கிறோம். குறிப்பாக மன்னாரில் இலுப்பைக்கடவை தொடக்கம் தேவன் பிட்டி வரையிலான சுமார் 200க்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகள் இன்று மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் இலுப்பைக்கடவை உள்ளிட்ட சில கிராமங்களில் மீனவ மக்களின் எதிர்ப்பு காரணமாக குறித்த நடவடிக்கை தடைப்பட்டுள்ளது.

அட்டை வளர்ப்பிற்காக வழங்கப்படுகின்ற காணிகள். மீனவர்கள் எதிர் காலத்தில் கடலை மட்டும் நம்பி இருக்காது கரை யோரங்களிலும் தமது வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு அமைவாக குறித்த பண்ணை திட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஆனால் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகவர்கள் யார்?, வெளிநாட்டு தலையீடுகள் இருக்கிறதா?, அல்லது வெளிநாட்டு கம்பெனிகள் உள் வாங்கப்பட்டுள்ளதா?, உள்ளிட்ட கருத்துக்கள் வெளியாகி உள்ளது.

கடலில் பிடிக்கப்படுகின்ற 75 கிராமுக்கு குறைவான அட்டைகளைப் பெற்று அதனை பண்ணைகளில் விட்டால் அந்த அட்டைகள் பெருகி உற்பத்தியாகும் என்பதில் உண்மை.

எனினும் அந்த அந்த கிராம மீனவர்கள் நலம் பெற வேண்டுமாக இருந்தால் அரசு குறித்த திட்டத்தை குறிப்பிட்ட கிராம மீனவர்களுக்கு வழங்க வேண்டும்.

மாறாக குறித்த திட்டத்தை வெளி மாவட்டத்திற்கு, வெளி நாடுகளுக்கும் வழங்குவதை நிறுத்த வேண்டும்.

மேலும் மன்னார் தீவு பகுதியை எடுத்துக் கொண்டால் இங்கு இடம் பெறுகின்ற நிறைய அபிவிருத்தி திட்டங்கள் என்ற போர்வையில் காற்றாலை மின் உற்பத்தி திட்டம், கனிய மண் அகழ்வு போன்ற விடையங்கள் இடம்பெற்று வருகின்ற போதும் எம்மால் அதற்கு எதிராக பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதற்கு அப்பால் மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, ஓலைத்தொடுவாய் பகுதியில் சுமார் 400 ஏக்கர் நிலம் இறால் வளர்ப்புக்கு என வழங்கப்பட உள்ளதாக அறிய முடிகின்றது.

வெளிமாவட்டத்தைச் சேர்ந்த தனியார் ஒருவருக்கு வழங்கப்பட உள்ளது. குறித்த காணி தனி நபருக்கு சொந்தமானது என கூறப்படுகிறது.

இத்திட்டம் நடை முறைப்படுத்தப்படுமாக இருந்தால் மன்னார் தீவு பகுதியில் அதிக நிலப்பகுதியில் கடல் நீர் உள் வாங்கப்பட்டு கடல் நீர் கிராமங்களில் வரும் நிலை ஏற்படும்.

காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதால் மீனவர்கள் எவ்வாறான இடர்களை சந்திக்கின்றார்களோ அந்த வகையில் குறித்த இறால் வளர்ப்பு பண்ணையினால் மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள்.

குறித்த திட்டத்தை யார் முன்னெடுத்தார்களோ அவர்கள் சிந்தித்து செயல்பட வேண்டும்.என தெரிவித்தார்.

மேலும் மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக வடமாகாண கடற்றொழில் இணையத்தின் செயலாளர் ஜீ.அன்ரனி சங்கர் கருத்துக்களை முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**



# இலங்கையின் முதலாவது தமிழ் கத்தோலிக்க ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் உருவச்சிலை

யாழ் மறைமாவட்டத்தின் முதலாவது சுதேச ஆயராக பணியாற்றிய ஆயர் அதிவண எமிலியானுஸ்பிள்ளை அவர்களின் உருவச்சிலை திறப்பு விழா நிகழ்வு 12ஆம் திகதி திங்கட்கிழமை காலை யாழ் புனித மரியன்னை பேராலய வளாகத்தில் நடைபெற்றது.

யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கலந்து சிறப்பித்த துடன் அமரர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் உருவச்சிலையை திரை நீக்கம் செய்து வைத்தார்.

யாழ் மறைமாவட்டத்தின் மூத்த குரு அருட்திரு இம்மானுவேல் அடிகளார் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் பணிகள் அடங்கிய நினைவுக் கல்லை திறந்து வைத்தார்.



அமரர் ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அவர்களின் மறைவின் 50 வது ஆண்டு நிறைவில் முன்னெடுக்கப்பட்ட இந் நிகழ்வில் குருக்கள், துறவிகள், இறைமக்களென பலரும் பங்கெடுத்தனர்.

# மன்னார் இராணுவ சோதனை சாவடியில் வைத்து அரசு பேருந்தில் கொண்டு செல்லப்பட்ட ஐஸ் போதைப் பொருள் மீட்பு





தலைமன்னாரில் இருந்து புதன்கிழமை (14) காலை 8.30 மணிக்கு கொழும்பு நோக்கி பயணித்த அரச பேருந்து மன்னார் பிரதான பாலத்தடியில் உள்ள இராணுவ சோதனைச் சாவடியில் வைத்து சோதனைக்கு உட்படுத்திய போது குறித்த அரச பேருந்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பல இலட்சம் ரூபாய் பெறுமதியான ஐஸ் ரக போதைப் பொருளை இராணுவத்தினர் மீட்டுள்ளனர்.

தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி பயணிகளுடன் பயணித்த குறித்த அரச பேரூந்து மன்னார் பிரதான பாலத்தடியில் நிறுத்தப்பட்டு இராணுவத்தின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன் போது குறித்த பேருந்தில் பதுக்கி வைக்கப்பட்ட சிறிய பொதியை சோதனையின் போது மீட்ட இராணுவத்தினர் குறித்த பொதியை சோதனை செய்தனர்.

இதன் போது குறித்த பொதியில் ஐஸ் ரக போதைப்பொருள் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை.

பல இலட்சம் ரூபாய் பெறுமதியான 250 கிராம் எடை கொண்ட ஐஸ் ரக போதைப்பொருள் இவ்வாறு மீட்கப்பட்டது. மீட்கப்பட்ட ஐஸ் ரக போதைப்பொருள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**- மன்னார் நிருபர்**

இலங்கை செய்திகள் Sri Lanka News

# சேதனப் பசளை உற்பத்தி என்ற போர்வயில் 49 ஏக்கர் செயற்றிட்டம் — காணி வழங்கலில் மோசடி!

## தவறுமேல் தவறிழைக்கும் பிரதேச செயலகம்!



முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குறப்பட்ட பகுதிகளில் சேதன பசளை உற்பத்திக்காக மரியாம்பிள்ளை இக்னேசியஸ் என்பவரினால் குத்தகை அடிப்படையிலான முறையில் காணி பிரதேச செயலகத்திடம் கோரப்பட்டிருந்தது.

இதேவேளை குறித்த செயற்றிட்டத்த்திற்காக பிரதேச செயலக மட்டத்திலான காணி பயன்பாட்டுகுழு கூட்டத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சிபார்சுக்காக முன்வைக்கப்படாமல், மாவட்ட மட்ட காணிபயன்பாட்டு குழு கூட்டத்தில் சிறாட்டிகுளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் மாவட்ட அனுமதி பெறப்பட்டு கிராம மட்ட அமைப்புக்கு தெரியாமல் கரும்புள்ளியான் பகுதியில் குறித்த செயற்றிட்ட நடவடிக்கைக்காக 2021.10.12 ஆம் திகதி மற்றும் 2021.11.09 ஆம் திகதிகளில் இரு கடிதங்கள் மூலம் பிரதேச செயலகத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.


குறித்த சம்பவம் பிரதேச மக்கள் வயற்காணி இல்லாமல் இருக்கும் சூழ்நிலையில் கிராம மட்ட அமைப்புக்களுக்கு தெரியாமல் கரும்புள்ளியான் பகுதியில் 49 ஏக்கர் காணி வழங்கப்படுகிறது என ஊடகங்களில் வெளியான செய்தியினை அடுத்து கரும்புள்ளியான் பகுதியில் பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட அனுமதி கடிதத்தை ரத்து செய்வதாகவும் சிறாட்டிக்குளம் கிராம உத்தியோகத்தர் பகுதியில் குறித்த செயற்றிட்டத்திற்காக அனுமதி வழங்கப்படுவதாகவும் மீளவும் ஒரு அனுமதி கடிதம் 2021.12.02 ஆம் திகதி சிறாட்டிக்குளம் பகுதியில் சேதன பசளை நடவடிக்கைக்கென வழங்கப்பட்டது.

இதேவேளை தற்போது எந்த ஒரு நடவடிக்கையும் குறித்த பகுதிகளில் இடம்பெறாத சூழலில் மீளவும் ஒரு கடிதம் 2022.08.25 ஆம் திகதி பொன்னகர் கிராம உத்தியோகத்தர் பிரிவில் 49 ஏக்கர் காணி மரியாம்பிள்ளை இக்ன்சியஸ் என்பவருக்கு இயற்கை பசளை உற்பத்திக்காக நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நில அளவை செய்து தருமாறு மாவட்ட நில அளவை திணைக்களத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாந்தை கிழக்கில் வயற்காணிகளே இல்லாத நிலையில் பல குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் பிரதேச செயலகம் இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்தி பிரதேச மக்களுக்கான காணிகளை வழங்கி விட்டு மேலதிகமாக இருக்கும் அரச காணிகளை இவ்வாறானதொரு செயற்பாட்டிற்கு வழங்குவது நன்மை பயக்கும் என கிராம மட்ட விவசாய அமைப்புக்கள் கவலை தெரிவிக்கின்றன.

இதேவேளை தனி நபர் ஒருவருக்கு மாந்தை கிழக்கின் குடியேற்ற உத்தியோகத்தரின் தனிப்பட்ட விருப்பின் பேரில் கரும்புள்ளியான் பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு அண்மையிலான காணி வழங்கப்பட்ட போதிலும் அவை முறையான அனுமதி பெறப்பட்டு வழங்கப்படவில்லை என்றும் ஏற்கனவே பிரதேச மட்ட காணி பயன்பாட்டு குழுவில் 02 ஏக்கருக்கான அனுமதி வழங்கப்பட்ட போதும் மாவட்ட மட்ட காணிப்பயன்பாட்டு குழுவில் களப்பரிசீலனை செய்து வழங்குவது குறித்து தீர்மானிக்கலாம் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்நது.

எனினும் கடந்த 2022.06.15 ஆம் திகதி வட மாகாண காணி ஆனையாளர் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பங்கு பற்றி இருந்த பிரதேச மட்ட விசேட காணி குழு கூட்டத்தில் மீண்டும் அவற்றுக்கான அனுமதிக்காக 02 ஏக்கர் குடியேற்ற உத்தியோகத்தரால் காட்சி படுத்தப்பட்டது என்றும் இரு கூட்டங்களிலும் 02 ஏக்கர் வீதம் மொத்தமாக 04 ஏக்கரையும் வழங்குவதற்கான பிராயத்தனத்தில் ஈடுபட்டுள்ளார் என்றும் அனுமதி வழங்கப்படாமலே 2 வருடமாக குறித்த காணியில் மேற்குறித்த செய்கையாளர் பயிர்ச்செய்கை நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் சொந்த வயல் காணயில் துப்பரவு செய்ய அனுமதி கேட்கும் குடியேற்ற உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளர் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களுக்கு ஆதரவாக இயங்குவதாகவும் குற்றச்சாட்டு தெரிவித்த அமைப்பினர் மேற்குறித்த செய்கையாளர்கள் தன்னிச்சையாக அரச காணிகளை துப்பரவு செய்யும் போது கரும்புள்ளியான் கிராம சேவகரும் பாராமுகமாக இருந்து குறித்த செயற்பாட்டுக்கு உடந்தையாக இருப்பதாக தெரிவித்த கிராம அமைப்புக்கள் உரிய அதிகாரிகள் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வயல் காணிகள் இன்றி இருக்கும் மக்களுக்கு காணிகளை குத்தகை அடிப்படையிலேனும் வழங்கிவிட்டு


பிரதேச செயலகம்
DIVISIONAL SECRETARIAT
மாந்தை கிழக்கு
MANTHAI EAST
Natural Fertilizer Product
M.Jepamayooran
Asst. Divisional Secretary
Divisional Secretariat
Marithai East


பிரதேச செயலகம்
DIVISIONAL SECRETARIAT
மாந்தை கிழக்கு
MANTHAI EAST
R.Ranjana
Divisional Secretary
Divisional Secretariat
Manthai East

மேலதிகமாக இருக்கும் காணிகளை வெளி நபர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதற்கும் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.




# ஜெனீவா கூட்டத்தொடரின் பின்னணியில் காங்கேசன்துறையில் இருந்து அம்பாந்தோட்டை வரை



- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

கடந்தக்கிழமை தொடக்கம் சுமந்திரனின் தலைமையில் தமிழரசு கட்சியானது பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக ஒரு தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறது. ஜெனீவா கூட்டத்தொடரின் பின்னணியில் முன்னெடுக்கப்படும் இப்போராட்டத்திற்கு "காங்கேசன் துறையில் இருந்து அம்பாந்தோட்டை வரை" என்று பெயரிடப்பட்டுள்ளது. பயங்கரவாதத் தடை சட்டத்திற்கு எதிராக யார் போராடினாலும் அதை ஆதரிக்க வேண்டும். எனினும், இப்போராட்டம் தொடர்பாக இப்போதுள்ள அரசியற் சூழலின் பின்னணியில் சில கேள்விகள் எழுவது தவிர்க்க முடியாதது.

கேள்வி ஒன்று, போராட்டத்தின் தலைப்புப் பற்றியது. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான ஆர்ப்பாட்டப் பேரணிக்குப் பின் அதே பாணியில் பெயரிடப்பட்ட மூன்றாவது போராட்டம் இது. P2P பேரணிக்கு நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்து வெவ்வேறு தரப்புகள் உரிமை கோருகின்றன. அதில் சுமந்திரன் சாணக்கியன் போன்றோரும் ஒரு தரப்பு. அந்தப் பெயர் தங்களுக்குரியது என்பதனை காட்டும் விதத்தில் மீண்டும் மீண்டும் சுமந்திரன் தான் ஒழுங்கு செய்யும் போராட்டங்களுக்கு இது போன்ற பெயர்களை வைத்து வருகிறார். தமிழக மீனவர்களுக்கு எதிராக அவர் தொடங்கிய போராட்டத்துக்கு முல்லைத்தீவில் இருந்து பருத்தித்துறைவரை என்று பெயரிட்டு இருந்தார். அதன்பின் இப்பொழுது காங்கேசன் துறையில் இருந்து அம்பாந்தோட்டை வரை என்று பெயரிடப்பட்டிருக்கிறது. அந்தப் போராட்டத்தலைப்பின் ஆங்கிலச் சுருக்கத்தை வெள்ளை எழுத்தில் கறுப்பு பட்டியில் பதித்து அப்பட்டியை தங்கள் தலைகளில் அணிந்து போராடுவது. இதுபோன்ற செயல்களின்மூலம் P2P போராட்டத்தின் உரித்து தமக்கே அதிகம் என்று சுமந்திரனும் அவரை சேர்ந்தவர்களும் சொல்ல முற்படுகிறார்களா?

கேள்வி இரண்டு, ஏற்கனவே பயங்கரவாதத் தடை சட்டத்திற்கு எதிராக கையெழுத்து சேகரிக்கும் ஒரு போராட்டத்தை சுமந்திரன் தலைமை தாங்கி முன்னெடுத்தார். யாழ். நகரப் பகுதியில் தொடங்கிய அந்தப் போராட்டம் தென்னிலங்கை, மாத்தறை வரை சென்றது. தென்னிலங்கையில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களும் அதற்கு ஒத்துழைத்தார்கள். அதில் சேகரிக்கப்பட்ட கையெழுத்துக்களுக்கு என்ன நடந்தது? அவை யாரிடம் கையளிக்கப்பட்டன? அந்தப் போராட்டத்தைப் போலவே இப்பொழுது தொடங்கப்பட்டிருக்கும் போராட்டமும் கமுக்கமாக முடிந்து விடுமா?

கேள்வி மூன்று, இந்தப் போராட்டம் தொடங்கிய அன்று கிட்டத்தட்ட 60-க்கும் குறையாத ஆட்களே அதில் பங்குபற்றினார்கள். அதாவது மக்கள் மயப்படாத ஒரு போராட்டம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பாக முஸ்லிம் கொங்ரஸ் தலைவர், தென்னிலங்கையில் போராட்டங்களை துணிச்சலாக முன்னெடுத்த தொழிற்சங்கவாதிகள் போன்றோர் பங்குபற்றிய ஒரு போராட்டத்தின் முதல் நாள் அன்று மிகக் குறைந்த ஆட்களே கலந்து கொண்டமை என்பது எதை காட்டுகிறது? அதை ஒரு மக்கள் மயப்பட்ட பெருந்திரள் போராட்டமாக முன்னெடுக்க வேண்டும் என்ற திட்டம் எதுவும் ஏற்பாட்டாளர்களிடம் இருக்கவில்லையா?

இந்த கேள்வியை மேலும் விரித்துச் செல்லலாம். சில மாதங்களுக்கு முன்புவரை கொழும்பில் காலிமுகத்திடலில் படைப்புத்திறனோடு எப்படிப் போராடலாம் என்பதற்கு சிங்கள மக்கள் பல முன்னுதாரணங்களை காட்டியிருக்கிறார்கள். படைப்புத்திறன் மிக்க அறவழிப் போராட்டம் அது. அந்தப் போராட்டத்தில் அடிப்படையான பலவீனங்கள் உண்டு. தமிழ்மக்களுக்கு அந்தப் போராட்டம் தொடர்பில் கேள்விகளும் உண்டு. ஆனாலும் அந்தப் போராட்டத்தில் படைப்புத்திறன் இருந்தது. புதுமை இருந்தது. அதில் பல பிரபல படைப்பாளிகள் பங்குபற்றினார்கள். புத்திஜீவிகள், சமூகப் பெரியார்கள், மதப் பெரியார்கள் பங்குபற்றினார்கள். எனவே அது சமூகத்தின் எல்லாத் தரப்பினரையும் ஒருங்கிணைக்கும் சக்தி மிக்கதாக காணப்பட்டது. கொழும்பில் ராஜதந்திரிகளின் வதிவிடங்கள் அமைந்திருக்கும் ஒரு பகுதியில் உலகத்தின் கவனத்தையும் ஊடகங்களின் கவனத்தையும் ஈர்க்கும் விதத்தில் அந்தப் போராட்டம் படைப்புத்திறனை வெளிப்படுத்தியது.

அப்போராட்டத்தால் அருட்டப்பட்டு மட்டக்களப்பில் காந்தி சிலையை சூழ்ந்த பகுதிகளில் ஒரு போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. மட்டக்களப்பைச் சேர்ந்த பெண்ணியச் செயற்பாட்டாளர்களும் ஏனைய சமூக செயற்பாட்டாளர்களும் இணைந்து நீதிக் கிராமம் என்று ஒன்றை உருவாக்கினார்கள். எனினும் அரகலய வெளிப்படுத்திய படைப்புத்திறனை தமிழ்க் கிராமம் வெளிப்படுத்தவில்லை. அதில் ஒப்பீட்டளவில் படைப்புத்திறன் குறைவாக இருந்தது. அது சமூகத்துக்குள் நொதிக்கத் தவறியது. அதுவும் மக்கள் மயப்படவில்லை.

தமிழ் பரப்பில் ஏற்கனவே அவ்வாறு மக்கள் மயப்படாத போராட்டங்கள் உண்டு. காணாமல் போகச் செய்யப்பட்டோருக்காக உறவினர்கள் நடத்தும் போராட்டம், அரசியல் கைதிகளுக்கான போராட்டம், காணிகளை மீட்பதற்கான போராட்டம் போன்ற பல போராட்டங்களும் ஒப்பீட்டுளவில் மக்கள் மயப்படாதவைதான். அரிதாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை அல்லது எழுத தமிழ் போன்ற சில போராட்டங்கள் மக்கள் மயப்படுகின்றன. மற்றும்படி தமிழ் பரப்பில் கடந்த *13 ஆண்டுகளில்* பெரும்பாலான போராட்டங்கள் மக்கள் மயப்படாதவைதான். போராட்டத்தின் நெருப்பை அணையவிடாமல் பாதுகாத்தோம் என்று கூறித் திருப்திப்படுவதைத்தவிர அதற்குமப்பால் அவை எந்த மக்களுக்கான போராட்டங்களோ அந்த மக்கள் மத்தியில் நொதிப்பை, திரட்சியை ஏற்படுத்தவில்லை என்பதே உண்மைநிலை.

இப்படிப்பட்டதோர் அரசியல் பின்னணியில்தான் காங்கேசன்துறையில் இருந்து அம்பாந்தோட்டை வரையிலுமான போராட்டமும் அதிகம் மக்கள் மயப்படாத ஒன்றாகவும் அரகலயவோடு ஒப்பிடுகையில் படைப்புத்திறன் அற்றதாகவும் காணப்படுகின்றது. ஆயின் மேற்படி போராட்டத்தை ஒழுங்குபடுத்தியவர்கள் அதுதொடர்பான பொருத்தமான மக்கள் தரிசனங்களைக் கொண்டிருக்கிறார்களா?

நாலாவது கேள்வி, சுமந்திரன் ஒரு நாடறிந்த வழக்கறிஞர். அரகலயவோடு தொடர்ச்சியாக தனது நெருக்கத்தை காண்பித்து வருபவர். அது சட்ட மறுப்பாக தோன்றிய ஒரு போராட்டம். அந்தப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் வன்முறைகள் வெடித்தன. அந்த வன்முறைகளுக்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லை என்று ஏற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் அரசாங்கமோ அப்போராட்டத்தை சட்டத்தின் தராசில் வைத்து நிறுக்கப் பார்க்கின்றது. அதனால்தான் போராட்டத்தின் முன்னணிச் செயற்பாட்டாளர்கள் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தவிடயத்தில் போராட்டத்தின் தொடக்கத்தில் இருந்து அந்தப்போராட்டத்திற்கு ஆசீர்வாதத்தை வழங்கிய சட்டத்தரணிகள் அமைப்பானது ரணில் விக்கிரமசிங்க போராட்டத்தை நசுக்கத் தொடங்கியபொழுது எதிர்பார்த்த அளவுக்கு எதிர்ப்பை காட்டவில்லை.


அதைவிட முக்கியமான ஒரு விடயம். சட்ட மறுப்பாக தோன்றிய ஒரு போராட்டத்தை சட்டத்தின் தராசில் வைத்து நிறுக்கும் அரசாங்கத்திற்கு அது தொடர்பில் எதிர்ப்பு எதையும் சட்டத்தரணிகள் சங்கம் பெரியளவில் காட்டவில்லை. சட்ட மறுப்பாக எழுச்சி பெற்ற ஒரு போராட்டத்தை சட்டக்கண் கொண்டு பார்த்தால், ஜனாதிபதியின் கதிரையில் அமர்ந்தது குற்றம். ஜனாதிபதியின் கழிப்பறைக்குள் நுழைந்தது குற்றம் ; நீச்சல் தடாகத்தில் குளித்தது குற்றம் ; அவருடைய சாப்பாட்டு மேசையில் உட்கார்ந்தது குற்றம் ; தன் படம் எடுத்தது குற்றம் ; என்று கூறி இருந்தால் குற்றம் ; நின்றால் குற்றம் உறங்கினால் குற்றம் ; தன் படம் எடுத்தால் குற்றம் என்று எல்லாரையும் தூக்கி உள்ளே போடலாம். அதுதான் இப்பொழுது நடக்கின்றது. இந்த விடயத்தில் அது சட்ட மறுப்பாக தோன்றிய ஒரு போராட்டம் அதனை சட்டத்தின் தராசில் வைத்து நிறுக்க முடியாது என்ற அடிப்படை கோட்பாட்டுப் பிரச்சினையை சட்டத்தரணிகள் எழுப்பினால் என்ன?

காந்தியின் அறவழிப் போராட்டத்தை சட்டத்தின் தராசில் வைத்துப் நிறுத்தால் காந்தி வாழ்நாள் முழுவதும் சிறையில்தான் இருந்திருக்க வேண்டும். அப்படித்தான் மார்ட்டின் லூதரையோ அல்லது போலந்தில் கொம்யூனிசத்திற்கு எதிராக போராடிய லெட் வலேசாவையோ அல்லது சில மாதங்களுக்கு முன்பு வேளாண் மசோதாவை எதிர்த்துப் போராடிய டெல்லி விவசாயிகளையோ எல்லாச் சட்டங்களின் கீழும் சிறையில் தள்ளமுடியும். எனவே சட்ட மறுப்பை சட்டத் தராசில் வைத்து நிறுக்க முடியாது என்ற அடிப்படையான கோட்பாட்டு விவகாரத்தை முன்வைத்து அரசாங்கத்தோடு மோத ஏன் மூத்த வழக்கறிஞர்கள் கூட்டாக முன் வரவில்லை?

ஐந்தாவது கேள்வி, இந்தப் போராட்டத்தை மக்கள் மயப்படுத்துவதற்கு முதலில் தமிழரசு கட்சி தனது உறுப்பினர்கள் தொண்டர்கள் மத்தியில் இது தொடர்பான தேவையான விழிப்பூட்டலை செய்திருக்கின்றதா? இது தொடர்பாக கட்சியின் உயர்மட்டத்தில் கூடி முடிவெடுக்கப்படவில்லை என்று ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கூறுகிறார். அது உண்மையா? அதனால்தான் அவர் இப் போராட்டத்தின் தொடக்க நிகழ்வில் பங்குபற்றவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

எனவே தொகுத்துப் பார்த்தால் ஒன்று தெரிகிறது. ஜெனிவா கூட்டத்தொடர் காலம் என்பது தமிழ்அரசியலில் ஒப்பீட்டளவில் அதிகரித்த ஜனநாயக போராட்டங்களுக்கான வாய்ப்புகளைக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டம் ஆகும். ஜநாவ-ின் கவனக்குவிப்புக்குள் இலங்கைத் தீவு வரும் ஒரு காலகட்டம் என்பதனால் அக்காலப் பகுதி-யில் தமிழ்மக்கள் ஒப்பீட்டளவில் அதிகரித்த போராட்டங்களை முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும். கடந்த 13 ஆண்டு கால தாயக மற்றும் புலம்பெயர் யதார்த்தம் அதுதான்.

பயங்கரவாத தடைச் சட்டம் என்பது இப்பொழுது இலங்கை தீவின் மூன்று இனத்தவர்களுக்கும் எதிராகத் திரும்பியிருக்கிறது. அதாவது இலங்கைத்தீவின் மூன்று இனத்தவர்களும் மத்தியிலும் உள்ள அரசியல் செயற்பாட்டாளர்களை ஒரு புள்ளியில் சந்திக்க வைக்கும் விவகாரமாக அது காணப்படுகிறது. இவ்வாறு மூன்று இனத்தவர்களையும் ஒன்றாக்கக்கூடிய ஒரு போராட்டத்தை, மக்கள் மயப்படுத்தவில்லை என்று சொன்னால் உலக சமூகத்துக்கு எப்படிப்பட்ட ஒரு செய்தி போய்ச் சேரும்?





# "மோடயாக்கள்" யார்? தமிழர்களா? சிங்களவர்களா?

- வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்

-மனித உரிமைப் பேரவையால் வீழத்தப்பட்டது என்ற பரபரப்புச் செய்திகளுக்கூடே சிங்கள தேசம் தலை நிமிர்ந்து நிற்கின்றது.

மனித உரிமை பேரவை இலங்கை குறித்து தமிழர் விவகாரத்துடன் காலத்துக்குக் காலம் அகல கால் வைத்துக் கொண்டு போகின்றது. அண்மைக் காலமாக

* உயிர்த்த ஞாயிறுபற்றி தனது நிகழ்ச்சி நிரல்களுக்குள் எடுத்துக் கொண்டது.
* பயங்கரவாத தடுப்புச் சட்டம் குறித்தும் இன்றுவரை பேசிக் கொண்டிருக்கின்றது.
* இப்பொழுது "அரகல" போராட்டம் மற்றும் போராட்டக்காரர்களை கைது செய்தல் தடுத்து வைக்கப்பட்டுள்ள போராட்டக்காரர்களின் விடுதலை குறித்தும் பேசுகின்றது.
* ஊழல்மிக்க அரச அதிகாரிகளுக்கு எதிராக சுயாதீன பக்கச் சார்பற்ற வெளிப்படைத் தன்மையுடன் கூடிய விசாரணை நடத்தி தண்டனை வழங்குதல்
* உள் நாட்டுப் பொறிமுறையில் சுயாதீனத்தன்மை வெளிப்படைத் தன்மை இல்லாமையினால் மனித உரிமை தொடர்பான வழக்கு விசாரணைகள் தொடர்ச்சியாகக் காலம் தாழ்த்தப்படுகின்றமையினால் மனித உரிமைகள் இழிவுபடுத்தப்படுகின்றது என்று கரிசனை காட்டுகின்றது.
* இராணுவமயமாக்கல்பற்றி சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு செவி சாய்க்காமைபற்றி குரல் எழுப்புகின்றது.
* ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறுப்பினர்கள் அச்சுறுத்தப்படுகின்றமைகுறித்தும் போசுகின்றது.
* மனித உரிமை மீறல்கள் அறவழிப் போராட்டக்காரர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம்குறித்தும் கவனம் செலுத்துகின்றது.
* இலங்கையில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி குறித்தும் பேசுகின்றது.
* அரசியல் விமர்சகர்களின் கருத்துப்படி ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சி நிரலையும் உள்ளடக்கி மஹிந்த ராஜபக்சக்களின் மீதான அழுத்தத்தை பிரயோகிப்பதற்கான நிகழ்ச்சிநிரலையும் உள்ளடக்கிக் கொண்டுள்ளது.

மொத்தத்தில் அமெரிக்க மேற்கத்தைய நிகழ்ச்சிநிரல்களுக்கேற்ப இந்த நாடுகள் ஜநா மனித உரிமை பேரவையை வழி நடத்திக் கொண்டிருக்கின்றன. இந்த மனித உரிமைப் பேரவையில் நம்பிக்கை வைத்த தமிழ் மக்கள் "இலவு காத்த கிளியாக" விரக்தியின் விளிம்பில் நிற்கின்றனர். அதாவது ஜநா மனித உரிமைப் பேரவையில் தமிழர் விவகாரம் பத்துடன் பதினொன்றாக உள்ளது என்று கூறுவதே சாலப் பொருந்தும்.

ஆனால் சிங்கள தேசம் மனித உரிமைப் பேரவையால் வீழத்தப்பட்டது என்ற பரபரப்புச் செய்திகளுக்கூடே தலை நிமிர்ந்து நிற்கின்றது.

இலங்கைக்கு எதிராக மனித உரிமைப் பேரவை வீறு கொண்டெழுந்து வீழ்த்திவிடும் என்ற பரபரப்புச் செய்திகளுக்கூடே நல்லாட்சி அரசாங்கம் மனித உரிமைப் பேரவை அரங்கில் நுழைந்து "தகர்ந்த போகும் வாக்குறுதிகளுடன் வரவில்லை" என முழங்கி பேரவையின் இணை அனுசரணையாளராகி வென்றது.

மீண்டும் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் இன்றைய பிரதமரான தினேஷ்குணவர்தனா பேரவை அரங்கில் நுழைந்து இணை அனுசரணையில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தார். இப்பொழுது உள்ளகப் பொறிமுறையில் மாற்றமில்லை என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி பேரவையில் முழங்கியுள்ளார். நாடு நெருக்கடிக்குள் சிக்கியுள்ள வேளையில் மீண்டெழ எந்தப் பேயுடனும் சரணாகதி அடைய தயாராக இருக்கும் ஒரு அரசாங்கம் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் முதலீடு கோரி கையேந்தி நிற்கும் அரசாங்கம் தமிழர் விவகாரத்தில் சமரசத்திற்கு இடமில்லை என்பதை ஆணித்தரமாக உணர்த்தி நிற்கின்றது.

அப்படியானால் யார் "மோடயா" சிங்களவர்களா?

"மோட்டுச் சிங்களவர்கள்" என தமிழர்கள் கூறுவது உண்மையா? சந்திரிகா அம்மையார் ஆட்சியில் இருந்தபோது தமிழர்களிடையே பிரபலமாக பேசப்பட்ட வார்த்தை இது.

இந்த "மோட்டுச்" சிங்களவர்கள்தான் இந்தியா உற்பட சர்வதேசநாடுகளுக்கும் தமது ராஜதந்திர நகர்வுகளின்மூலம் "இடியப்பம் தீத்திக்" கொண்டிருக்கின்றனர். சிங்கள ராஜதந்திரத்தின் முன் இந்த நாடுகளின் ராஜதந்திரம் தோற்றுப்போய் நின்ற பல பதிவுகளை உலக அரங்கில் இலங்கை பதிவு செய்துள்ளது.

இதற்குள் இந்தியாவும் விதிவிலக்கல்ல. இலங்கை குறித்த இந்திய ராஜதந்திரம் தோற்றுப் போனதன் விளைவு இந்தியா பக்கம் இன்று தமிழர்களும் இல்லை சிங்களவர்களும் இல்லை. இலங்கை அரசாங்கமும் இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது.

உண்மையில் "மோடயாக்கள்" தமிழர்கள்தான். குறிப்பாக தமிழ்த் தலைமைகளும் புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புக்களுமாகும். தமக்கிடையே ஒற்றுமை இன்மையால் தமிழினத்தின் வீடுதலை நோக்கிய பயணத்தை தடுத்து நிற்கும் தடைக்கற்களாக இந்தத் தமிழ்த் தலைமைகள் நிற்கின்றனர்.

சேர். போன் இராமநாதன் சேர். பொன் அருணாச்சலம் ஜிஜி. பொன்னம்பலம் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் முதலாக இன்றைய தமிழ்த் தலைமைகள்வரை சிங்கள இராஜதந்திரத்தின் முன்னால் தோற்றுப்போய் நிற்பவர்கள்தான் "சிங்களயோ மோடயா" என தமிழர் தரப்பால் கூறப்பட்டவர்கள்தான் தமிழ்த் தலைமைகளையே தோற்கடித்து நிற்கின்றனர். ஆனால் தமிழ்த் தலைமைகள் இந்தத் தோல்விகளில் இருந்து பாடங்கற்றதாக இல்லை.

மொத்தத்தில் இந்தத் தலைமைகள் ஒன்றிணைந்து ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் இயங்க முன்வரவேண்டும்.

இல்லையேல் தமிழ்மக்கள் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் சிவில் சமூகங்களுடன் இணைந்து புதிய தலைமையை நோக்கி நகர்வதன் மூலமே மாற்றத்தைக் கொண்டு வரமுடியும். தமிழினத்தின் தலை விதியை தீர்மானிக்க முடியும். எல்லாமே தமிழ் மக்களின் கைகளில்தான் தங்கியுள்ளது.


Email : vathevaraj@gmail.com

# இம்முறையும் வெற்றி பெற்று விடலாம் என்ற பாஜகவின் கனவு பலிக்காது என்கிறார் மம்தா பானர்ஜி

இந்தியா செய்திகள்
India News



வரும் 2024ஆம் ஆண்டு நடைபெறும் பாராளுமன்ற தேர்தலில் பாஜக இந்தியா முழுவதும் 100 இடங்களில் கூட வெற்றி பெறாது என மேற்கு வங்க மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார். கடந்த நாடாளுமன்ற தேர்தலில் 300க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற்ற பாஜக அதேபோல் இந்த முறையும் வெற்றி பெறலாம் என்று கனவு கண்டு வருகிறது என்றும் ஆனால் இந்த முறை அவர்களின் கனவு பலிக்காது என்றும் தெரிவித்துள்ளார். வரும் நாடாளுமன்ற தேர்தலில் நிதிஷ்குமார், ஹேமந்த் சோரன், அகிலேஷ் யாதவ் உள்பட பல தலைவர்கள் ஒன்றிணைய இருக்கிறார்கள் என்றும் அதனால் பாஜக 100 இடங்களில் கூட வெற்றி பெறுவது சிரமம் என்றும் அவர் தெரிவித்துள்ளார் பாஜக அரசு திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினரை பயமுறுத்தி இருக்கிறது என்றும் எத்தனை பேர்களை கைது செய்தாலும் எங்கள் கட்சி பாஜகவிடம் அடிபணியாது என்றும் அவர் தெரிவித்தார்.



# மருத்துவப் படிப்பு இல்லாவிடில் எத்தனையோ படிப்பு இருக்கு, தற்கொலை செய்து கொள்ளாதீர்

நீட் தேர்வில் தோல்வி அடையும் மாணவர்கள் தற்கொலை எண்ணத்தை கைவிட வேண்டும் என்று, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச்செயலர் வைகோ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், "சென்னை, சூளைமேடு பகுதியில் வசிக்கும் ஆட்டோ ஓட்டுநரான கிருஷ்ணமூர்த்தி என்பவரின் மகன் தனுஷ் கடந்த ஆண்டு நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தும் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை. இந்த ஆண்டு மருத்துவப் படிப்புக்கு நீட் தேர்வுக்கு தயாராகிக் கொண்டிருந்த நிலையில் மன உளைச்சலில், கடந்த ஜூன் மாதம் தன்னால் முடியவில்லை என்று குரல் பதிவு செய்து வைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

சென்னையை அடுத்த ஆவடி அருகே உள்ள திருமுல்லைவாயல் சோழபுரம் இந்திரா நகர் 2-ஆவது தெருவைச் சேர்ந்த அமுதா, ஆவடியை அடுத்த பாண்டேவரம் பகுதியில் உள்ள அரசு பள்ளியில் ஆசிரியையாக பணியாற்றி வருகிறார். இவரது மகள் லக்சனா சுவேதா, கடந்த ஆண்டு நீட் தேர்வு எழுதி, அதில் தோல்வி அடைந்தார். இதற்கிடையில் பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள பல்கலைக் கழகத்தில் மருத்துவம் தொடர்பான படிப்பை இணையத்தில் ஒன்றரை ஆண்டுகள் படித்து வந்தார்.

எப்படியாவது டாக்டர் ஆக வேண்டும் என்ற கனவோடு இருந்த லக்சனா சுவேதா, 2-ஆவது முறையாக கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற நீட் தேர்வை எழுதினார். தேர்வுக்கு பிறகு அவர் தனது தாயாரிடம் "நான் தேர்வை சரியாக எழுதவில்லை. மதிப்பெண்கள் குறைவாகத்தான் வரும் போல் இருக்கிறது" என்று கூறியுள்ளார்.

நீட் தேர்வு முடிவுகள் வெளியான நிலையில், இரண்டாவது முறையும் தோல்வி அடைந்ததால் மனம் உடைந்து தற்கொலை செய்து கொண்டார். திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியை அடுத்த வேலஞ்சேரி கிராமத்தை சேர்ந்த மணிவேல் என்பவரின் மகள் ஜெனி என்ற ஜெயசுதா, நீட் தேர்வில் குறைந்த மதிப்பெண் பெற்றதால் தற்கொலைக்கு முயன்றுள்ளார். நீட் நுழைவுத்தேர்வு திணிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டில், அரியலூர் அனிதா தொடங்கி கடந்த ஆண்டு வரை 20 மாணவர்கள் உயிரைப்போக்கி கொண்ட நிலையில், மாணவி லக்சனா சுவேதா தற்கொலை செய்து கொண்டது வேதனை தருகிறது. தமிழக அரசு சட்டமன்றத்தில் நிறைவேற்றிய நீட் விலக்கு சட்ட முன் வடிவுக்கு மத்திய பா.ஜ.க அரசு அனுமதி தராமல் அலட்சியப் படுத்தி வருவதால். தமிழ்நாட்டில் மாணவர்களின் தற்கொலைகள் தொடரும் துயரமாக உள்ளது. பா.ஜ.க அரசு இதில் வீண் பிடிவாதமாக இருப்பது கண்டனத்துக்கு உரியது. மத்திய அரசு நீட் விலக்கு சட்டமுன் வரைவுக்கு அனுமதி அளிக்க வேண்டும். நீட் தேர்வில் தேர்ச்சி அடைய வாய்ப்பு இல்லாமல் போன மாணவக் கண்மணிகள், தற்கொலை எண்ணத்தை கைவிட வேண்டும்.

மருத்துவப் படிப்பு இல்லாவிடில் இன்னும் எத்தனையோ படிப்புகள் உள்ளன. அவற்றில் தேர்வு செய்து பயின்று. வாழ்வில் உயர முயற்சிக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்".

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச சமூகமே நேரத்தை வீணடிக்காதீர் என்கிறார் காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்க செயலாளர் ஆ.லீலாதேவி



இலங்கையில் இடம்பெற்ற போர் குற்றங்கள் குறித்து உள்ளக விசாரணைகள் மீதோ அல்லது உள்ளக பொறிமுறைகள் மீதோ எமக்கு எந்த நம்பிக்கையும் இல்லை, போர் குற்றத்தில் ஈடுபட்ட அனைத்து குற்றவாளிகளும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும் என காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்க செயலாளர் ஆ.லீலாதேவி ஜெனிவாவில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தரப்பு இனியும் நேரத்தை வீணடிக்க வேண்டாம் என சர்வதேச சமூகத்திற்கு அழைப்பு விடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்தத்தில் பாதுகாப்பு தரப்பிடம் ஒப்படைக்கப்பட்ட தமது பிள்ளைகள், உறவுகள் குறித்து அவர்கள் இன்னமும் எதிர்பார்ப்புடன் உள்ளனர். அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும்.

அவர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். தமது வாழ்க்கையின் இறுதிக்கட்டத்தில் தமக்கான நாட்களை எண்ணிக்கொண்டுள்ள பெற்றோருக்கு செய்யக்கூடியது இதுவே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்தத்தில் 140க்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்தவர்கள் காணாமலாக்கப்பட்டுள்ளனர். அவர்களை நாம் இழந்துள்ளோம், இவர்களது உறவினர்கள் இறக்க முன்னர் எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றே நாம் சர்வதேச சமூகத்தை நாடுகிறோம்,

உண்மைகளை கண்டறிய உள்ளக பொறிமுறை உருவாக்கப்படும் என கூறி பல வருடங்கள் கடந்தும், கலப்பு நீதிமன்றங்களை கூட அமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழர் பிரதேசங்களின் சனப்பரம்பலை அழிக்கும் விதமான சிங்கள குடியேற்றங்கள் இடம்பெற்றுக்கொண்டுள்ளன. மறுபுறம் இராணுவ மயமாக்கல் மற்றும் நில அபகரிப்புகள் இன்றுவரை தொடர்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

ஐநா மனித உரிமைகள் பேரவையில் 'ஆயுத மோதலின் போதும் அதற்குப் பின்னரும் இலங்கையில் தமிழர் உரிமைகளுக்கான சர்வதேச சட்டப் பாதுகாப்பின் தோல்வி' என்ற தலைப்பில் ஜெனிவாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

# தாயகக் குழந்தைகளின் நல்வாழ்வில் குடும்பத்தையே அர்ப்பணித்த மருத்துவர் குகதாசன் ஐயா சிவனடி சார்ந்தார்





போற்றுதற்குரிய கண் சிகிச்சை நிபுணர் சிவபூமி அறக்கட்டளை பொருளாளர் மன விருத்தி தேவைப்பாடு குழந்தைகளின் நல்வாழ்வில் குடும்பத்தையே அர்ப்பணித்த மருத்துவர் குகதாசன் ஐயா சிவனடி சார்ந்தார். 2 தசாப்த்திற்கு மேலாக தனியொரு கண் நிபுணராக குடாநாட்டிற்கு அரும்பணி ஆற்றியவர். கண்தானத்தை ஊக்குவித்தவர். இவரது காலத்தில் போர் கால சூழ்நிலையில் எமது அப்பப்பா, அம்மம்மா இருவரது கண்களும் கண் பார்வையிழந்தோருக்கு கண் மாற்று சத்திர சிகிச்சை மூலம் பொருத்தப்பட்டதை நன்றியோடு நினைத்து பார்க்கின்றோம்.

மருத்துவர் குகதாசன் அவர்களது மறைவு குறித்து தனது அஞ்சலிக் குறிப்பில் திரு ஆறுதிருமுருகன் அவர்கள் பின்வருமாறு தெரிவித்துள்ளார்-

"உன்னத மருத்துவப் பணிக்கு மேலாக ஆரம்பித்த காலம் முதல் சிவ பூமி பணிகளிற்கு குறிப்பாக மனவிருத்தி தேவைப்பாடுடைய குழந்தைகளின் நல்வாழ்விற்கு தம்மையும் பாரியாரையும் குடும்பமாக அர்ப்பணித்து தம் உடல், பொருள், ஆவி ஈந்த உத்தமர் .

ஆரவாரமில்லாமல் மருத்துவப் பணியும் சிவப்பணியும் அறப்பணியும் ஒருங்கே ஆற்றிய உத்தமர் இறை சிவனின் நிழலில் பேரின்ப பெருவாழ்வு பெறட்டும். குடும்பதாரின் துயரில் பங்கேற்கின்றோம்."

மறைந்த மருத்துவர் குகதாசன் அவர்களது மறைவு குறித்து. அவரது உறவினர் வடகோவை வரதராஜனின் உருக்கமான நினைவுப் பதிவு.

குண்டு மழையிலும் தாய் நிலத்தை விட்டு இடம்பெயராது / புலம் பெயராது பல ஆயிரம் கண்களிற்கு ஒளி கொடுத்த மனிதம் சிவபூமி உன்னதங்களை தொட உழைத்த மருத்துவர் குகதாசன் மண்ணை விட்டு சிவனடியில் பேரின்ப பெருவாழ்வு பெற நிரந்தரமாய் விடைபெற்றார்.

போர் காலத்தில் இம் மண்ணிற்கு துறைசார் பலரும் விடை கொடுத்து சென்ற போதும் மண்ணையும் மக்களையும் நேசித்து பல்லாயிரம் கண்களுக்கு ஒளி கொடுத்தவர் வைத்திய நிபுணர் குகதாசன்.

மன நலம் குன்றிய பிள்ளைகளின் நல்வாழ்விற்காய் சிவபூமியுடன் தன் ஓய்வு கால வாழ்வை பாரியாருடன் குடும்பமாக முழுமையாக அர்ப்பணித்த மருத்துவ நிபுணர் குகதாசன் மக்கள் சேவையை மகேசன் சேவையாகக் கண்டு அன்பே சிவத்திற்கு உயிர் கொடுத்த உத்தமர்.

அவரது உறவினர் வடகோவை வரதராஜனின் உருக்கமான நினைவுப் பதிவு.

# "றொறன்ரோ மனித நேயக்குரல்" அமைப்பின் ஆதரவில் இலங்கை தெனியாய கலைமகள் சிறுவர் பாடசாலையின் வருடாந்த இரவு முகாம் கொண்டாடப்பட்டது









கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் "றொறன்ரோ மனித நேயக்குரல்" அமைப்பின் நிதி அன்பளிப்பில் இலங்கை தெனியாய கலைமகள் சிறுவர் பாடசாலையின் வருடாந்த இரவு முகாம் - **Night Camp-** கொண்டாடப்பட்டது

மாத்தறை மாவட்டம் தெனியாயகலைமகள் சிறுவர் பாடசாலையின் வருடாந்த இரவு முகாம்- பைோவ ஊயஅி நிகழ்வு.

இதன் பொழுது மாணவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் கொண்டாடப்பட்டதுடன் மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் பெற்றோர்களுடைய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது.

அத்துடன் சிறப்பு இரா போசன விருந்து உபசாரம் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஏராளமான பெற்றோர்கள் அபிமானிகள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டதுடன் சிறுவர் சிறுமியரொடு இணைந்து கலை நிகழ்சிகளை ரசித்தும் உணவருந்தியும் இல்லம் ஏகினர். இதற்கான ஏற்பாடுகளை சிறுவர் பாடசாலை நிர்வாகிகளும் ஆசிரியைகளும் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

*- தெனியாய செய்தியாளர் அமல்*


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல் | All Pain & Aches, Arthritis Asthma, Sinusitis, Rhinitis Allergies Stress, Migraine & All Types of Headaches Diabetes, Gastric Pain, Ulcer Menstruation Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்
Tel: (416) 754-4024
Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9


# ரொறன்ரோ "மதங்கசூளாமணி நாட்டியப் பள்ளி" மாணவிகள் பூங்கவி, பூந்தளிர் சகோதரிகளின் பரத நாட்டிய அரங்கேற்றம் சிறப்புற நடைபெற்றது













ரொறன்ரவில் நடன ஆசிரியை ஸ்ரீமதி ராஜநந்தினி லிங்கன் அவர்களின் நிர்வாகத்தில் இயங்கும் "மதங்கசூளாமணி நாட்டியப் பள்ளி " மாணவிகளும் திரு. திருமதி லிங்கன் தம்பதியின் புதல்விகளுமான பூங்கவி. பூந்தளிர் சகோதரிகளின் பரத நாட்டிய அரங்கேற்றம் கடந்த 03-09-2022 சனிக்கிழமையன்று ஸ்காபுறோ ஆர்மேனியன் இளைஞர் கழக மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது

அரங்கேற்றத்தின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை பொன்னையா விவேகானந்தன் அவர்களும் தாரணி லக்மவாசன் அவர்களும் இணைந்து தொகுத்து வழங்கானர்கள். அரங்கேற்ற நிகழ்வின் பிரதம விருந்தினராக பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலாநிதி சுப்பிரமணியம் சுதாகர் அவர்களும் அண்ணாமலை பல்கலைக் கழக பரதநாட்டிய விரிவுரையாளர் சூரியகலா ஜீவநாதன் அவர்களும் அழைக்கப்பெற்றிருந்தனர்.
அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த முனைவர் வெங்கடேஸ் நடராஜன் அவர்களும் செல்வி லக்சுமி சிவனேஸ்வரலிங்கமும் பாடல்களை இசைக்க திரு கார்த்திகேயன் ராமநாதன்-மிருதங்கம். முனைவர் தில்லை முத்துக்குமாரன் நடராஜன் அவர்கள் வயலினையும் அஜந்தி மதனாகரன் அவர்கள் புல்லாங்குழலையும் இசைத்து பக்கவாத்தியக் கலைஞர்களாக மேடையில் பிரகாசித்தார்கள்.
பக்கவாத்தியக் கலைஞர்களைப் போலவே அரங்கேற்றச் செல்விகள் இருவரும் மேடையில் தங்கள் உருப்படிகளை நேர்த்தியாக ஆடி சபையோரின் பாராட்டுக்களைப் பெற்றார்கள்.
பிரதம விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் ஆகியோர் அரங்கேற்றச் செல்விகளின் அன்னையும் குருவுமாகிய ஸ்ரீமதி ராஜநந்தினி லிங்கன் அவர்களின் கற்பித்தல் மற்றும் நடன அமைப்பு போன்றவற்றை விதந்துரைத்து செல்விகளின் அர்ப்பணிப்பான நடனங்களையும் ஒவ்வொரு உருப்படியையும் உற்சாகத்தோடு மேடையில் சமர்ப்பித்ததையும் பாராட்டி உரையாற்றினர்.

**- LJI ARJUNE**


**Sapphire Banquet & Catering**

---------------------------

**Specializing in Videography & Photography**

- Anniversary Party
- Family Get-together
- Birthday Party
- Graduation Party
- Bridal Shower
- Religious Ceremonies
- Engagement Party
- Wedding Showers - and more...

SHIVA SUBRAMANIAM
(647) 406-4868





உதயனின் பிரத்தியேகச் செய்தி

# திலீபனின் தியாகத்திலும் அரசியல் ஆதாயம் தேடப்படுகிறதா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**



இலங்கையில் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தில் "தியாகி திலீபனின்" உயிர்க்கொடை மிகவும் முக்கியமான மைல்கற்களில் ஒன்றாகும். அந்த விடுதலைப் போராடத்தை புரட்டிப் போட்ட சம்பவங்களில் அவர் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்தது காலத்தால் அழியாதது.

அவரது நினைவேந்தலே பல ஆண்டுகளாக சவால் நிறைந்த ஒன்றாக இருந்துள்ளது. இராணுவக் கெடுபிடிகள், அச்சுறுத்தல்கள், வகைதொகையற்ற கைதுகள் என்பது ராஜபக்சக்களின் ஆட்சியில் அன்றாட நடைமுறையாக இருந்தது. இப்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்டு "பின் வாசல் வழியாக" ஜனாதிபதியாக ராஜபக்சக்களின் "பினாமியாக" ரணில் ஆட்சி செய்து வந்தாலும், நினைவேந்தலுக்கு தடைகள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை. எனவே அவருக்குப் பெருந்திரளான மக்கள் வந்து அஞ்சலி செலுத்துவார்கள் என்கிற எதிர்பார்ப்பு இந்த ஆண்டு உள்ளது.

ஆனால், மிகவும் உணர்வுபூர்வமாக அனு'டிக்கப்பட ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் இந்த ஆண்டு புதிய சர்ச்சை ஒன்று எழுந்துள்ளது. அவரது தியாகத்தை அரசியலாக்கி அதில் ஆதாயத்தைப் பெற வேண்டாம் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். வடக்கு மாகாணத்தில் அரசியல் ரீதியாக எதிரும் புதிருமாகவுள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையேயுள்ள மோதல் மேலும் வெளிப்பட்டுள்ளதாகவே தோன்றுகிறது.

"தியாக தீபம்" திலீபனின் நினைவேந்தலில் அரசியல் பேசிய தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்டத்தரணி சுகாஸ' கண்டித்து, விடுதலைப்புலிகளின் மூத்த போராளிகளில் ஒருவராக இருந்த "பீர் காக்கா" என்று அறியப்படும் முத்துக்குமார் மனோகர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

நல்லூரில் இன்று (15) இடம்பெற்ற "தியாக தீபம்" திலீபனின் நினைவேந்தல் ஆரம்பிப்பதற்கு முன்னர் சட்டத்தரணி சுகாஷ் ஒலிபெருக்கி வாயிலாக அரசியல் கருத்துக்களைத் தெரிவித்தார். இதன்போது நினைவேந்தலில் கலந்துகொண்ட விடுதலைப்புலிகளின் மூத்த போராளியாக இருந்த பஷீர் காக்கா, நினைவேந்தல்களில் கட்சி அரசியலைக் கலந்து அவற்றின் புனிதத்தை மாசுபடுத்த வேண்டாம் எனத் தெரிவித்தார். இதனால் அங்கு சலசலப்பு ஏற்பட்டது. இதையடுத்து குறித்த விடயம் தொடர்பாக அறிக்கை ஒன்றையும் பஷீர் காக்கா வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், திலீபனின் நினைவேந்தல் மட்டுமல்ல எந்த நினைவேந்தல்களிலும் கட்சி அரசியலைக் கலந்து அவற்றின் புனிதத்தை மாசுபடுத்த வேண்டாம் என தயவுடன் வேண்டுகிறேன் - அனைத்து மாவீரர்களின் பெற்றோர் சார்பிலும் அறிவிழியின் தந்தையான முத்துக்குமார் மனோகர் (பஷீர் காக்கா) ஆகிய நான் வேண்டுகோள் விடுகிறேன் என்று மிகுந்த ஆதங்கத்துடன் அந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

"இந்த ஆண்டின் திலீபன் நினைவேந்தலின் ஆரம்ப நிகழ்வு தொடங்கும் முன்னர் பிறிதொரு அணியினரை சாடும் வகையில் சட்டத்தரணி சுகாஷ் உரையாற்றியமை எமக்கு வேதனையை உண்டாக்குகிறது. நேற்று இவர் சார்ந்த கட்சியின் ஏற்பாட்டாளரும் திலீபனை நேரில் கண்டவர்களில் ஒருவருமாகிய பொன் மாஸ்டரிடம் இந்நிகழ்வை பொதுநிகழ்வாக நடத்துவதில் உங்களுக்குள்ள சங்கடங்கள் என்னவென்று கேட்டேன். எதுவும் இல்லை என பதிலளித்தார். அது திருப்தி அளித்தது. அந்த நம்பிக்கையைச் சிதறடிக்கும் விதத்தில் சட்டத்தரணி சுகாஷ் இன்றைய தினம் (15) நடந்து கொண்டார். ஏற்கனவே மாவீரர் நாள் நிகழ்வுகளை ஏனைய கட்சிகளைத் தாக்கும் களமாகப் பயன்படுத்த வேண்டாம் என அக்கட்சியின் தலைவர் கஜேந்திரகுமாரை நேரில் சந்தித்து வேண்டுகோள் விடுத்திருந்தேன்".



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அதனை கடைப் பிடிப்பதாக தன்னிடம் உறுதியளித்தார், எனினும் கிளிநொச்சியில் நிகழ்ந்த மாவீரர்களின் பெற்றோருடைய கௌரவிப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பை சாடியமை பற்றி செய்தி பத்திரிகையில் வெளியான போது தான் மிகவும் வேதனைப்பட்டதாகவும் தனது அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

"அவ்வாறான நிலைமை மீண்டும் ஏற்படக்கூடாது என்பதற்காக பொன் மாஸ்டரை சந்தித்து உரையாடினேன். எனவே இவ்வாண்டு திலீபனின் நினைவு நிறைவடையும் வரைக்கும் அரசியலை கலக்காமல் ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு மன்றாட்டமாக அனைத்து கட்சிகளையும் கேட்டுக்கொள்கிறேன். எமது உணர்வுகளை எதிர்காலத்தில் மதிப்பார்கள் என நம்புகிறேன்" என்று தனது அறிக்கையில் உருக்கமாகக் கூறியுள்ளார்.

இதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான சீ.வி. கே. சிவஞானம் அஞ்சலி செலுத்த வந்தபோது "ஒற்றையாட்சியை ஏற்றவர்கள் எல்லாம் அஞ்சலி செலுத்துவதாக" சுகாஸ் தெரிவித்தபோது விடுதலைப் போராட்டம் இடம்லெற்ற காலத்தில் ஓடி ஒளித்த சுகாஸ் அதற்காக பல முனைப்பில் ஈடுபட்ட சீ.வி.கே.யை விமர்சிக்க தகுதியற்றவர் எனத் தெரிவித்ததோடு "தியாக தீபம்" திலீபனிற்கு இரண்டு தடவையும் இதே இடத்தில் நினைவுத் தூபியை அமைத்தவரே சீ.வி.கே தான் என்பதனை அறியாதவர் சுகாஸ் என அங்கு அஞ்சலி செலுத்த கூடியிருந்தவர்கள் எள்ளி நகையாடினர்.



மூத்த போராளிகளில் ஒருவரான பஷீர் காக்காவின் கருத்து தொடர்பில் தமிழத் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளரும் சட்டத்தரணியுமான சுகாஸை கனடா உதயன் சார்பில் தொடர்பு கொண்டு கேட்டபோது, "தியாக தீபம் திலீபனின் ஆரம்ப திகழ்வு இன்று ஆரம்பமானபோது ஒற்றையாட்சிக்கும் 13ஆம் திருத்தத்திற்கும் எதிராக உண்ணா நோன்பு இருந்து வீரச்சாவடைந்த திலீபனின் வழியில் பயணிப்போம் என நாம் கூறுவது எந்த வழியிலும் அரசியல் ஆகாது இது தமிழர்களின் அபிலாசையாகும். இதனை அரசியல் என்றால் இந்த அரசியலை தொடர்ந்தும் மேற்கொள்வோம்".

மேலும் "மூத்த போராளி பஷீர் காக்கா இவ்வாறான கருத்தை முன் வைப்பது ஒற்றையாட்சியினையும் 13ஐயும் ஏற்கும் தரப்புக்களை பாதுகாக்க முற்படுகின்றாரா என்ற நியாயமான சந்தேகம் எழுகின்றது, இது வேதனையான விடயம் என்றார்.

வீரச்சாவடைந்த திலீபனின் நோக்கத்தையடைய நாம் தொடர்ந்தும் பயணிப்போம் என சபதம் எடுக்கின்றோம் இது அரசியல் என்றால் அந்த அரசியலை மேற்கொள்வோம் என்றும் சட்டத்தரணியும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளருமான கனகரட்னம் சுகாஸ் உறுதிபட கூறினார்.

இதேநேரம் இந்த அரசியல் கூத்துகளின் மத்தியில் அதாவது முன்னணியின் இரு அணியினரின் போட்டி அரசியலின் மத்தியிலும். உணர்வுள்ள மக்கள் வருகை தந்து அஞ்சலி செலுத்திச் செல்கின்றனர்.

இந்திய அரசிடம் நீதி கோரி 5 அம்சக் கோரிக்கையை முன் வைத்து உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த தியாக தீபம் திலீபனின் 35 ஆம் ஆண்டு நினைவு உணர்வுபூர்வமாக இன்று தொடங்கி அனுசரிக்கப்படுகிறது.

திலீபன் 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் 12 நாள்கள் நல்லூர் வீதியில் உண்ணா நோன்பை ஆரம்பித்த அதே நேரத்தில் இன்று காலை நல்லூரின் பின் வீதியில் அமைந்துள்ள நினைவுத் தூபி இடத்தில் இந்த ஆண்டின் அஞ்சலி நிகழ்வு ஆரம்பமானது.

பிரதான சுடரேற்றலைத் தொடர்ந்து மலர்மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி இடம்பெற்றது. இதன்போது மாவீரர்களின் பெற்றோர், உறவுகள் மற்றும் மதகுருமார் பொதுமக்களுடன் அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். இந்த அஞ்சலி நிகழ்வை தொடர்ந்தும் 12 நாட்களும் முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில் அரசியல் சர்ச்சைகள் இடம்பெற்றுள்ளது பொதுமக்களிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனிடையே திலீபனின் நினைவேந்தல் யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான தூபி முன்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் பிரதான வாயில் முதல் தேசிய எழுச்சிக்கொடி கட்டப்பட்டு பிரதான தூபியில் மாணவர்களால் அமைக்கப்பெற்ற நினைவாலயத்தில் போரால் பாதிக்கப்பட்ட மாணவனால் பொதுச்சுடரேற்றப்பட்டு மாணவர்களால் ஈகை சுடரும் ஏற்றப்பட்டு தொடர்ச்சியாக தியாக தீபம் திலீபனின் உருவப் படத்திற்கு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.



இதன் பொழுது யாழ். பல்கலைக் கழக தமிழ் மாணவர்களுடன் இஸ்லாமிய சிங்கள மாணவர்களும் இம்முறை உணர்வுபூர்வமாக கலந்து கொண்டிருந்ததோடு மேலும் யாழ் பல்கலை கல்விசாரா ஊழியர்கள், யாழ் பல்கலை மாணவர் ஒன்றியத்தினர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இன்றைய இளைய தலைமுறையினர் அதிலும் புலம் பெயர்ந்த தேசத்தில் பிறந்தவர்கள் அறிந்துகொள்வதற்காக தியாகி திலீபன் முன் வைத்த 5 அம்சக் கோரிக்கைகள்.

* பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, இன்னமும் தடுப்புக்காவலில் அல்லது சிறைகளில் உள்ளோர் விடுவிக்கப்பட வேண்டும்.
* புனர்வாழ்வு என்ற பெயரில் தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள், உடன-டியாக நிறுத்தப்பட வேண்டும்.
* இடைக்கால அரசு நிறுவப்படும் வரை புனர்வாழ்வு என்று அழைக்கப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.
* வடகிழக்கு மாகாணங்களில், காவல் நிலையங்கள் திறக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
* இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில், ஊர்காவல் படை என அழைக்கப்படுவோருக்கு வழங்கப்பெற்ற ஆயுதங்கள் திரும்பப்பெறப்பட்டு, தமிழ் கிராமங்கள், பள்ளிக்கூடங்களில் குடிகொண்டுள்ள ராணுவ, போலீஸ் நிலையங்கள் மூடப்பட வேண்டும்.



விடுதலைப் புலிகளுடனான போர் முடிந்து 13 ஆண்டுகளானாலும், 35 ஆண்டுகளிற்கு முன்னர் திலீபன் முன்வைத்த கோரிக்கைகள் இன்றளவும் நிறைவேற்றப்படவில்லை என்பதே கசப்பான உண்மையாகும்.

# தமிழ்நாட்டில் ஈழத் தமிழர்களிற்கான வீடுகள் கையளிப்பு



தமிழ்நாட்டில் ஈழத் தமிழர்களிற்காக முதன் முறையாக அமைக்கப்பட்டுள்ள 321 தனியான வீட்டு வசதியை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

ஈழத் தமிழர் மறுவாழ்வு மையமாக திண்டுக்கல் மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கல் வீடுகளை அடங்கிய தொகுதியே இன்றைய தினம் (14) தமிழக முதல்வரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் முதல்முறையாக இலங்கைத் தமிழர்களுக்காக அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய மறுவாழ்வு முகாமை முதலமைச்சர் ஸ்டாலின் திறந்து வைத்தார். இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வந்துள்ள ஈழத் தமிழர்களுக்கு வேண்டிய உதவிகளை தமது அரசு தொடர்ந்து செய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் திருச்சிக்கும் மதுரைக்கும் இடையேயுள்ள திண்டுக்கல்லை அடுத்துள்ள



தோட்டனூர் என்னும் கிராமத்தில் இந்திய ரூபாய் 17 கோடியே 17 லட்சம் செலவில் கடந்த எட்டு மாத முயற்சியில் இந்த 321 தனி வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அமைக்கப்பட்ட வீட்டு வசதியில் உள்ள 321 தனி வீடுகளிற்கும், குடிநீர் வசதி, நூலகம், குளியலறை, பூங்கா, மைதானம், சாலைப் போக்குவரத்துடன் பாலர் பள்ளி, பொது மண்டபம் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன.

1983 ஆம் ஆண்டு முதல் ஈழத்தில் இருந்து தமிழகத்திற்கு செல்லும் அகதிகள் இலங்கை சுதந்திரம் அடைய முன்னர் மண்டபம் பகுதியில் அமைக்கப்பட்ட முகாம்களிலேயே தங்கவைக்கப்பட்டனர். அங்கே அடிப்படை வசதியற்ற நெருக்கடிக்குள்ளேயே தமிழக அரசு தங்க வைத்திருந்ததாகவும், நடமாட்ட சுதந்திரம் உள்ளிட்டவை மறுக்கப்படுவதாக பகிரங்க



குற்றச்சாட்டு நிலவி வரும் சூழலில் தற்போது தமிழக அரசு இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளது.

போர்ச் சூழல், இராணுவ கெடுபிடிகள், வகைதொகையற்ற கைதுகள், விசாரணையின்றி தடுத்து வைக்கப்படும் அச்சுறுத்தல், பொருளாதார நெருக்கடி போன்ற பல காரணங்களால் இந்தியாவிற்கு தப்பிச் சென்ற அகதிகளை பல்வேறு சிரமத்தின் மத்தியில் மீண்டும் தாயகம் அழைத்து வரப்படுகின்றபோதும் அவர்களிற்கான அடிப்படை வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து வாழ்வாதார ஏற்பாடுகளைச் செய்ய இலங்கை அரசு தவறிவிட்டது. தமிழர்கள் மீது, அதிலும் குறிப்பாக விளிம்பு நிலையில் இருப்பவர்கள் மீது இலங்கை அரசிற்கு எந்த கவலையும் கரிசனையும் கிடையாது என்று அனைத்து தரப்பாலும் கூறப்படுகின்றன.



தமிழகத்தில் இருந்து இலங்கை திரும்பிய அகதிகள் மீண்டும் தமிழகத்திற்கே தப்பிச் செல்லும் அவலமும் இடம்பெறும் சூழலில் தற்போதைய தமிழகந்தின் இந்த முயற்சி தமிழகத்தில் தங்கியுள்ள ஈழ அகதிகளிடம் வரவேற்பைப் பெறுவதனால் ஈழ அகதிகள் தாயகம் திரும்புவதனை மறு பரிசீலனை செய்ய வைக்கும் என்று மண்டபம் முகாமில் 11 ஆண்டுகளாக தங்கியுள்ள திருகோணமலையைச் சேர்ந்த தாய் கனடா உதயனிடம் ஒருவர் தெரிவித்தார்.

இதேநேரம் இந்தியாவில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களும் முகாம்களில் 10 ஆயிரம் குடும்பங்களும் உள்ள சூழலில் தற்போதுதான் 321 வீடுகள் மட்டுமே அமைக்கப்பட்டமை ஏதும் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்த மாட்டாது. மேலும் இவ்வாறான வீட்டு வாரியம் அமைத்தால் ஒருவேளை மக்களின் மனதில் ஈழத்திற்கு செல்லும் முடிவினை மறுபரிசீலனை செய்யக் கூடும் என மண்டபம் முகாமில் 9 ஆண்டுகளாக வாழும் மன்னாரைச் முதியவர் ஒருவர் கூறுகிறார்.

இதேநேரம் இலங்கை திரும்பியவர்களிற்கே வீட்டு வசதி கிட்டாத சூழலில் சகல அடிப்படை வசதியுடன் கூடிய வீட்டு வசதியினை எமது மக்களிற்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ள தமிழக முதல்வருக்கு எமது நன்றிகளை தெரிவித்தே ஆக வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவர் உதயனிடம் தெரிவித்தார்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# சிவில் சமூக செயற்பாட்டாளர்களை துன்புறுத்துவதை நிறுத்தக் கோரி கண்டன போராட்டம்




வடக்கு - கிழக்கில் மக்களுக்காக குரல் கொடுத்து வரும் மனித உரிமை மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களை துன்புறுத்துவதை நிறுத்தக் கோரியும்,குறித்த சம்பவங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு போராட்டம் புதன்கிழமை (14) காலை மன்னாரில் இடம் பெற்றது.



மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் புதன்கிழமை (14) காலை 10.30 மணியளவில் மன்னார் பஜார் சுற்றுவட்ட பகுதியில் குறித்த எதிர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இதன் போது போராட்டத்தில் சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கைதிகளின் உறவுகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், அரசியல் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மனித உரிமை செயற்பாட்டாளர்களை துன்புறுத்துவதை நிறுத்து, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய், இலங்கை அரசே பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கு, எமது நிலம் எமக்கு வேண்டும், கருத்துச் சுதந்திரம் எமது உரிமை உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

- மன்னார் நிருபர்

# ஹெரோயின் போதைப்பொருளுடன் நிந்தவூர் சந்தேக நபர் கைது

## கல்முனை அதிரடிப்படை விசாரணை



ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த சந்தேக நபர் கல்முனை விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து செவ்வாய்க்கிழமை (13) இரவு நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்கரை வீதியில் வைத்து விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் சந்தேக நபர் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் நிந்தவூர் 9 பகுதியை சேரந்த 36 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் சந்தேக நபர் வசம் இருந்து ஹெரோயின் போதைப்பொருள் 3 கிராம் 600 மில்லிகிராம் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சோதனை நடவடிக்கையின் போது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.சி வேவிடவிதான வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் எஸ். எம்.பி.பி.எம் டயஸ் தலைமையிலான பொலிஸ் சார்ஜன்ட்களான பண்டார (13443), வீரகோன் (33354), ராஜபக்ச (24812), பொலிஸ் கன்டபிள்களான சந்திரரட்ண (90669), நிமேஸ் (90699), சாரதி குணபால (19401) அதிகாரிகள் இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைது செய்தனர்.

பின்னர் கைது செய்யப்பட்ட நபர்கள் சான்று பொருட்களுடன் நிந்தவூர் பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.



# வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பாக மனு கையளிப்பு

இலங்கை விவகாரத்தில் வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு, வடமாகாண முஸ்லிம்கள் சார்பில் மக்கள் பணிமனை அமைப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.

ஜெனிவாவில் தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் 51 வது மனித உரிமைகள் கூட்டத்தொடர் இடம்பெற்று வருகின்றது.

இந்த கூட்டத் தொடரின் இறுதி தீர்மான அறிக்கையில், இலங்கையின் வடமாகாண முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்துமாறு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளருக்கு கோரிக்கைகள் அடங்கிய மனு கையளிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்துள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் கள அலுவலகத்தில் வைத்து ஐக்கிய நாடுகள் சபையின் யாழ்ப்பாண பிரதிநிதி காயத்திரி குமரனிடம் நேரடியாக இந்த மனுவை கையளித்துள்ளனர்.

மக்கள் பணிமனை தவிசாளரும், வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் செயலாளருமான சுபியான் மௌலவி மற்றும் அமைப்பாளர் ஏ.சி.எம். கலீல் ஆகியோர் இணைந்து குறித்த மனுவை நேற்று(14) கையளித்துள்ளனர்.

இதேவேளை, மனுவை பெற்றுக்கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் யாழ்ப்பாண பிரதிநிதி ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு அலுவலகம் மூலம் குறித்த மனுவை உடனடியாக ஜெனீவாவுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளார்.




# Carefirst Family Health Team

## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario


ACCREDITED WITH COMMENDATION — ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com




273 Elgin St 23, Brantford, ON.
$539,900
3 2
End unit townhouse in heart of Brantford, Brand new Kitchen w/ Quartz counter, new kitchen appliances, new vinyl flooring on the main, updated bathrooms, no carpet, and full basement partially finished. Great investment for future return and high rental area, minutes to Hwy 403, and all amenities.
CENTURY 21
PEOPLE'S CHOICE REALTY INC. BROKERAGE
Condo Townhouse
2-Storey
Uthayan Markandu
Real Estate Broker
(416) 818-5493
uthayan4realestate.com
New Kitchen And Appliances
Updated Bathrooms
New Paint


STEELES PODIATRY CLINIC
கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்
ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது
WE ACCEPT
• Extended Health Care
• Private - Work Insurance
• MVA - WSIB
• ODSP - Social Service
LIST OF SERVICES
• General & Diabetic Care
• Foot Pain Treatment
• Sports Medicine
• Surgical Procedures
• Custom-Made Orthotics
• Orthopaedic Shoes
• Compression Stockings
• Ankle - Knee - Back Braces
உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).
ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE
5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)


LOOKING FOR YOUR
Dream House?
Call SEYON
CHANDRAKUMAR
647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
RE/MAX
ROYAL PROPERTIES
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
BUYING | SELLING | INVESTING

# ஜெனிவா சென்றடைந்த அனந்தி சசிதரன், உள்ளிட்ட தமிழ் அரசியல்வாதிகள்:

உலக செய்திகள்
World News




ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 51 ஆவது கூட்டத் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், அங்கு நடைபெற உள்ள பக்க அமர்வுகளில் கலந்து கொள்வதற்காக இலங்கையில் இருந்து நான்கு தமிழ் அரசியல்வாதிகள் ஜெனிவா சென்றடைந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே. கோடீஸ்வரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அனந்தி சசிதரன், மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தியாகராஜா சரவணபவன் மற்றும் மாணவர் மீட்புப் பேரவையின் தலைவரும் சமூகச் செயற்பாட்டாளருமான செல்வராஜா கணேஷ் ஆகியோரே ஜெனிவா சென்றடைந்தனர்.

இது தொடர்பாக அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், "தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த மனித உரிமை மீறல்கள், இன அழிப்பு, அதற்குச் சமாந்தரமாக இடம்பெற்ற படுகொலைகள், இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கும் அநீதி, பாரபட்சம், புறக்கணிப்பு பற்றி நாங்கள் பல தடவைகள் கூறியிருந்தோம். அதற்கு உரிய நீதி கிடைக்க வேண்டும்.

இந்த நியாயமான கோரிக்கையை ஏலவே முன்வைத்து நீதி கேட்டு இருந்தோம். இதுவரைக்கும் அந்த நீதி தமிழ் மக்களுக்கு கிடைக்கவில்லை.

அதற்காக இம்முறை நீதி கோரி ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மாநாட்டு மண்டபத்துக்கு முன்பாக நாளை அனைவரும் கூடி கண்டன ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். அதேவேளை, பக்க அமர்வுகளில் கலந்துகொண்டு தமிழருக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும், படுகொலைகளுக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும் என்று ஒருமித்த குரலில் வலியுறுத்தவுள்ளோம்.

உலகத் தமிழர்கள் ஒன்று கூடுகின்ற ஜெனிவாக் களத்தை இம்முறை மேலும் பலமாக்கி எமது உரிமைகளை வென்றெடுக்கவே நாங்கள் இங்கு வருகை தந்திருக்கின்றோம்" என்றனர்.

மனித உரிமைகள் பேரவையின் 51வது அமர்வில் கலந்துகொள்வதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், காவிந்த ஜயவர்தன மற்றும் சட்டத்தரணி எரந்த வெலியங்கே ஆகியோரும் ஜெனீவா சென்றுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 51வது அமர்வு இன்று திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கையர்களுக்கு ஏற்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள் மற்றும் பொருளாதார நெருக்கடி குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கவலை அடைவதாக, தமது பயணத்திற்கு முன் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

# "ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் நாம் நல்ல செய்தி எம் மக்களுக்கு கிடைக்க வேண்டும்."

## வட-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதி ஜாட்சன் பிகிராடோ



வடக்கு-கிழக்கில் மக்களுக்காக குரல் கொடுத்து வரும் மனித உரிமை மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களை துன்புறுத்துவது மற்றும் அவர்களின் அலுவலகங்களை உடைத்து சேதப்படுத்தும் நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்பட வேண்டும் என வட கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதி ஜாட்சன் பிகிராடோ தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கில் மக்களுக்காக குரல் கொடுத்து வரும் மனித உரிமை மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களை துன்புறுத்துவதை நிறுத்தக் கோரியும், குறித்த சம்பவங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் புதன்கிழமை(14) காலை யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு - கிழக்கில் மக்களுக்காக குரல் கொடுத்து வரும் மனித உரிமை மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களை துன்புறுத்துவது மற்றும் அவர்களின் அலுவலகங்களை உடைக்கப்பட்டு, அலுவலகத்தில் உள்ள முக்கிய ஆவணங்கள் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

குறித்த சம்பவங்கள் குறித்து அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ் விடையங்களில் சர்வதேசம் எமக்காக குரல் கொடுக்க வேண்டும். வட கிழக்கில் வாழ்கின்ற மக்கள் கௌரவமான உரிமைகளுடன் வாழ வேண்டும். அதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

மக்களுக்காக குரல் கொடுத்து வரும் மனித உரிமை மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களை பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

அர வழி போராட்டக்காரர்களை கைது செய்து அவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தண்டிப்பது ஆபத்தான விஷயம். வடக்கு கிழக்கில் சுமார் 30 வருடங்களுக்கு மேல் பயங்கரவாத தடைச் சட்டத்தினால் பாதீக்கப் பட்டவர்களும் உள்ளனர்.

அவர்களின் வலியும், வேதனையும் எமக்குத் தான் தெரியும். எனவே பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும்.

சர்வதேசம் இதற்கு குரல் கொடுக்க வேண்டும். ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் நாம் எதிர் பார்க்கின்ற நல்ல செய்தி எம் மக்களுக்கு கிடைக்க வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளையும் நாம் வலியுறுத்தி குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தை நாம் முன்னெடுத்தோம். என அவர் மேலும் தெரிவித்தார்.



# திருக்கோணேஸ்வரர் ஆலயத்தைக் காக்க 3 முக்கிய தீர்மானங்கள்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்**



இலங்கையில் புகழ்பெற்ற ஈஸ்வரத் தலங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை வெளியார் ஆக்கிரமிப்பைத் தடுக்கவும் அதை எதிர்க்கவும் அகில இலங்கை இந்து மாமன்றத்தால் மூன்று முக்கிய தீர்மானங்கள் யாழ்ப்பாணத்தில் நிறைவேற்றப்பட்டது.

சைவசமய அமைப்புக்கள் ஒன்றுகூடி ஆராய்ந்து இந்த 3 தீர்மானங்கள் நிறைவேற்றின.

"தமிழர்களின் பூர்வீகச் சொத்தாக விளங்கும் திருகோணமலை திருக்கோனேஸ்வர ஆலயம் அமைந்துள்ள பகுதியில் திட்டமிட்டு சிங்கள வாணிப நிலையங்களை நிரந்தரமாக அமைப்பதற்கு அவசர ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது" என்று அந்த மாமன்றம் கூறுகிறது.

வலிந்த இந்த முன்னெடுப்பு குறித்து பலரும் அரசாங்கத்திடம் தமது எதிர்ப்பைத் தெரிவித்த போதிலும், திட்டமிட்டு அரசின் ஆதரவோடு திருகோனேஸ்வரச் சூழல் பறிக்கப்பட்டு வருகிறது என்றும், ஆலயத்திற்கு உரித்தான 18 ஏக்கர் நிலப்பரப்புக் காணிக்குள் தொல்லியல் திணைக்களமும், கிழக்கு மாகாண ஆளுநரும் கோவில் நிலத்தை அபகரிக்கும் செயற்பாட்டில் இறங்கியிருப்பதைவஹ் தடுக்க அனைவரும் ஒன்றுபட்டு எதிர்பினை தெரிவிக்க வேண்டுமென்று கோரி அகில இலங்கை இந்து மாமன்றம் இந்த கூட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது.

ஞாயிற்றுக்கிழமை (11) நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மூன்று தீர்மானங்கள்:

1) வடக்கு கிழக்கு உட்பட அணைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உடனடியாக திருகோணமலை மாவட்டத்தின் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் இருப்பை பாதுகாத்து அதன் நெருக்கடிகளைக் களைய ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேசி ஆவண செய்ய வேண்டும்.

2) திருக்கோணஸ்வர் ஆலயத்தில் இந்தியத் தூதரகத்தின் உதவியுடன் இராஜகோபுரம் அமைத்து அதைக் காத்தல் உள்ளிட்ட விடயங்களை உடனடியாக தூதரகத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்வது.

3) திருக்கோணேச்சரத்திற்கான யாத்திரையை ஊக்குவிப்பது.

சைவப் பெரியவர்கள், குருமார்கள், சிவில் சமூகத்தினர், ஆலய நிர்வாகிகள் உட்பட பலர் கலந்துகொண்ட இந்த கூட்டம் நல்லை ஆதீன குருமுதல்வர் தலைமையில் இடம்பெற்றது.

தொல்லியல் திணைக்களம் திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்திற்கு அளிக்கும் இடையூறுகளையும் அதையடுத்து ஆலயத்திற்கு எழுந்துள்ள நெருக்கடிகளும் அதற்கான தீர்வுகளும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

இந்த கலந்துரையாடலில் உரையாற்றிய கலாநிதி ஆர். திருமுருகன் தனது உரையில் திருகோஸ்ணேஸ்வரத்தை பாதுகாக்க அனைவரும் உடனடியாக செயற்பாட்டில் இறங்க வேண்டும் என்று அகில இலங்கை இந்து மாமன்றத்தின் கலாநிதி ஆறு. திருமுருகன் வலியுறுத்தினார்.

"திருகோணமலைக்கு என்ன பதில் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் குரல் எழுப்புவதனைத் தவிர இன்று வேறு மார்க்கம் இல்லை. இதுவே திருக்கேதீஸ்வரத்திலும் இடம்பெற்றது. அதன்போது அந்த மாவட்ட மக்கள் பிரதிநிதிகள்கூட வாய் திறக்கவில்லை. இது மதம் மட்டுமன்றி இனம் சார்ந்த அழிவிற்கும் இட்டுச் செல்லப்போகின்றது. திருக்கோணேஸ்வரச் செய்தி மூலம் திருமலையை அபகரிக்க எடுத்த சதிகள் அம்பலமாகியுள்ளது. நாம் எல்லாவற்றையும் ஜெனிவாவிற்கு கொண்டு போகின்றோம் என்பதும் யதார்த்தத்திற்குப் பொருத்தம் அற்றது. அதேநேரம் தொல்லியல் திணைக்களத்தின் அநியாயமும் சொல்லி மாளாத அளவிற்கு உள்ளது" என்று உருக்கமாக கூறினார்.




முக்கியமானதாகக் கருதப்படும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய கோணேச்சர ஆலய நிர்வாகத்தின் உப செயலாளர் அருண் "ஆலயத்தின் 1971-01-20 ஆம் திகதி வரைபடத்தின் பிரகாரம் தொல்லியல் திணைக்களமே வர்த்தமாணியில் 18 ஏக்கர் உண்டு, அதேபோன்று தீர்த்தக் கேணியில் 3 1/4 ஏக்கர் உண்டு என்றும் 2009 ஆம் ஆண்டின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்றும் 12 அடி அகலக் கோட்டை வாசல் ஊடாக பாதுகாப்புப் படையின் அனுமதி பெற்றே ஆலயத்திற்குச் செல்ல முடியும்" எனச் சுட்டிக்காட்டினார்.

கடந்த 2019ஆம் ஆண்டு ஜுன் மாதம் இடம்பெற்ற மாதாந்த கூட்டத்தில் மாவட்ட செயலக தீர்மானத்தின் அடிப்படையில் ஆலய சூழலில் உள்ள கடைகளில் 56 கடைகளை வேறு இடத்திற்கு மாற்ற நிதி இன்மை காரணம் காட்டப்பட்டது, அதேநேரம் புதிய கோபுரம் அமைக்கவும் தீர்மானித்தோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற கும்பாபிசேகத்தின் பிரதம குரு மகாலிங்கசிவ குருக்களும் இந்த கலந்துரையாடலில் பங்குபெற்று உரையாற்றினார்.

"கும்பாபிசேக காலத்தில் ஒரு பக்கேற் சீமேந்து கொண்டு செல்வதானால்கூட இராணுவ அனுமதி பெற வேண்டும். இது நான் கண்ணால் கண்ட செய்தி. எந்தப் பொருளிற்கும் விளக்கம் வேண்டும் அதற்கு அவர்களிற்கு திருப்தி இருந்தால் மட்டுமே அனுமதி கிடைக்கும். பாடல்பெற்ற தலத்தின் இன்றைய நிலையிது. பழம்பெரும் பொக்கிசத்தின் அவலம் இது" என்று மிகவும் வருத்தப்பட்டு மனம் கலங்கினார்.

சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தனும் அகில இலங்கை இந்து மாமன்றம் ஏற்பாடு செய்த இந்த கூட்டத்தில் பங்குபெற்றார். திருகோணேஸ்வரத்திற்காக பாடுபட்ட ஒரே அரசியல்வாதி திருச்செல்வம் மட்டுமே என்று கூறி, மற்றவர்களை மறைமுகமாகச் சாடினார்.



திருகோணேஸ்வரர் ஆலயம், அதன் சுற்றாடல் மற்றும் ஆலயத்திற்குச் சொந்தமான காணிகள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாக்க இந்தியாவின் உதவியை தன்னால் பெற்றுத்தர முடியும் என்று அவர் தெரிவித்தார்.

"கோணேச்சர இருப்பிற்கு நாம் நான்கு வழிகளில் முயல வேண்டும். நல்லூர் இன்று திகழ அன்று வழி ஏற்படுத்திய மாப்பாண் முதலியார் கொடி பிடித்துப் போராடவில்லை பேசியே அதனைச் சாதித்தார்". இலங்கையில் மற்ற சமயத்தினர் இந்துமத கோவில்கள் இடிக்கப்பட்டத்தை பற்றி வெளிப்படையாகப் பேசிக் கொண்டிருந்த போது இந்துக்கள் மௌனமாக இருந்தார்கள் என்று கூறிய அவர், இலங்கையில் இந்துக்களும் அவர்களது ஆலயங்களும் பாதுகாக்கப்பட இந்தியாவின் உதவியை நாட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்தியாவில் சுமார் 100 கோடி இந்துக்கள் உள்ளனர், அவர்களின் உதவியை இந்த விடயத்திலும் பெற முடியும் என்று மறவன்புலவு சச்சிதானந்தம் கூறினார். இந்தியாவில் தமிழர்கள் என்றால் பிரிவினை கோருபவர்கள் அல்லது ராஜீவ் காந்தியை கொன்றவர்கள் என்கிற எண்ணம் உள்ளது, ஆகவே இந்தியாவுடன் பேசும் போது இந்துக்கள் என்கிற வகையில் பேசி தமது கோவில்கள், அதனுடைய சொத்துக்கள், கலாச்சார மரபுகளைப் பாதுகாக்க உதவி கோர வேண்டும் என்றும் கூறிய அவர், அனைவரும் இணங்கினால் அதற்கான முயற்சியை இந்தியாவில் தன்னால் முன்னெடுக்க முடியுமென்றார்.

அவரை உரையாற்றிக் கொண்டிருக்கும் போது இடைமறித்த நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் இந்த விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசு அன்பாகப் பேசுவதில்லையே என்று விசனம் வெளியிட்டார்.

இலங்கையில் தொடர்ச்சியாக தமிழர்களின் பிரதேசங்களும், ஆலயச் சூழல்களும் தொல்லியல் பூமி என்ற போர்வையின் கீழ் வலிந்து பறிக்கப்படுகின்றன.


அண்மையில் முல்லைத்தீவு மாவட்டம் குருந்தூர் மலையிலுள்ள ஆதி சிவன் கோவில் மற்றும் அதன் சுற்றாடல்களை தொல்லியல் பூமி என்றும் அங்கு பௌத்தச் சின்னங்கள் காணப்படுகின்றன என்று கூறிய இலங்கை அரசு அங்கு இந்து பக்தர்கள் சென்று வழிபடுவதற்கு கடும் நிபந்தனைகளை விதித்து வருகிறது. கடந்த ஆண்டு அங்கு இராணுவத்தின் உதவியுடன் அகழ்வாராய்ச்சி பணிகள் வலிந்து முன்னெடுக்கப்பட்டு அங்கு பௌத்த விகாரை ஒன்று நிறுவப்பட்டது.



அதேபோன்று கடந்த ஆண்டு மார்ச் மாதம் சிவராத்திரியன்று முல்லைத்தீவு மூங்கிலாறு பகுதியிலுள்ள சிவன் கோவின் குருக்களை பொது முடக்கம் என்ற காரணம் காட்டி மிரட்டி பூசைகளைச் செய்யவிடாமல் தடுத்த சம்பவம் இடம்பெற்றது. புதிதாகக் கட்டப்பட்ட அந்த கோவிலின் இரண்டு குருமார்கள் மற்றும் அறங்காவலர் ஒருவர் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு நான்கு மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயம் கடந்த பல ஆண்டுகளாகவே அழுத்தங்களை சந்தித்து வருகிறது என்றும், ஆலயச் சூழல் போர்க்காலத்தில் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதி போன்றுள்ளது என்று உள்ளூர் பக்தர் குமாரசாமி சிவனருள் கனடா உதயனிடம் தெரிவித்தார். ஆலையத்தை அண்மித்த பகுதியில் நீண்ட காலமாக கடைவைத்து அதன் மூலம் தனது வாழ்வாதாரத்தை முன்னெடுத்த செல்வராணி, இலங்கை பாதுகாப்பு படையினரால் அண்மையில் தான் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டதாகவும், தமக்கு மாற்று இடத்தில் வாழ்வாதாரத்தை முன்னெடுக்க எந்த உத்தரவாதமும் அரச தரப்பால் வழங்கப்படவில்லை என்றார்.

திருகோணமலை கோவிலை பாதுகாப்பது குறித்த இந்த கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தர்மலிங்கம் சித்தார்த்தன், சிவஞானம் சிறீதரன் ஆகியோரும், மாகாண சபை உறுப்பினர்களும் பங்குபெற்றனர்.



அகில இலங்கை இந்து மாமன்றம்
ALL CEYLON HINDU CONGRESS
(Federation of Hindu Religious Associations and Trusts in Srilanka)
Head Office: No 91/5, Sir Chittampalam A Gardiner Mawatha, Colombo-02, Sri lanka.

10-09-2022.

திருக்கோணேஸ்வரத்தை ஆக்கிரமிப்பதற்கு எதிராக சைவசமய அமைப்புக்கள் ஒன்று கூடி தமது கருத்துக்களை வெளிப்படுத்தும் விசேட கூட்டம்.

காலம் - 11-09-2022 காலை 10.00 மணி

இடம் - அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பிராந்திய அலுவலக மண்டபம், கோவில் வீதி, நல்லூர்.

தமிழர்களின் பூர்வீகச் சொத்தாக விளங்கும் திருக்கோணமலை திருக்கோணேஸ்வர ஆலயம் அமைந்துள்ள பகுதியில் திட்டமிட்டு சிங்கள வாணிபநிலையங்களை நிரந்தரமாக அமைப்பதற்கு அவசர ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. இது குறித்து பலரும் அரசாங்கத்திடம் தமது எதிர்ப்பைத் தெரிவித்த போதிலும், திட்டமிட்டு அரசின் ஆதரவோடு திருக்கோணேஸ்வரச் சூழல் பறிக்கப்பட்டு வருகிறது. ஆலயத்துக்கு உரித்தான 18ஏக்கர் நிலப்பரப்புக் காணிக்குள் தொல்லியல் திணைக்களமும், கிழக்கு மாகாண ஆளுநரும் கோவில் நிலத்தை அபகரிக்கும் செயற்பாட்டில் இறங்கியிருப்பதைத் தடுக்க அனைவரும் ஒன்றுபட்டு எதிர்ப்பினைத் தெரிவிப்பதற்காக இக்கண்டனக் கூட்டம் கூட்டப்படுகிறது. சைவசமய அமைப்புக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் வேண்டுதல் விடுத்துள்ளது. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் அவர்களின் தலைமையில் திருக்கோணமலை கோணேஸ்வர ஆலய நிர்வாக சபையினர் உட்பட பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு அங்குள்ள இன்றைய சூழலை தெரியப்படுத்துவுள்ளார்கள்.

அகில இலங்கை இந்து மாமன்றம்
211/17, கோவில் வீதி,
நல்லூர்
யாழ்ப்பாணம்.

Regional Office
211/17, Temple Road, Nallur, Jaffna
Phone :- 021-222-1075 Fax: 021-221-7280
Email:- Hinducongressjaffna@gmail.com

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மன்னார் மாவட்டம் தொடர்பாக கதைக்க அருகதை இல்லை

## பாராளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன்

மன்னார் மாவட்டத்திற்கு என தனித்துவமான கலை கலாச்சாரம் உண்டு. எனினும் மன்னார் மாவட்டம் தொடர்பாக தரக் குறைவாக பேசுவதற்கு இராஜாங்க அமைச்சர் டயானா கமகே விற்பு எவ்வித அருகதையும் இல்லை எனவும், அவரது கருத்துக்கு கண்டனங்களை தெரிவித்துக் கொள்வதாக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் புதன்கிழமை (14) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், புதிதாக இராஜாங்க அமைச்சு வழங்கப்பட்ட இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மன்னார் மாவட்டம் தொடர்பாக கோபத்தை ஏற்படுத்தக்கூடிய கருத்தை ஊடகங்கள் ஊடாக தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தை ஓர் களியாட்ட இடமாகவும், குறிப்பாக தன்னை சிறு வயதில் கருவாடு காய வைப்பதற்கு மன்னாரிற்கு அனுப்ப உள்ளதாக தன்னை பயமுறுத்தி வளர்த்ததாகவும், அவர் கூறியுள்ளார். அவரது கருத்தை நான் வன்மையாக கண்டிக்கின்றேன்.

மன்னார் மாவட்டம் மிகவும் கலை, கலாச்சார பண்புகள், கடல் வளம், விவசாய வளம் அனைத்தோடு பொருந்தியதாக அமைந்துள்ளது.

தற்போது கல்வியில் தலை சிறந்து விளங்கி காணப்படுகின்றது. தற்போதைய உயர் தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் கடந்த காலங்களை விட இம்முறை உயர்ந்த பெறுபேறுகள் கிடைத்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் திருக்கேதீஸ்வரம், மடு திருத்தலம் ஆகிய இரு பழமை வாய்ந்த திருத்தலங்கள் உள்ளன.




எனவே மன்னார் மாவட்டத்தின் கலை கலாச்சார பண்புகள் தெரியாமல், இராஜாங்க அமைச்சர் டயானா கமகே ஊடகங்கள் முன் கதைப்பது கண்டிக்கத்தக்க விடயம் என்பதோடு, இப்படிப்பட்டவர்களுக்கு அமைச்சுப் பொறுப்பு வழங்கிய ஜனாதிபதி அதனை பரிசீலிக்க வேண்டும்.

குறித்த பெண் சில காலங்களுக்கு முன் பாராளுமன்றத்தில் கருத்தை முன்வைத்தார். நாட்டில் கஞ்சா வளர்ப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும். கொழும்பை இரவு நேர களியாட்ட வலயமாக மாற்ற வேண்டும் என்று பாராளுமன்றத்தில் பேசி இருந்தார்.

அவருடைய செயல்பாடுகள் தொடர்ச்சியாக இவ்வாறு இருக்கும் போது அவருக்கு இராஜாங்க அமைச்சு பொறுப்பு வழங்கியமை குறித்து ஜனாதிபதி பரிசீலிக்க வேண்டும்.என அவர் மேலும் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர்**

# பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி மன்னாரில் முன்னெடுக்கப்பட்ட ஊர்தி வழி போராட்டம்



பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் ஊர்தி வழி போராட்டமாக சென்று கையெழுத்து திரட்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் 5 வது நாளாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் புதன்கிழமை (14) மன்னாரில் இடம் பெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய வாலிபர் முன்னணியும், சர்வஜன நீதி அமைப்பும் முன்னெடுத்த கையெழுத்து திரட்டும் பிரச்சார நடவடிக்கையானது மன்னார் மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியின் செயலாளர் சட்டத்தரணி எஸ்.டினேசன் தலைமையில் மன்னார் நகர பேருந்து தரிப்பிடத்தில் இடம் பெற்றது.


இதன் போது மக்கள், அரசியல் பிரதிநிதிகள் கலந்து கொண்டு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை ரத்து செய்யக் கோரி கையொப்பமிட்டு தமது ஆதரவை வழங்கினர்.

**- மன்னார் நிருபர்**



சினிமா

# வசனம் எழுதிய பேப்பரை தூக்கி எறிந்த விஜய் சேதுபதி. அட்லி, ஷாருக்கான் படப்பிடிப்பில் அதிர்ச்சி



தமிழில் ராஜா ராணி, தெறி, மெர்சல், பிகில் ஆகிய திரைப்படங்களை இயக்கியவர் இயக்குனர் அட்லி. இவர் இயக்குனர் ஷங்கரின் சிஷ்யன் ஆவார். எனவே, அவரைப்போலவே பிரம்மாண்ட பட்ஜெட்டில் படங்களை இயக்கி வருகிறார். அதோடு, தான் என்னை நினைக்கிறோமோ அது மட்டுமே படத்தில் இடம் பெற வேண்டும் என நினைப்பவர். தற்போது ஷாருக்கான வைத்து பாலிவுட்டில் ஜவான் என்கிற திரைப்படத்தை இயக்கி வருகிறார். இதற்காக கடந்த 3 வருடங்களுக்கும் மேல் மும்பையில் தங்கியிருந்து அப்படத்தின் வேலையில் ஈடுபட்டு வருகிறார். இப்படத்தில் தீபிகா படுகோனே மற்றும் நயன்தாரா ஆகியோரும் முக்கிய வேடங்களில் நடித்து வருகின்றனர். மேலும், வில்லனாக விஜய் சேதுபதி நடித்து வருகிறார்.

இப்படத்தின் மூலம் விஜய் சேதுபதியை ஹிந்திக்கு இழுத்து சென்றுள்ளார் அட்லி. ஆனால், படப்பிடிப்பில் விஜய் சேதுபதி நடந்துகொண்ட விதம் பலரையும் முகம் சுளிக்க வைத்துள்ளதாம்.

ஒரு காட்சியில் இடம் பெற்ற வசனத்தை மாற்ற சொல்லி இருக்கிறார் விஜய் சேதுபதி. ஆனால், அதில் என்ன இருக்கிறதோ அதை மட்டும் விஜய் சேதுபதி பேச வேண்டும்.. வசனத்தை மாற்ற மாட்டேன் என அட்லீ கறாராக கூற, கடுப்பில் வசனம் எழுதியிருக்கும் பேப்பரை தூக்கி எறிந்திருக்கிறார் விஜய் சேதுபதி. இதைப்பார்த்து படப்பிடிப்பில் இருந்த தீபிகா படுகோனே உட்பட பலரும் அதிர்ச்சி அடைந்தனராம். அதன்பின் 4 மணி நேரம் படப்பிடிப்பு நடக்காமல், ஒருவழியாக இருவரையும் சமாதானம் செய்து படப்பிடிப்பு நடந்துள்ளது. இயக்குனர் சொல்வதை கேட்டு நடிப்பதுதான் நடிகரின் வேலை.. விஜய் சேதுபதி இதை புரிந்துகொள்ள வேண்டும் என திரையுலகினர் பேசி வருகிறார்கள்.

ஒரு கோப்பை
கொஞ்சம் தேநீர் - 135
***** ***** ***** *****

கவிஞர் தியாரூ

காக்கை வந்து உன்தலையில்
  கூடு கட்ட விடலாமா!
ஈக்கள் வந்து உன்மூக்கில்
  இருக்கை கொண்டால் சரிதானா!
நோக்கம் நம்மில் பெரிதானால்
  நடக்கும் யாவும் நலமாகும்!
தூக்கம் கண்ணில் பெரிதானால்
  தொடரும் கனவே வரவாகும்!

உனக்கு நீயே எடைக்கல்லாய்
  உன்னை நீயே எடைபோடு!
கணக்குச் சிறிதும் தப்பாது;
  கேள்வி வந்தால் விடைதேடு!
மணக்கும் தாழம் பூவிற்குள்
  பாம்பும் இருக்க வாய்ப்புண்டு!
உனக்கு நீயே ஒளியாகி
  வெற்றி வாழ்வின் வழிதேடு!



# இலங்கை பவுத்த நாடா? இலங்கைப் பவுத்தம் பற்றிய ஒரு விமர்சனப் பார்வை

- ரெஹான் பெர்னாண்டோ

(குறிப்பு - இலங்கையில் பவுத்தம் பற்றிய தவறான புரிதல் தமிழ்மக்களிடையே காணப்படுகிறது. பவுத்தம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் கிபி 9 ஆம் நூற்றாண்டுவரை தமிழகத்தில் பரவிச் செல்வாக்குப் பெற்றிருந்தது. காஞ்சிபுரம், உறையூர், வஞ்சி, மதுரை முதலிய நகரங்கள் பவுத்த கோயில்கள் இருந்தன. . பவுத்தம் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு பெருந்தொண்டாற்றியுள்ளது. ஐம்பெரும் காப்பியங்களில் மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி பவுத்த காப்பியங்களாகும். பவுத்த மதத்தின் வளர்ச்சிக்கு சங்கமித்திரர், நாதகுந்தனார், தர்மபாலர், போதிதருமர் போன்ற தமிழ்த் தேரர்கள் பெரும் தொண்டாறியிருக்கிறார்கள். சீனா நாட்டில் பவுத்தத்தைப் பரப்பியவர் போதிதருமர் ஆவர். இலங்கையில் காணப்படும் பவுத்தம், சிங்கள - பவுத்தமாகும். கடந்த நூற்றாண்டில் பவுத்த மதம் பற்றிய ஆய்வு நூல்கள் நூற்றுக் கணக்கில் வெளிவந்தன. பவுத்த மதத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள இந்த நூல்கள் துணைநிற்கின்றன.)

இலங்கை ஒரு பவுத்த நாடாக அறியப்படுகிறது. அதன் பாரம்பரியம் பல பவுத்த மரபுகளையும் பேசுகிறது. எவ்வாறாயினும், இலங்கை ஒரு நாடாக பவுத்தத்தின் உண்மையான தத்துவத்தை சொந்தமாக வைத்திருக்கிறதா அல்லது அதன் வெளித்தோற்றத்தில் அது பவுத்தம் என்று பாசாங்கு செய்கின்றதா என்பதை ஆராய இந்த கட்டுரை ஒரு விமர்சன மதிப்பீடாக இருக்கும்.

பவுத்தம் என்பது ஒரு வாழ்க்கை முறை. சத்யா (உண்மை) நோக்கி நம்மை அழைத்துச் செல்லும் வாழ்க்கை முறை. பவுத்தம் ஒருபோதும் ஒரு மதமாக கருதப்படவில்லை. அல்லது அப்படிக் கருத முடியாது. அதேசமயம் அது ஒரு தத்துவம். புத்தர் தனது வாழ்நாளில் எந்த மதத்தையும் உருவாக்கவில்லை. மாறாக, அவர் வாழ்க்கையின் முதன்மையான யதார்த்தங்களைப் பற்றிச் சிந்தித்து, நாம் விடுதலை அடையக்கூடிய பாதையைக் காட்டினார். கெட்டகாலத்துக்கு இலங்கை பவுத்தர்கள் மத வன்முறை மற்றும் மத மூடநம்பிக்கைகளைக் காட்டும் தவறான திருப்பத்தில் (ஒரு மூடநம்பிக்கை புராண வாழ்க்கை அமைப்பு) வாழ்கின்றனர். பவுத்தம் என்றால் என்ன என்பதை விளக்குவது அல்ல, இலங்கை எப்படி பவுத்தத்தைக் கையாண்டது என்பதை விமர்சனரீதியாக காட்டுவதே கட்டுரையின் நோக்கமாகும்.

புத்தரின் நடைமுறை

புத்தரின் நடைமுறை பற்றின்மை தவிர வேறில்லை. ஆகவே, நம் வாழ்வில் உள்ள தேவையற்ற பற்றுதல்கள், உண்மையான விடுதலையை அனுபவிக்க நமக்கு உதவாது. இது நாம் விரும்பிச் சுமக்கும் அடிமைத்தனம். பவுத்தத்தின் புனிதத்தின் ஆழமான மதிப்புகள் (சர தர்மம்) மிதமிஞ்சிய பற்றுதல்களின் வாழ்க்கையை நடத்த ஒருபோதும் நமக்குக் கற்பிக்காது. புத்த தம்மத்தைப் (அறநெ-றியை) புரிந்துகொள்வது இந்தச் சூழலில் மிகவும் முக்கியமானது. என் கருத்துப்படி, எல்லா மதங்களும் தோல்வியடைந்துவிட்டன. குறிப்பாக அதன் சடங்குகள், விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் மனித ஆசைகளுடன் எந்தத் தொடர்பும் இல்லை. எனவே, புனித நூல்களின் போதனைகளின்படி வாழ்வதற்கு நாம் ஒரு விருப்பத்தை உருவாக்க வேண்டிய தம்மம் (தர்மம் என்ற சொல்லுக்கு பிரா-கிருதம், பாலி இருமொழிகளிலும் தம்ம, தம்மோ என்றுதான் உச்சரிப்பு. தர்மம் என்ற சொல்லின் தமிழ் வடிவமே அறம் என்பது.)

கெட்டகாலமாக , இலங்கைப் பவுத்தர்களில் பெரும்பான்மையானவர்களுக்கு புத்தரின் நடைமுறை என்றால் என்னவென்று தெரியாது. புத்தரின் அடிப்படைப் போதனைகளை அவர்கள் சரியா-கப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அவர்கள் புத்தரை வணங்குபவர்களாகவே மாறிவிட்டனர். ஆனால் உண்மையாகப் பின்பற்றுபவர்கள் அல்ல. முதன்மையான தவறான கருத்து என்னவென்றால், இலங்கை வெறும் வழிபாட்டு தேசம் ஆனால் சிந்திக்கும் தேசம் அல்ல. இவ்வாறான நிலையில், உண்மையான பவுத்தத்தையும் அதன் செழுமையான தத்துவத்தையும் பிரதிபலிக்கவோ அல்லது புரிந்துகொள்ளவோ மக்கள் முயற்சி செய்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. இது நமது தொடக்கக் கல்வியில் நன்கு வெளிப்படுத்தப்பட்டு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். இலங்கைப் பவுத்தர்கள் தங்கள் அறியாமை, மத அடிப்படைவாதம் மற்றும் தேசியவாதம் ஆகியவற்றால் புத்த மதத்தை அழித்துள்ளனர். இந்த தேசத்தின் முக்கிய நோய்கள் இவைதான். இன்று குணப்படுத்த முடியாத புற்றுநோயாக மாறிவிட்டது.

பல்பொருள் அங்காடி- பவுத்த கோவில்கள்

புத்தர் தன்னைத் தானே வெறுமையாக்கும் வாழ்க்கையை நடத்தினார். அது அவருடைய விடுதலைக்கான நடைமுறை. நிரந்தரமான எதையும் அவர் கட்டியதில்லை. இன்று அப்படி ஒன்று நடந்தால் அது பவுத்தத்தின் அடிப்படை போதனைக்கு எதிரா-னது. இலங்கையில், பல்பொருள் அங்காடியாக மா-றிய பல புத்த கோவில்களை நாம் காண்கிறோம். கோவில்கள் கட்டப்படும் சொத்துக்கள், ஆயிரமாயிரம் கட்டிடங்கள், வண்ணமயமான ஒளி அமைப்புகள், கவர்ச்சிகரமான புத்தர் சிலைகள், விலையுயர்ந்த பொருட்கள் மற்றும் பல. இந்தப் பொருட்கள் ஒரு பல்பொருள் அங்காடியை நமக்கு நினைவூட்டுகின்றன. இதனால் பவுத்த கோயில்கள் வழிபாட்டிற்கான இடமோ அல்லது புத்த மதத்தைக் கடைப்பிடிப்பதற்கான ஒரு அழகான இடமோ அல்ல. உண்மையான பவுத்தத்தை நாம் உணர்ந்திருந்தால் ஆலயம் எளிமையாக இருக்க வேண்டும். எளிமையாக இருக்கும் இடம் அரண்மனை நிலைக்குச் சென்றால், அதில் ஏதோ பெரிய தவறு இருக்கிறது.

பெரும்பாலான பவுத்த தேரர்கள் பல்பொருள் அங்காடி உரிமையாளர்களாக வாழ்கிறார்கள் - புத்தரின் சீடர்களாக அல்ல. எடுத்துக்காட்டாக, அவர்கள் நாளாந்த உணவுக்காகப் பிச்சை எடுக்க வேண்டும். இதுதான் பண்டைய பாரம்பரிய வாழ்க்கை முறையாகும். மாறாக, இன்று இலங்கைத் துறவிகள் தங்கள் அன்றாட உணவுக்கான பட்டியலை (கிராம மக்களுக்கு) அனுப்புகிறார்கள். அவற்றைச் சாதாரண மக்கள் வழங்குகிறார்கள். இந்த வகையான வாழ்க்கை முறையானது, சித்தார்த்தாரின் சுய-வெற்று நடைமுறை வாழ்க்கை முறைக்கு எதிரானது ஆகும். இலங்கைப் பவுத்த பிக்குகள் நிரந்தர அரண்மனை போன்ற மாளிகைகளில் வாழ்கிறார்கள். ஆக பவுத்த கோயில்கள் கள்ளச் சந்தைகள் போல் மாறிவிட்டன. சுயமறுப்பு வாழ்க்கைக்குப் பதிலாக, அவர்கள் சுயஆதாய வாழ்க்கையை நடத்துகிறார்கள். இது பவுத்தம் எப்படிச் சிதைக்கப்பட்டுவிட்டது என்பதைக் காட்டுகிறது.

இலங்கையில் உள்ள பவுத்த கோவில்கள் மெத்தா, கருணா, முதிதா மற்றும் உபேக்கா (அன்பான கருணை, பரிவு), இரக்கம் மற்றும் பரோபகார இன்பம்) ஆகியவற்றைக் காட்டுவதில்லை. இவை பவுத்தத்தின் முக்கிய இயக்க சக்திகள் ஆகும். அவை நம் நல்வாழ்வுக்கு வழிகாட்டுகின்றன. சமசீர் மற்றும் உடல் நலமான ஆன்மிக வாழ்வைப் பேணுவதற்கான பவுத்தத்தின் சாரத்தை பன்சில் (ஐந்து கட்டளைகள்) மேலும் காட்டுகிறது.



துறவிகள் இந்த முதன்மைப் போதனைகள் மற்றும் நடத்தைகள் மூலம் வாழ்க்கைக்கு பொருள் கொடுக்க வேண்டும். கெட்டகாலத்துக்கு, அவர்கள் தங்கள் நலனில் மட்டுமே அக்கறை கொண்டுள்ளனர். அதனால், கோவில்கள் கறுப்புச் சந்தையாக மாறிவிட்டன. சுயமரியாதை வாழ்க்கைக்குப் பதிலாக, அவர்கள் சுயலாப வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

தன்னலமற்ற தன்மையின் அடையாளம் ‘போதி’ மரம்

போதி மரம் (இலங்கையில் அரசமரம்) மிகவும் பிரபலமானது. இதனை இலங்கையின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் காணலாம். ஆனால், இந்த மரத்தின் செய்தியை நாம் உணர்ந்திருக்கிறோமா என்பது மிகப்பெரிய கேள்வி ஆகும். புத்தர் இந்தப் போதி மரத்தின் கீழ் வாழ்க்கையின் பல உண்மைகளை அறிந்து கொண்டு இறுதியில் நிர்வாணத்தை அடைந்தார். இது சுயநலமற்ற மற்றும் வெறுமையின் அடையாளம ஆகும். .

ஆனால், இந்த நாட்டில் குறிப்பாக கோவில்களில் நாம் பார்ப்பது, தங்க வேலிக-ளால் கூட அலங்கரிக்கப்பட்டு மூடப்பட்டிருக்கும் ஒரு மரத்தைத்தான். ஒரு விதத்தில் இது மிகவும் விசித்திரமாகத் தெரிகிறது, மறுபுறம், போதி மரத்தைப் பார்ப்பதில் ஊக்குவிக்கப்பட வேண்டிய ஆன்மீகம் இதுவல்ல. சீலம், சமாதி மற்றும் ப்ரக்ஞை (அறநெறி, சிந்தனை, விழிப்புணர்வு) ஆகியவற்றைப் பிரதிபலிக்க இந்த மரம் ஒரு அடையாளமாக இருக்கலாம். இது பவுத்தர்களின் விடுதலைக்கான வழி.

ஆனால் இந்த அடிப்படை ஆன்மீகத்தை இலங்கையில் எங்கே காணலாம்? பவுத்த மதம், சடங்குகளை நிறைவேற்றுதல், வழிபாடு, பாசாங்கமான புனிதம் என்று மக்களின் பாசாங்குக்கு வெறும் அடையாளமாகவே போதி மரம் இருந்து வருகிறது. உண்மையான புனிதம் என்பது சுய-வெறுமை

வாழ்க்கை மற்றும் தன்னலமற்ற தன்மையிலிருந்து வருகிறது.

பவுத்தம் மதத்திற்கு ஆதரவானதா அல்லது மதத்திற்கு எதிரானதா?

இது மிகவும் சச்சரவுக்குரிய தலைப்பாகும். ஆனால் அதைப் புரிந்துகொள்வது சிக்கலானது அல்ல. பவுத்தம் எந்த மதத்தையும் மறுக்கவில்லை. இங்கே, பவுத்தம் என்பது ஒரு தத்துவம், ஒரு வாழ்க்கை முறை, மற்றும் ஒரு விடுதலைக்கான நடைமுறை ஆகும். பவுத்தத்தை மதச் சூழலுக்குப் பயன்படுத்துவதில் மிதமிஞ்சிய சிக்கலை உருவாக்கியவர்கள் கல்வியறிவற்ற இலங்கையர்களே. அவர்கள் தங்கள் சொந்த நலனுக்காக ஒரு பாசாங்கு ஆன்மீகத்தை முன்வைத்துள்ளனர். அது பவுத்தத்தின் விடுதலை நடைமுறையல்ல. எடுத்துக்காட்டாக, புத்த கோவில்களில் இந்துக் கடவுள்கள் மற்றும் தெய்வங்களின் சிலைகள் உள்ளன. உண்மையான பவுத்தத்தில் இதற்கு இடம் உண்டா? பணம் சம்பாதிப்பது ஒரு சிறந்த வணிகப் போக்கு என்பதால், பவுத்த அதிகாரிகள் பவுத்தத்தின் இத்தகைய பதிப்புகளை ஆதரிக்கின்றன.

பவுத்தம் + மதம் = தேசிய நோய்


இந்த நாட்டில் பவுத்தம் பொதுவாக ஒரு மதமா-கப் பயன்படுத்தப்படுகிறது. பவுத்தர்கள் பவுத்தத்தின் வளாகத்திற்குள் ஒரு பாசாங்கு மதத்தைக் காட்ட விரும்புகிறார்கள். இந்தச் செயல்பாட்டில் உள்ள ஆபத்து என்னவென்றால், அரசியல் அடிப்படையிலும் மத அடிப்படையிலும் தேசியவாதம் முன்னெடுக்கப் படுகிறது. இது தேசியவாதத்தை வளர்ப்பதற்காகன இலங்கையர்களின் நோய். பவுத்தம் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப மதமாக தோன்ற முடியாது. கடந்த நான்கு தசாப்தங்களாக சோகமான நினைவுகளை கொண்டு வந்த தேசியவாதத்தை வளர்ப்பதற்காக இந்த நாட்டில் பல அரசியல் மற்றும் மத அதிகாரிக-ளால் உருவாக்கப்பட்ட முகமூடி இது.

பவுத்தம் பல்வேறு சமூகங்களால் வரவேற்கப்படும் மதமாக விளங்கவேண்டும். பன்முகத்தன்மை மதிக்கப்படும் ஒரு வாழ்க்கை முறையாக இருக்க வேண்டும். சகோதரத்துவத்தையும் சகோதரித்துவத்தையும் வளர்ப்பதற்காக அதன் போதனைகளைப் பயிற்சி செய்து மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். இலங்கையில் பவுத்த மதமானது ஒரு தேசிய நோயாகக் காணப்படுகிறது. இது புற்றுநோயைப் போலவே மக்களிடையே பரவலாக உள்ளது. இத்தகைய நெருக்கடியிலிருந்து விடுபட ஒரே தீர்வு தொடக்கக் கல்வி முறைகளில் தொடங்கி சாதாரண மக்களுக்கு கல்வி கற்பிப்பதுதான், இது கிராம அளவிலான முயற்சியாக இருக்க வேண்டும். மேலும் இது ஒரு கற்பித்தல் முறையை விட ஒரு பெரிய கற்றல் செயல்முறையாக இருக்கும்.

முடிவுரை

மேற்குறிப்பிட்ட கூறுகளை கவனத்தில் கொண்டால், இலங்கை ஒரு பவுத்த நாடாக இருக்க முடியாது என்பது வெளிப்படை. இலங்கையில் உண்மையான பவுத்த நடைமுறையை நிரூபிக்க இதைவிட சிறந்த தரமான சைகை எதுவும் இல்லை. வன்முறையை ஊக்குவிப்பதில் வெறும் அரசியல் மற்றும் மத நிகழ்ச்சி நிரல்களுக்காக பவுத்தம் நாளும் விற்கப்படுகிறது. உண்மையில், பவுத்தர்களை வெறும் சடங்குகள் மூலம் (மற்ற மதங்களைப் போலவே) தங்கள் வணிக வகையிலான மத நடத்தைகளை நடித்துக் காட்டுவதைப் பார்த்து நான் மிகவும் சோர்வாக இருக்கிறேன். புத்த மதத்தின் தற்போதைய பதிப்பு, பவுத்த - சிங்கள நாடு என்று அழைக்கப்படும் இந்த நாட்டில் உள்நாட்டுப் போர் மற்றும் படுகொலைகளை நோக்கி நம்மை இட்டுச் சென்றுள்ளது. அப்படியானால், போலியான நற்செயல்களில் நல்லது என்று தோன்றியதை உடனடியாக மாற்ற வேண்டும். எனவே, அதை எப்படிச் செய்வது, எப்போது செய்வது என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

(ஆங்கில மூலம் **https://www.colombotelegraph.com/index.php/is-sri-lanka-a-buddhist-country-a-critical-reflection-of-sri-lankan-buddhism/**.
- தமிழாக்கம்: *கனடா நக்கீரன்*)



# மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்துவதற்கு ஒன்ராறியோ அரசு திட்டமொன்றை வகுத்துள்ளது.

- விளையாட்டுகள், கழகங்கள் மற்றும் வெளிக்களப் பயணங்கள் ஆகியவற்றுடன் மாணவர்களுக்கான வகுப்பறைக் கற்றலை மீண்டும் ஆரம்பித்தல்.
- மாணவர்கள்  கற்பதில் ஏற்பட்டுள்ள இடைவெளியினை நிரவுவதற்கு உறுதுணையாக புதிய கற்பித்தல் வழிமுறைகளை ஏற்படுத்துதல்.
- எதிர்கால வேலைகளுக்கு மாணவர்களைத் தயார்படுத்தல்.
- பள்ளிகளைக் கட்டுவதற்கும் கல்வியை மேம்படுத்துவதற்கும் மேலதிக பணத்தை ஒதுக்குதல்.
- மாணவர்களின் உளநலனுக்கு உறுதுணையா னசெயற்பாடுகளை விரிவுபடுத்தல்.

**Ontario.ca/CatchUp எனும் தளத்தில் எமது திட்டத்தினைப் பார்வையிடலாம்.**

இது ஒன்ராறியோ அரசாங்கத்தினால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario

# அன்பின் தொனி - 663

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**பொய்யான தேவர்களின் விக்கிரகங்கள்**

**7. பெயெல்செபூல்** - Beelzebub

எருசலேமிலிருந்து வந்த வேதபாரகர்: இவன் பெயெல்செபூலைக்கொண்டிருக்கிறான், பிசாசுகளின் தலைவனாலே பிசாசுகளைத் துரத்துகிறான் என்றார்கள். - **மாற்கு 3: 22**

அவர்களில் சிலர்: இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலைக் கொண்டு பிசாசுகளைத் துரத்துகிறான் என்றார்கள். வேறு சிலர் அவரைச் சோதிக்கும்படி வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காட்டவேண்டுமென்று அவரிடத்தில் கேட்டார்கள். அவர்களுடைய சிந்தனைகளை அவர் அறிந்து, அவர்களை நோக்கி: தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம், தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த வீடும் விழுந்துபோம். சாத்தானும் தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருந்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்? இப்படியிருக்க, பெயெல்செபூலைக்கொண்டு நான் பிசாசுகளைத் துரத்துகிறேன் என்கிறீர்களே. நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந் தீர்க்கிறவர்களாயிருப்பார்கள். - **லூக்.கா 11: 15-19**

**8. அஸ்தரோத்** - Ashtaroth

இஸ்ரவேல் புத்திரர், மறுபடியும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்புச் செய்து, கர்த்தரைச் சேவியாமல் அவரை விட்டுப் போய், பாகால்களையும், அஸ்தரோத்தையும், சீரியாவின் தேவர்களையும், சீதோனின் தேவர்களையும், மோவாபின் தேவர்களையும், அம்மோன் புத்திரரின் தேவர்களையும், பெலிஸ்தரின் தேவர்களையும் சேவித்தார்கள். - **நியாயாதிபதி 10: 6**

அப்பொழுது சாமுவேல் இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரையும் நோக்கி: நீங்கள் உங்கள் முழுஇருதயத்தோடும் கர்த்தரிடத்தில் திரும்புகிறவர்களானால், அந்நிய தேவர்களையும் அஸ்தரோத்தையும் உங்கள் நடுவிலிருந்து விலக்கி, உங்கள் இருதயத்தைக் கர்த்தருக்கு நேராக்கி, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்யுங்கள், அப்பொழுது அவர் உங்களைப் பெலி ஸ்தருடைய கைக்கு நீங்கலாக்கி விடுவார் என்றான். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் பாகால்களையும் அஸ்தரோத்தையும் விலக்கி விட்டு, கர்த்தர் ஒருவருக்கே ஆராதனை செய்தார்கள். - **1 சாமுவேல் 7: 3-4**

சாலொமோன் சீதோனியரின் தேவியாகிய அஸ்தரோத்தையும், அம்மோனியரின் அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றினான். - **1 ராஜாக்கள் 11: 5**

யூதாவின் ராஜாக்கள் உண்டாக்கினதும், ஆகாசுடைய மேல்வீட்டில் இருந்ததுமான பலிபீடங்களையும், மனாசே கர்த்தருடைய ஆலயத்தின் இரண்டு பிராகாரங்களிலும் உண்டாக்கின பலிபீடங்களையும் ராஜா இடித்து, அவைகளின் தூளை அங்கேயிருந்து எடுத்துக் கீதரோன் ஆற்றில் கொட்டினான். எருசலேமுக்கு எதிரே இருக்கிற நாசமலையின் வலதுபுறத்தில் இஸ்ரவேலின் ராஜாவாகிய சாலொமோன் சீதோனியரின் அருவருப்பாகிய அஸ்தரோத்திற்கும், மோவாபியரின் அருவருப்பாகிய காமோசுக்கும், அம்மோன் புத்திரரின் அருவருப்பாகிய மில்கோமுக்கும் கட்டியிருந்த மேடைகளையும் ராஜா தீட்டாக்கி, சிலைகளை உடைத்து, விக்கிரகத் தோப்புகளை நிர்மூலமாக்கி, அவைகளின் ஸ்தலத்தை மனுஷரின் எலும்புகளால் நிரப்பினான். - **2 ராஜாக்கள் 23: 12-14**

**9. ஆண்சுரூபங்கள்** - Asherah (Images of Men)

நான் உனக்குக் கொடுத்த என் பொன்னும் என் வெள்ளியுமான உன் சிங்கார ஆபரணங்களை நீ எடுத்து, உனக்கு ஆண்சுரூபங்களை உண்டாக்கி, அவைகளோடே வேசித்தனம்பண்ணி, உன் சித்திரத்தையலாடைகளை எடுத்து, அவைகளை மூடி, என் எண்ணெயையும் என் தூபவர்க்கத்தையும் அவைகளின்முன் படைத்து, நான் உனக்குக் கொடுத்த என் அப்பத்தையும், நீ சாப்பிடும்படி உனக்குக்கொடுத்த மெல்லிய மாவையும் நெய்யையும் தேனையும் நீ அவைகளின் முன் சுகந்தவாசனையாகப் படைத்தாய், காரியம் இப்படி ஆயிற்றென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். - **எசேக்கியேல் 16: 17-19**

**10. பேல்** - Bel

பேல் பணியும், நேபோ குனியும், அவைகளின் விக்கிரகங்கள் காட்டுமிருகங்களுக்கும் நாட்டுமிருகங்களுக்கும் சுமையாகும், நீங்கள் சுமந்தசுமைகள் இளைத்துப்போன மிருகங்களுக்குப் பாரமாயிருக்கும். - **ஏசாயா 46: 1**

கர்த்தர் தீர்க்கதரிசியாகிய எரேமியாவைக்கொண்டு பாபிலோனுக்கும் கல்தேயர் தேசத்துக்கும் விரோதமாக உரைத்த வசனம்: பாபிலோன் பிடிபட்டது, பேல் வெட்கப்பட்டது, மெரொதாக் நொறுங்குண்டது, அதினுடைய சிலைகள் இலச்சையடைந்தது, அதினுடைய விக்கிரகங்கள் நொறுங்கிப்போயின என்று ஜாதிகளுக்குள்ளே அறிவித்துப் பிரசித்தம்பண்ணுங்கள், இதை மறைக்காமல் கொடியேற்றி விளம்பரம்பண்ணுங்கள். - **எரேமியா 50: 1-2**

நான் பாபிலோனில் இருக்கிற பேலைத் தண்டிப்பேன், அது விழுங்கினதை அதின் வாயிலிருந்து கக்கப்பண்ணுவேன், ஜாதிகள் இனி அதினிடத்திற்குஓடிவரமாட்டார்கள், பாபிலோனின் மதிலும் விழும். என் ஜனங்களே, நீங்கள் அதின் நடுவிலிருந்து புறப்படுங்கள், கர்த்தருடைய கோபத்தின் உக்கிரத்துக்குத் தப்பும்படி அவனவன் தன்தன் ஆத்துமாவை இரட்சித்துக்கொள்ளக்கடவன். - **எரேமியா 51: 44-45**

*தொடரும்...*


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077




ALL DEBT SOLUTIONS CR PLAN
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York


எமது மேடை! எமது கலைஞர்கள்!!
VILLA KARUNA
HOME FOR SENIORS
HELPING HANDS
சந்தியாராகம்
Santhiyaragam
Presents
சந்தியாராகம்
SANTHIYARAGAM
GOLDEN
SUPER SINGER
FINALE
SEASON 4
Saturday, Sept 24, 2022
4:30 p.m.
தமிழ் இசை கலாமன்றம்
THAMIL ISAI KALAAMANRAM OF ONTARIO
1120 Tapscott Road, Unit 3
Toronto, Ontario M1X 1E8
Tickets on Sale $50
FOR TICKETS AND MORE INFORMATION
INTHU/PARA 416.282.4535
INDRANI 416.200.6971

# குழந்தைகளின் பசியைப் போக்கிட எந்த தியாகத்தையும் செய்யத் தயார்: முதல்வர் ஸ்டாலின்

"தமிழ் சமூகத்தினுடைய வறுமையை அகற்றிட, குழந்தைகளின் பசியைப் போக்கிட எந்த தியாகத்தையும் செய்திட நான் தயாராக இருக்கிறேன்" என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

முதலமைச்சரின் காலை சிற்றுண்டித் திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று மதுரை நெல்பேட்டையில் உள்ள ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் தொடங்கி வைத்தார். பின்னர் நடந்த விழாவில் முதல்வர் பேசியது: " ஒரு நூற்றாண்டிற்கு பின்னர், இன்று காலை உணவுத் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. அன்று ஆயிரம்விளக்கில் தொடங்கிய திட்டம், தூங்காநகரமாக இருக்கக்கூடிய மதுரையின் வைகையாற்றங்கரையில் அடுத்த பரிமாணத்தை அடைந்து விரிவடைந்திருக்கிறது. பள்ளிகளில் காலை உணவுத்திட்டம் என்பது அமெரிக்காவில் (US Departmet of Agriculture) பல மாநிலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதேபோல், ஐரோப்பிய நாடுகளிலும், குறிப்பாக 3 ஆண்டுகளுக்கு முன்னர், பிரான்ஸ் நாட்டிலும் காலை உணவுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பள்ளிகளில் காலை உணவு வழங்குவதால், அந்நாட்டு மாணவர்களின் கற்றல்திறன் அதிகரிப்பதாகவும், மாணவர்களின் வருகை அதிகரிப்பதாகவும், பல ஆய்வு முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. மேலும் கரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு, காலை உணவுத்திட்டத்தின் தேவை அதிகரித்துள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

காலை சிற்றுண்டியை மாணவர்கள் உண்ணும்போது அவர்கள் அடையக்கூடிய மகிழ்ச்சியை அவர்களது முகங்களில் நான் பார்த்தேன். அப்போது நான் அடைந்த மகிழ்ச்சியை சொற்களால் வருணிக்க முடியாது. ஏழை எளியோர் வீட்டுப்



பிள்ளைகள், ஒடுக்கப்பட்டோர் பிள்ளைகள், எதன் காரணமாகவும் பள்ளிக்குச் செல்வது தடைபடக்கூடாது என்பதற்காகவே, திராவிட இயக்கம் தொடங்கப்பட்டது. அங்குதான் கடந்த நூற்றாண்டுக்கான விதை தூவப்பட்டது.

அதற்காகவே சுயமரியாதை, சமூகநீதி கோட்பாடு உருவாக்கப்பட்டது. வகுப்புவாரி இடஒதுக்கீடு தரப்பட்டது. பெரியார், அண்ணா, கலைஞர் வழிகளை நான் பின்பற்றி வருகிறேன். எத்தகைய நிதிச்சுமை இருந்தாலும், இந்த பசிச் சுமையை போக்க நாம் முடிவெடுத்து இந்தப் பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். உங்கள் வீட்டு பிள்ளைகளுக்கு எத்தனை கனிவோடும், கவனத்தோடும் உணவு வழங்குவீர்களோ, அதைவிட கூடுதல் கவனத்தோடும், கனிவோடும் வழங்க வேண்டும்.

அன்பு மாணவச் செல்வங்களே, உங்களுக்கு காலையும், மதியமும் உணவு வழங்குகிறோம். எனவே நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்படாமல் படியுங்கள். இது ஒன்றுதான் என்னுடைய வேண்டுகோள். கல்வி நாம் போராடி பெற்ற உரிமை. படிப்பு ஒன்றுதான் நம்மிடமிருந்து யாராலும் பறிக்க முடியாத சொத்தாக அமைந்திருக்கிறது. அத்தகைய சொத்தை உங்களுக்கு நீங்களே சேர்த்துக் கொள்ளுங்கள்.

உங்களது மற்ற கவலைகள், மற்ற தேவைகளை நிறைவு செய்வதைத்தான் இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது. நான் இருக்கிறேன், நீங்கள் படிப்பிலே மட்டும் கவனம் செலுத்துங்கள். படித்துதான் ஆக வேண்டுமா? குறிப்பாக இந்த படிப்பைத்தான் படிக்க வேண்டுமா? வேறு படிப்பே இல்லையா? என்று யாராவது சொன்னால், அவர்களை முட்டாள்களாக பாருங்கள்.

நீங்கள் படித்து அறிவார்ந்த சமூகமாக முன்னேற இருப்பவர்கள். எந்த காரணத்துக்காகவும் கல்வியைவிட்டு விலக சென்றுவிடாதீர்கள். விலகி செல்லவும் நான் விடமாட்டேன். பள்ளிக்கல்வி, உயர் கல்வி, ஆராய்ச்சிப் படிப்புகள் என கலை அறிவியல் என அனைத்து துறைகளிலும் நீங்கள் முன்னேற வேண்டும். நீங்கள் முன்னேறினால்தான் நம்முடைய தமிழ்ச்சமுதாயம் இன்னும் முன்னேறும்.

அந்த முன்னேற்றத்திற்காகத்தான், திமுக அரசியல் களத்திலும், ஆட்சிபொறுப்பிலும் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. "பசிப்பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரக்க வாழ்" என்கிறது மணிமேகலை காப்பியம். அத்தகைய மாநிலமாக தமிழ்நாடு அமைய எந்நாளும் உழைப்போம். தமிழ்ச் சமூகத்தினுடைய வறுமையை அகற்றிட, குழந்தைகளின் பசியைப் போக்கிட எந்த தியாகத்தையும் செய்திட நான் தயாராக இருக்கிறேன்" என்று அவர் கூறினார்.

முன்னதாக, தமிழ்நாட்டில் பள்ளிகளில் உணவு வழங்கப்படும் திட்டத்தில் ஒரு நூற்றாண்டு நிகழ்வுகளை, வரலாற்றுச் சம்பவங்களை, அரிய ஆவணங்களைத் தொகுத்து செய்தி மக்கள் தொடர்புதுறையின் தமிழரசு பதிப்பகத்தின் மூலம் உருவாக்கப்பட்ட " ஒரு நூற்றாண்டின் கல்வி புரட்சி" என்ற நூலை முதல்வர் வெளியிட, கோவை வடிவேலம்பாளையத்தைச் சேர்ந்த 1 ரூபாய் இட்லி பாட்டி என்று அழைக்கப்படும் கமலாத்தாள் பெற்றுக்கொண்டார்.

# தமிழக அரசுப் பள்ளி மாணவர்களுக்கான காலை சிற்றுண்டித் திட்டம்: முதல்வர் ஸ்டாலின் தொடங்கிவைத்தார்



அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கான காலை சிற்றுண்டித் திட்டத்தை மதுரையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று (செப்.15) தொடங்கி வைத்தார்.

தமிழக சட்டப்பேரவையில், 110விதியின் கீழ், அரசுப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கவும், ஊட்டச்சத்து குறைபாட்டை போக்கவும், இடைநிற்றலை தவிர்க்கவும் தமிழகம் முழுவதும் அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கான காலை சிற்றுண்டித் திட்டம் தொடங்கப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

இதன்படி, முதலமைச்சரின் காலை சிற்றுண்டித் திட்டத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று மதுரை நெல்பேட்டையில் உள்ள ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து அரசு தொடக்கப்பள்ளிகளில், மாணவர்களுக்கு சத்தான காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் தமிழகம் முழுவதும் இன்று முதல் நடைமுறைக்கு வருகிறது. மாணவர்களுக்கு உணவூட்டிய முதல்வர்: இந்த திட்டத்தை தொடங்கி வைத்த தமிழக முதல்வர் ஸ்டாலின், மாணவர்களுக்கு உணவுகளை பரிமாறினார். பின்னர், மாணவர்களுடன் அமர்ந்து முதல்வர் ஸ்டாலின் சிற்றுண்டி சாப்பிட்டார். அப்போது அவருக்கு அருகில் இருந்த மாணவர்களுக்கு உணவை ஊட்டி மகிழ்ந்தார்.

இத்திட்டத்தை ரூ.33.56 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. தமிழகம் முழுவதும் முதற்கட்டமாக, 1545 அரசு தொடக்கப் பள்ளிகளில் படிக்கும், 1 லட்சத்து 14 ஆயிரத்து 95 மாணவ மாணவிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் உணவு வழங்கப்படவுள்ளது.


# நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சவுக்கு சங்கருக்கு 6 மாதங்கள் சிறை: உயர் நீதிமன்றம் உத்தரவு

குற்றவியல் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் யூடியூபர் சவுக்கு சங்கருக்கு 6 மாதங்கள் சிறைத் தண்டனை வழங்கி உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.

சென்னையை சேர்ந்த யூடியூபர் சவுக்கு சங்கர். இவர் ட்விட்டரில், 'நீதித் துறை ஊழல் கறை படிந்திருக்கிறது' என கருத்து பதிவு செய்தார். இதற்காக அவர் மீது உயர் நீதிமன்ற மதுரை கிளை தாமாக முன்வந்து குற்றவியல் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு பதிவு செய்தது. இந்த வழக்கை நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், பி.புகழேந்தி ஆகியோர் விசாரித்தனர்.

இந்த வழக்கு ஏற்கெனவே விசாரணைக்கு வந்தபோது நீதிமன்றத்தில் ஆஜரான சவுக்கு சங்கர், "நீதிமன்ற அவமதிப்பு மனுவுக்கு பதில் மனு தாக்கல் செய்ய கால அவகாசம் தேவை. நீதிமன்றம் அவமதிப்பு நடவடிக்கை எடுத்ததற்கான காரணமாக குறிப்பிடும் வீடியோ பதிவுகள் மற்றும் பிற பதிவுகளை எனக்கு வழங்க வேண்டும்" என்றார். மேலும் அவர், "'நான் கூறிய கருத்தில் உறுதியாக இருக்கிறேன்" என்றார்.

இந்நிலையில், நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், பி.புகழேந்தி அமர்வில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது சவுக்கு சங்கர் நேரில் ஆஜரானார்.



இந்த வழக்கில் அமிகஸ் கியூரியாக (நீதிமன்றத்துக்கு உதவி செய்பவர்) நியமிக்கப்பட்ட மூத்த வழக்கில் சோமயாஜி காணொலி வழியாக வாதிடுகையில், "சவுக்கு சங்கர் பேசியதும், எழுதியதும் நீதிமன்ற அவமதிப்பு. இதற்காக அவரை தண்டிக்க வேண்டும்" என்றார். இதையடுத்த தீர்ப்பை மாலைக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.


மாலையில் நீதிபதிகள், நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சவுக்கு சங்கருக்கு 6 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்து உத்தரவிட்டனர். மேலும், நீதிமன்றம் தொடர்பான அவரது கருத்துகளை சமூக வலைதளங்களில் நீக்கவும் அவர்கள் உத்தரவிட்டனர். சவுக்கு சங்கர் இந்த தண்டனையை நிறுத்தி வைக்கக் கோரிக்கை வைத்தார். ஆனால், நீதிபதிகள் அதை நிராகரித்தனர்.

## முன்னாள் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரனை அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் நேரில் சந்திப்பு

முன்னாள் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரனை அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று நேரில் சந்தித்தார். அதிமுகவில் ஒற்றைத் தலைமை சர்ச்சை எழுந்த நிலையில், பழனிசாமி கட்சியின் இடைக்கால பொதுச்செயலாளராக பழனிசாமி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கட்சியின் பொருளாளர் உள்ளிட்ட அனைத்து பொறுப்புகளில் இருந்தும், கட்சி அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்தும் ஓபிஎஸ் மற்றும் அவரது ஆதரவாளர்களை நீக்கியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பான வழக்கில், அந்த பொதுக்குழு செல்லும் என உயர் நீதிமன்ற அமர்வு தீர்ப்பளித்தது. இதை எதிர்த்து ஓபிஎஸ் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

சமீபத்தில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி பழனிசாமியிடம் தலைமை அலுவலக சாவியை ஒப்படைத்தது செல்லும் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. எல்லா வகையிலும் பழனிசாமியின் கை ஓங்கி வரும் நிலையில், ஓபிஎஸ், கட்சியின் மூத்த தலைவர்கள் மற்றும் சட்ட வல்லுநர்களுடன் தொடர்ந்து ஆலோசித்து வருகிறார். அப்போது அதிமுக விதிகள், கட்சியை கைப்பற்றுவதற்கான வியூகங்கள் உள்ளிட்டவை குறித்து ஓபிஎஸ் ஆலோசித்ததாக கூறப்படுகிறது.




25

*(சென்ற வார தொடர்ச்சி)*

**நோயோடு போராடு** இப்படியான ஒரு நிலைக்கே இப்போது நாங்கள் வந்திருக்கிறோம்.

*ஆலயமணியின் ஓசையை நான் கேட்டேன்*
*அருள்மொழி கூறும் பறவைகள் ஒலி கேட்டேன்*
*என் இறைவன் அவனே அவனே*
*எனப் பாடும் மொழி கேட்டேன்*

எத்தனை முறை கேட்டாலும் தெவிட்டாது இனிக்கும் பாடல்.

ஆலயமணி இனிது. அப்படியானால் எச்சரிக்கை மணி?... எச்சரிக்கை மணியும் இனிதுதான்.

## 2021 ஆவணி 26

இதயமே, மூன்று நாட்களாக ICDத் தோழன் காலை எட்டரை மணிக்கு எச்சரிக்கை மணியை (alarm) ஒலித்துக்கொண்டிருக்கிறான். இந்த எச்சரிக்கை மணி பற்றி முன்பே குறிப்பிட்டிருக்கிறேன்.

என்ன ஏது என்று தெரியாமல் வைத்துக்கொண்டு இருக்கமுடியாது. பெரிய ஆபத்தாகவுங்கூட இருக்கலாம். ஆகவே வழமையாக ICDஐ கவனிக்கும் மருத்துவர் டாக்டர் ரியான் (Dr Tian) அவர்களை அழைத்து விபரத்தைச் சொல்லி கம்பர் றிவர் மருத்துவ நிலையத்துக்குச் (HumberRiverHospital) சென்று பரிசோதனை செய்தபோது "நல்லவேளை ICDயின் சக்தி குறைந்து போனதால் அதனை மாற்ற வேண்டிய காலம் என்பதை எச்சரிக்கும் எச்சரிக்கை மணிதான் அது" என்று அவர் சொன்னார்.

ஆனாலும் ஆறி இருக்க முடியாது. அதனைக் கூடிய விரைவில் மாற்றி அதற்குப் பதிலாகப் புதிதாக ஒரு ICDஐ பொருத்த வேண்டும். அதன் கடுமையான பக்கம், ஏற்கனவே இதயத்துள் இருக்கும் இரண்டு வயர்களை வெளியே இழுத்துவிட்டுப் புதிதாக வயர்களைப் பொருத்துவதுதான்.

இதுபற்றிக் காலதாமதமின்றி முடிவு செய்ய வேண்டும் என்றும் அதற்குச் சிறப்பு நிபுணத்துவமும் வசதிகளும் கொண்ட ரொறோன்ரோ ஜெனரல் மருத்துவ நிலையத்துக்கு (Toronto General Hospital) தான் பரிந்துரைப்பதாகவும் சொன்னார்.

அதிகம் ஆபத்துக்கள் கொண்டது என்பதைத் தெரிந்து கொண்டும் அதை நாம் கடந்தே ஆகவேண்டும். இது தவிர்க்கமுடியாதது.

தெய்வச் செயலால் அற்புதங்கள் நடவா. அறிவியலை - மருத்துவ விஞ்ஞானத்தை - அதன் தொழில்நுட்ப ஆற்றல்களையே நாம் நம்பியாக வேண்டும். என் தந்தையாரின் வைர நெஞ்சத்தைப்போல், என் தாயாரின் சமநிலைப்பட்ட அருள் நெஞ்சத்தைப்போல் என் நெஞ்சே இதனை நீ எதிர்கொள்ள வேண்டும்.

இந்தச் செயல்முறையில் இதயமே நீ மிகவும் உறுதியாக இருக்க வேண்டும். உன் இரத்த நாளங்களும் இளையங்களும் கவனமாகவே கையாளப்படும். இரத்தப்பெருக்கு கட்டுப்படுத்தப்படும். மருத்துவத்துறையின் துறைசார்ந்த நிபுணர்களும் உதவியாளர்களும் மிகுந்த அர்ப்பணிப்போடு செயற்படுவர் என்பதால்

*அச்சம் இல்லை*
*அழுங்குதல் இல்லை*
*நடுங்குதல் இல்லை.*

என் இதயமே, இவ்வளவு காலமும் உன்னைக் காப்பாற்றி வந்த உன் ICDத் தோழனை இழப்பதில் உனக்கும் எனக்கும் துயரம்தான். என்ன செய்வது எதுவும் நிரந்தரம் இல்லை என்ற ஞானமும் அமைதியும் எமக்கு வேண்டுந்தானே.. அனைத்தும் மாறக்கூடியது என்ற அறிவியல் அடிப்படையை எவரும் மறக்கமுடியாது. இதில் இழப்புக்களும் இயல்பானதுதான்...

ஒன்றில்லை என்றால் மற்றொன்று, ஒன்று போக இன்னொன்று இட்டு நிரப்புகிறது. புதியதுக்கு வழிவிட்டு பழையது விலகுவதும் நன்றே.

*பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல,*
*காலவகையினானே.*

புதிய தோழனுக்காக காத்திருப்போம்.

இப்போதெல்லாம் முன்னரை விட அதிக களைப்பும் மூச்செடுப்பத்தில் சிரமமும் கூடி கவலையடைந்தேன்.

இளைய பேத்தி அபிநயா எப்போதும் என்னிடம் ஓடிவந்து தன்னைத் தூக்குமாறு இரண்டு கைகளையும் உயர்த்துவா. தூக்காமல் இருக்கவும் முடியாது. ஆனால் தூக்கும்போது அதிக களைப்பு ஏற்படுகிறது. முன்பெல்லாம் மூன்று பேத்திமாருடனும் ஆடவும், பாடவும், நாடகம் நடத்தவும், சேர்ந்து விளையாடவும் முடிந்தது போல இப்போது முடியவில்லையே என்கின்ற ஏக்கமும் கூடி வருகிறது.

உடம்பை வருத்தி ஏதேனும் வேலை செய்தால் அல்லது ஏதேனும் பாரம் தூக்கினால் எனது வயிறு வீங்கி ஒரு பலூன் போல ஊதிவருவதும் ஏன் என்பதை அறியமுடியாமல் இருந்தது. இதய நிபுணர் மைக்கெல் ரீ ஜெ (Dr Michael T Janndrawidjaja) என்னை பல பரிசோதனைகளுக்கு உட்படுத்தினார். இதனால் ஹோல்ரர் மொனிட்டர் (Holter Monitor) ஐ 10 நாட்களுக்குக் கட்டிக்கொண்டு திரிய நேர்ந்தது. அதில் உள்ள வயரை தோலுடன் இணைக்கும் ஒட்டுகின்ற கோர்ட் தோலில் அழற்சியை உண்டாக்கிச் சொறிவையும் தந்தது.

அந்தப் பரிசோதனையைத் தொடர்ந்து சி ரீ ஸ்கான் (CT Scan), எக்ஸ்-ரே (X-Ray), ஆல்ரா சவுண்ட் (Ultrasound), நியூக்கிளிய இமேஜஸ் Nuclear Scan ஆகிய பரிசோதனைகளும் செய்யப்பட்டன.

2020 ஆடியில் (July) ஸ்டென்ட் (Stent) வைக்கப்பட்ட பின்னர் இவ்வாறு களைப்பு உண்டாக என்ன காரணம் என்று அறிவதே நோக்கம். மீண்டும் ஆஞ்சியோகிராம் (Angiogram) பரிசோதனையைச் செய்து பார்க்கலாம் என்ற அபிப்பிராயத்தினையும் இதய மருத்துவ நிபுணர் தெரியப்படுத்தினார்.

என் இதயமே இவற்றை விட உனது நண்பன் ஐ சி டீ (ICD)ஐ மாற்றுவது தொடர்பாக ரொறோன்ரோ ஜெனரல் மருத்துவ நிலையத்தில் இருந்து எனக்கு அழைப்பு வந்தது. அந்தக் கலந்துரையாடலுக்கு என்னுடன் மகள் சங்கீதாவும் சேர்ந்து வந்திருந்தார். அங்கு சென்று அந்தத் துறையின் சிறப்பு மருத்துவ நிபுணர் நோட் (Dr Noad) அவர்களை நாங்கள் சந்தித்ததில் வீனோகிராம் (Venogram) என்ற பரிசோதனையைச் செய்யவேண்டும் என்று நாட்குறித்தார்.

செப்டம்பர் 23 காலை அதற்கென நான் தயாரானேன்.

ரொறோன்ரோ ஜெனரல் மருத்துவ நிலையத்தின் இதய சிகிச்சைப் பிரிவின் டீவிப்றில்லேற்றர் கிளினிக்கிற்குச் (Toronto General Hospital Cardiac Centre Defibrillator Clinic) சென்றேன். நோயாளிக்குரிய நீல நிற அங்கியை அணிந்து கொண்டு தயாரானேன். பரிசோதனை அறையில் ஒரு பெண்மணியும் இன்னும் ஓர் ஆணும் அன்போடு வரவேற்றனர்.

அவர்கள்தாம் வீனோக்ராம் (Venogram) சோதனையைச் செய்கின்ற தொழில் நுட்பவியலாளர்கள் என்பதைப் புரிந்துகொண்டேன். இன்னும் சிலர் அங்கு வந்தார்கள். அவர்கள் இந்தத் துறையில் படிப்பவர்கள் போலத் தெரிந்தது. இரண்டு கைகளிலும் இரத்தக் குழாய்களின் ஊடாக நிறமி (Dye) அனுப்பி படம் எடுக்க வேண்டும்.

எனது இரத்தக் குழாய்கள் மிகவும் சிறியவை. இதனால் இரத்தக் குழாய்களைக் கண்டுபிடித்து ஊசி ஏற்றுவதற்கு பெரும்பாலும் சிரமப்படுவார்கள். ஒன்றுக்கு மேற்பட்ட பல இடங்களில் குத்திக் குத்தி பார்ப்பார்கள். அது அன்றும் நடந்தது. முதலில் ஒருவர் பதம் பார்த்தார். அது சரிவரவில்லை. பின்னர் இருவர் இரண்டு கைகளிலும் ஊசியை ஏற்றி மருந்தை ஏற்றினார்கள். மூச்சை இழுத்து வைத்திருக்குமாறு சொல்லி படம் பிடிக்கும் இயந்திரத்தின் மூலம் படம் பிடித்து எல்லாம் சரி என்று சொன்னார்கள். அன்றைக்கு அவ்வளவுதான்.

ICD மாற்றுவதற்குரிய சத்திரசிகிச்சை நாளாக ஒக்ரோபர் 22ஐ முதலே குறித்துத் தந்திருந்தார்கள். இதற்கிடையில் எக்கோ கார்டியோகிராம் (Echo Cardiogram) செய்வதற்கும் பலூன் போல எப்போதும் வீங்கி இருக்கும் எனது வயிற்றை அல்ட்ராசவுண்ட் (Ultrasound) செய்வதற்கும் எனது இதய மருத்துவ நிபுணர் இரண்டு தினங்களைத் தந்திருந்தார். என் இதயமே, இவையெல்லாம் சத்திரசிகிச்சை செய்வதற்கு முன்னர் 'நீ அதற்கு தயாரா' என்று தெரிந்து கொள்வதற்காகவே.

'சரி இன்னும் ஒருமாதம் அளவில் இருக்கிறதுதானே' என்ற எண்ணத் தோடு நான் கொஞ்சம் ஆறி இருந்தேன். வழமைபோல இயங்கிக் கொண்டும் இருந்தேன். ஆனால் அதற்கிடையில் வந்ததே வினை.

## 2021 அக்டோபர் 4

பிற்பகல் மூன்றுமணியளவில் மகனின் மகள் நேஹாவை (பேத்தி - 20 நாட் குழந்தை) பார்ப்பதற்குப் புறப்படத் தயாரானோம். வீட்டு முன்றலில் காரில் சாரதியின் இருக்கையில் நான் இருக்கமுற்பட்ட போது அந்த எச்சரிக்கையை என் இதயமே நீ தந்தாய். "பட பட பட பட் பட் பட பட்" தொடர்ந்து பிரச்சினையைத் தரக்கூடாது என்று என் மனம் வேண்டியது.

கடந்தகால அனுபவங்களும் பயமும் மனதில் வந்து போனது. துணைவியார் அப்போதுதான் வீட்டிலிருந்து வந்தவர் "என்ன" என்று கேட்டார். உடனும் ஏதும் சொல்லவில்லை. கொஞ்ச நேரம் அமைதியாகவே இருந்தேன். அதன் பின் "வீட்டுக்கு சென்று மருந்து எடுத்து வருகிறேன்" என்று சொல்லியபடி மெதுவாக இறங்கி நடந்து சென்று இதயமே உன்னை அமைதிப்படுத்த வல்ல பிசப்றோலோல் (Bisoprolol) குளிசையை சாப்பிட்டேன்.

கொஞ்ச நேரம் படுக்கையில் சாய்ந்திருந்து பார்த்தேன். இதயமே, பெரிதாக நீ எந்த வித்தியாசங்களும் காட்டவில்லை. இதற்கிடையில் காருக்குள் இருந்த துணைவியார் "என்ன காணேல்லை" என்று போனில் தொடர்பு கொண்டார். எல்லாம் அதோடு சரியாய்ப் போய்ச்சு என்று மனம் - அதுதான் மோசமான என் புத்தி நினைக்க நான் மீண்டும் வாகனத்தில் ஏறி வாகனத்தை மெதுவாக நகர்த்தினேன்.

"என்ன முழுசிறியள்" என்று துணைவியார் கேட்க - அவவவுக்கு ஏதேனும் சொல்லாமல் ஒளித்தால் அப்பிடித்தான் அவ கேக்கிறவ - "ஒரு மாதிரி இருக்கு" என்று மட்டும் சொன்னேன். இதயமே என் நல்ல புத்தி இப்போது மீண்டும் உன் நிலையை வலு கவனமாக எடைபோட்டுக் கொண்டே இருந்ததில் பிரச்சினை மிக மோசமாக மாறவும் கூடும் என்ற எச்சரிக்கையை சொல்லியது.

சிறிது தூரத்தில் மீண்டும் வாகனத்தை திருப்பி வீட்டுக்கு வந்தோம். இதற்கிடையில் மகளோடு தொடர்பு கொண்டு அம்புலன்ஸை அழைக்குமாறு சொன்னோம். 15 நிமிடங்களுக்குள் அம்புலன்ஸ் வந்துவிட்டது. பேத்தி இசையினி "அம்மப்பா அம்புலன்ஸ் வந்திட்டுது" என்று உற்சாகமாகச் சொன்னா.

பிறகென்ன பழைய குருடி கதவைத் திறந்த நிலை. ப்ராம்ப்டன் மருத்துவ நிலைய அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு ICU க்கு மாற்றப்பட்டேன். தொடர்ந்து பரிசோதனைகள் இடம்பெற்றன. பேஸ் மேக்கர் கிளினிக் டாக்டர் ஜியோவானி 6ஆம் திகதி வந்து பரிசோதித்ததில் இதயமே நீ கட்டுக்கடங்காமல் 196 அளவுக்கு பாய்ந்திருக்கிறாய் என்ற உண்மை தெரிந்தது. மிகவும் ஆபத்தான நிலையிலேயே நான் இருந்திருக்கிறேன்.

இதயமே, உன் நண்பன் ICD இப்போது சக்தி இல்லாத நிலை. அவராலும் ஒன்றும் செய்ய முடியாது. "தாமதம் இல்லாமல் புதிய ICD மாற்ற வேண்டும். பழுதான வயர் மாற்ற வேண்டும்" என்று அவர் சொன்னார். அவர் உடனடியாகவே தனது அறிக்கையை ரொறோன்ரோ ஜெனரல் இதய நிபுணருக்கு அனுப்பினார். அதன் விளைவாக அன்றிரவே என்னை ரொறோன்ரோ ஜெனரலுக்கு மாற்றப்போவதாக சொன்னார்கள்.

என் மகள் சங்கீதா அன்று மருத்துவ நிலையத்தில் வேலை என்பதால் என்னை வந்து பார்த்தார். கொரோனா நிலைமைகளால் வேறெவரும் வந்து பார்க்க முடியாது. 8 ஆம் திகதி எனக்கு சத்திரசிகிச்சை. வந்த இராச் சாப்பாட்டையும் ஏன் விடுவான் என்று சாப்பிட்டுவிட்டு இரவு எட்டு மணிக்கு நான் தயாராக இருந்தேன். அங்கிருந்த தாதியருக்கும் மற்றையோர்க்கும் பயணம் சொல்லிவிட்டு ஆம்புலன்ஸில் இரவோடிரவாக ரொறோண்ரோ ஜெனெரலுக்கு 9.00மணியளவில் போய்ச் சேர்ந்தேன்.

*(தொடர்ச்சி 25 பக்கம்)*

இன்னும் கொஞ்ச நேரம் இருந்தாலென்ன....

ஓர் இதயத்தின் கதை

(24 பக்கத் தொடர்ச்சி)

6ஆம் திகதி இரவு 11 மணியளவில் டாக்டர் அப்துல்லா என்னிடம் 8ஆம் திகதி நடைபெறவுள்ள சத்திரசிகிச்சை பற்றி விளக்கமாக எடுத்துச் சொன்னார். அதன்படி புதிய ICD கருவியைப் பொருத்துவது பற்றியும் 15வருடங்களுக்கு முன் வைக்கப்பட்ட வயர்களை வெளியே இழுத்தெடுப்பதில் உள்ள அபாயங்களைத் தவிர்ப்பதற்காக ஏற்கனவே உள்ள வயரோடு புதிய வயரை உள்ளே செலுத்துவதாகவும் பழுதான வயரை செயலிழக்க செய்வதாகவும் சொன்னார். இரண்டு வயர்களில் ஒன்று நல்ல நிலையில் உள்ளதால் அதை விடுத்து மற்ற வயருக்காக ஒரு வயரை மட்டும் உள்ளே செலுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தச் செயல் முறையில் அபாயங்கள் குறைக்கப்பட இடம் இருப்பதையிட்டு நான் திருப்திப்பட்டேன். மறுநாள் காலையில் டாக்டர் நோட் (Dr. Noad) அவர்களும் வந்து கதைத்தார். அவர் மிகவும் அமைதியான மிகவும் மென்மையாகப் பேசும் ஓர் பெண்மணி.

7ஆம் திகதி பகல் துணைவியாரும் மகன் கீர்தனனும் கொரோனா கட்டுப்பாடு காரணமாக ஒருவர் மாறி ஒருவர் வந்து பார்த்துச் சென்றனர். அன்றிரவு முற்றாக நித்திரை தொலைந்தது. விழித்திருந்த நேரத்தில் "ஏதேனும் இசக்கு பிசகாய்' நடந்தாலும் என்ற எண்ணம் மேலோங்க மகள் சங்கீதாவுக்கு, மகன் கீர்த்தனனுக்கு, என் துணைவியார் கிளிப்பிள்ளைக்கு (கிளி அல்லது கிளிப்பிள்ளை என்றுதான் அழைப்போம்) என்று மனதில் தோன்றியவற்றை தனித்தனி பேப்பர்களில் எழுதி வைத்தேன்.

மரணத்தை எதிர் கொள்ளுவதும் மிகப்பெரும் பலந்தான். மகள் வயிற்று பேத்திமாருக்கு பாடல்கள் பாடியாயிற்று. ஆனால் மகனின் புதிய பேத்தி நேஹாவுக்கான தாலாட்டுப் பாடலை பாடவில்லையே என்ற கவலை மனதில் இருந்து கொண்டே இருந்தது. அதையும் ரொறோன்ரோ ஜெனரலுக்கு வரும் முன்னர் ப்ராம்ப்டன் மருத்துவ நிலையத்தில் இருந்தபோது மகள் சங்கீதா அங்கு என்னைப் பார்க்க வந்திருந்த சமயம் எழுதி மெதுவாக போனில் பாடி பதிவு செய்து அனுப்பிவிட்டேன். அதுவும் ஒருவகையில் எனக்கு ஆறுதலாக இருந்தது.

நான் தங்கியிருந்த அறையின் மறுபக்கத்தில் திரைச் சீலைப் பிரிப்புக்கு அப்பால் இருந்தவரை பார்த்தேன். வயது போனாலும் தன்னம்பிக்கை குறையாத நடவடிக்கை. கழிவறைக்கு போகும் போதும் எவரின் உதவியும் இன்றி ஊன்று கோலோடு செல்லும் விதத்தினைப் பார்த்தேன். இரா 10/11 மணி. கதிரையில் இருந்து புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தார். ஒரு வித்தியாசமான மனிதர். காலையில் அவருக்கு உதவியாக வந்திருந்த அவரது மகளுடன் கதைத்ததில் அவரைப்பற்றிய மேலதிக விபரங்களை பெற முடிந்தது.

அந்தப் பெரியவரின் பெயர் ரெட் டோயல், வயது 97. இரண்டாவது உலகமகா யுத்தத்தில் 18 வயது இளைஞனாக கப்பல் படையில் வேலை செய்தவர். பின்னால் பல்கலைக் கழகத்தில் பயின்று என்ஜினீயர் ஆனவர். மூன்று ஆண்டுகளுக்கு முன் பொருத்தப்பட்ட பேஸ்மேக்கர், வயர் முழுவதையும் கழற்றி புதிதாகப் போடுவதற்காக வந்திருக்கிறார் என்பது தெரிந்தது. காரணம் உள்ளே பாக்டீரியா தொற்றும் புண்ணும். காதுக்கு உதவு கருவி போட்டுள்ளார். இந்த வயதில் இந்த மனிதர் இவ்வளவு தன்னம்பிக்கையோடும் உசாராகவும் இருக்கும்போது எங்களைப் போன்றவர்கள் ஏன் பயப்பட வேண்டும் என்ற துணிவு இந்தப் பெரியவரைப் பார்த்ததன் பின்னால் கூடியது என்று சொல்ல வேண்டும்.

யாரறிவார் நானும் இவரைப்போல 90களைக் கடக்கவும் கூடும். பெரியவரின் பிரச்சினை வேறு என்ரை பிரச்சினை வேறு. வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க. என் இதயமே உன் வேகம் கெடுத்து ஆள புதிய ICD ஆல் சாத்தியப்படும் என்பது ஒன்றுதான் இப்போது உள்ள நம்பிக்கை. இதன்மூலம் என் வாழ்க்கையும் நீளக் கூடும்.

விடிய 8 மணிக்கு சத்திரசிகிச்சை நிலையத்துக்கு செல்ல வேண்டும் என்று பெரியவருக்கு சொல்லிச் சென்றார்கள். அவருக்கு அடுத்ததாக எனக்கு இருக்கு என்று சொன்னார்களே அல்லாமல் எனக்கு சரியான நேரம் சொல்லவில்லை.

புரண்டு புரண்டு படுத்து தூங்க முயற்சித்தத்தில் கொஞ்சம் கண்ணயர்ந்து விட்டேன். பெரியவரை 8 மணிக்கு நீங்கள் அங்கு இருக்க வேண்டும் என்று ஒருவர் வந்து எழுப்பும் சத்தம் கேட்டது. "இப்போது 6 மணிதானே" என்று பெரியவர் சொல்வதும் அதனைத் தொடர்ந்து நெஞ்சில் உள்ள முடியை எடுக்கும் 'கிர்.. கிர்..' என்ற சத்தமும் கேட்டது.

7 மணிக்கே ஒருவர் வந்து சில்லுக்கதிரையில் அவரைக் கொண்டு போனார். 2 மணி நேரத்துள் என்னிடம் வருவார்கள் என்று நானும் தயாராக இருந்தேன். 10 மணி அளவில் என்னை அதற்குரிய கட்டிலில் படுக்க வைத்து கூட்டிச் சென்றனர்.

சத்திர சிகிச்சைக் கூடத்துடன் இணைந்த பகுதி மிகப்பெரியதாக விசாலமாக இருந்தது. தாதிமாருக்குரிய பகுதி பெயர் குறிப்பிடப்பட்டு தனித்துவமாக இருந்தது. பல தாதிமார் அங்கு கடமையில் இருந்தனர். பலரும் அந்த உடையில் அழகுராணிகளாகவே தெரிந்தனர். இருவர் என்னை பொறுப்பெடுத்தனர்.

எனது இரண்டு கைகளிலும் இருந்த ட்ரிப் ஏற்ற தயாரான ஊசிகளும் அதன் தடையில்லாத தன்மையும் பரிசோதிக்கப்பட்டதில் இடது கையில் இருந்தது செயற்படவில்லை. அதுபற்றி நானே அவர்களுக்கு சொன்னேன். எனது கையில் எல்லாப்புறமும் இரத்தக்குழாய்கள் தேடப்பட்டு ஒருவர் அது மிகவும் சிரமமாய் இருப்பதாகச் சொல்லி மற்ற தாதியின் உதவியை வேண்டினார். அவர் சரியான இடத்தில் அந்த ஊசியை ஏற்றினார். மற்றவர் நெஞ்சில் உள்ள முடிகளைக் களைந்தார்.

எனக்கு சத்திர சிகிச்சையை மேற்கொள்ளும் டாக்டர் குசிமனோ Kusimano வந்து தாங்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதை தெளிவுபடுத்தினார். மயக்குபவரும் (Anesthesiologist) வந்து குறித்த இடத்தில் மட்டும் விறைக்க செய்வதாகவும் முற்றாக மயக்கப் போவதில்லை என்பதையும் தெளிவுபடுத்தினார்.

அப்போது எனது நம்பிக்கை நட்சத்திரம் - எனது தங்கும் அறை சகபாடி - அவர்தான் அந்த 97 வயதுப் பெரியவர் சிகிச்சை முடிந்து அவர்கள் கேட்பதற்கு உரத்து எதையோ சொல்லியபடி சில்லுக்கட்டிலில் வந்துகொண்டிருந்தார்.

பிறகென்ன, எனது பயம் முற்றாக மறைந்துவிட்டது. எப்போதோ அவர் எனது முன்னுதாரணமாயும் ஆதர்ச புருசராயும் மாறி விட்டிருந்தார். இப்போது எனது முறை. சத்திரசிகிச்சைக் கூடத்துக்கு சில்லுக் கட்டிலில் கூட்டிச் சென்றனர். (தள்ளிச் சென்றனர் / இழுத்துச் சென்றனர் என்றும் சொல்லலாம். ஆனால் அவை சரியான சொற் பிரயோகங்களாகத் தெரியவில்லை) எப்படியோ அங்கு அந்தக் கட்டிலுக்கு என்னை மாற்றினார்கள். செகசோதியாக விளக்குகள் எரிந்தன.

வயிற்றிலிருந்து நெஞ்சுப்பக்கம் வரை மூடினார்கள். அவர்கள் வெட்டப்போகும் இடம் முழுவதையும் ஒரு திரவத்தால் விறைக்க வைத்தார்கள். வேலை தொடங்கிவிட்டது.

ஒன்றரை மணித்தியாலம் அளவில் கடந்திருக்கும். உள்ளே பிச்சுப் பிடுங்குவதுபோல நோ தெரிந்தது. 'ஆ... ஊ... ச்சு' என்று நான் அதை வெளிக்காட்டினேன். அவர்கள் விறைப்பு மருந்தை அந்த இடங்களுக்குள் ஊசியால் போடுவதையும் உணர்ந்தேன். தையல் போடுவதாகவும் "எல்லாம் முடிந்துவிடும்" என்றும் டொக்டர் குசிமனோ சொன்னார். அவராகத்தான் இருக்க வேண்டும். அதன் பின்னர் "Everything fine" என்றும் "You did well" என்றும் சொல்லி ஒரு 10/15 நிமிடங்கள் அங்கே வைத்திருந்து விட்டு மீண்டும் எங்கள் அறைக்கு கொண்டுவந்து சேர்த்தார்கள்.

அறையில் மகள் கீதம் நீண்ட நேரம் ஆகியும் காணாததால் 'ஏதோ என்னவோ' என்று கவலையில் நின்றவர் ஓடிவந்து கன்னத்தில் முத்தமிட்டார். நெஞ்சில் வெட்டிய இடத்தில் இறுக்கமாக பன்டேஜ் (Bandage) போடப்பட்டிருந்தது மாத்திரமின்றி பாரமாகவும் அழுத்தி எதனையோ வைத்திருந்தார்கள். கடுமையாக நொந்தது. "கையை தோள்மூட்டுக்கு மேலாக உயர்த்தாமல் இருக்க வேண்டும்" என்றும் அறிவுறுத்தி இருந்தார்கள். நோவை சகித்துக் கொண்டேன். உயிர் பெரிது.

## ஒக்ரோபர் 9

என்னை 'வீட்டுக்குப் போகலாம்' என்றார்கள். ஊர் மொழியில் துண்டு வெட்டினார்கள். உடுப்பு மாற்ற மேலங்கியைக் கழற்றியபோதுதான் எனது மேற்சட்டையை ப்ராம்ப்டன் மருத்துவ நிலையத்தில் விட்டு விட்டு வந்தது தெரிந்தது.

போட்ட ஆசுப்பத்திரி உடுப்போடை ஆம்புலன்ஸில் ஏறிக் குந்தியவன் தானே. மகன் கீர்த்தனனுக்கு இதுபற்றி சொன்னேன். அவர் ஒரு சட்டையைக் கொண்டுவருவதாகச் சொன்னார். இதுபற்றித் தாதிக்கும் சொன்னேன். இதேவேளை ஒரு நோயாளிக்கு அவசரமாகப் படுக்கை தேவைப்படுவதாக அவர் அவசரப்படுத்தினார்.

"காத்திருக்கும் இடத்தில இருக்கலாம்" என்று என்னை அங்கு அழைத்துச் சென்றார். அவர் போன பின்னர் நான் அதே உடுப்போடு கீழே சென்று கீர்த்தனனுக்காகக் காத்து நின்றேன். கீர்த்தனன் வந்ததும் அதே உடுப்போடு வெளியேறினேன். "பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒரு நோயாளி தப்பி ஓடுகிறார் என்று அறிவிக்கப் போகிறார்" என்று சொல்லிச் சிரித்துக் கொண்டு வாகனத்தில் ஏறி வீடு வந்து சேர்ந்தேன்.

"அம்மப்பா வந்திட்டார்...
அம்மப்பா வந்திட்டார்..."
என்று ஆனந்தத்தில் பேத்திமார் துள்ளிக் குதித்தனர்.


# நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் விளையாட்டுப் போட்டி 2022 – கனடா

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின், விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்படும் 4 வயது முதல் 17 வயது வரை உள்ளவர்களுக்கான 5வது வருட தடகள விளையாட்டுப் போட்டி ஒக்டோபர் 1, 2022. அன்று மதியம்12 மணி முதல் Birchmount Stadium இல் நடைபெறும். இந்த நிகழ்வில் பங்கு பற்ற விரும்புபவர்கள் உங்கள்விண்ணப்பங்களை செப்டம்பர் 24ஆம் திகதிக்கு முன்னதாக தரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விண்ணப்பப் படிவங்களை எங்களிடம் நேரடியாக தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.


**தொடர்புகளுக்கு:** (416) 830-4305
(647) 808-1864



# ஜீவன் முக்தி 592

*(சென்ற வார தொடர்ச்சி)*

## ஜீவனின் பல ம்சங்களை ஒன்று திரட்டுதல் ஜீவன் முக்த வாழ்வு




2% மனோசக்தியை அதிகரிப்பதற்கான நுட்பங்களை வழங்காமல் மனத்தையே கடந்து செல்வதற்கான நுட்பங்களை வழங்குபவர்தான் சத்குருநாதர்.

72000 நாடி நரம்புகளையும் அதாவது உங்களின் எல்லா அம்சங்களையும் ஒன்றுதிரட்டி உங்களின் ஜீவனுக்கு அது இழந்து விட்டதாகத் தவித்துக் கொண்டிருக்கும் முக்தியை வெளிப்படுத்த வைத்து முக்தியளிப்பதுதான் ஜீவாத்மாவை பரமாத்மாவோடு சேர்ப்பது. ராமரை அழைத்துச் சென்று சீதை மீட்பது.

உங்களிடம் இருக்கும் அபரிமிதமான சக்திகளை உங்களுக்கே புரிய வைத்து உங்களால் முடியும் என்ற நம்பிக்கையையும் தந்து உங்களின் இராமாயணத்தை இனிமையாக்குவதுதான் ஜீவன் முக்த வாழ்வு.

### இழந்ததை நினைவுபடுத்தும் சத்குரு

அனுமன் நினைத்திருந்தால் அந்த விநாடியே என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்திருக்கலாம். ஏனென்றால் கடைசியில் அனுமன்தான் அத்தனையும் செய்தார்.

ராமாயணத்தைப் பார்த்தீர்கள் என்றால் கடைசியில் அனுமன்தான் அனைத்தையும் செய்தார். கடைசியில் சத்குரு கிருபையினால்தான் எல்லாமே நடந்திருக்கும்.

ஆனால் தம்மால்தான் இது எல்லாமே நடந்தது போல் எங்கேயுமே அனுமன் காட்டிக்கொள்ளவேயில்லை.

கடைசி வரையிலும் என்னவாகத்தான் இருந்தார்? ஓரமாக ஒதுங்கி ஒரு பார்வையாளராக மூலையிலேயேதான் இருந்தார்.

அதனால்தான் ராமர் ஆலயங்களை விட அனுமாருக்கு ஆலயங்கள் அதிகம். ராமருக்கு இருக்கிற கோயில்களை விட அனுமாருக்குக் கோயில்கள் அதிகம்.

இத்தனையும் செய்து விட்டு அவர் ஒதுங்கித்தான் இருந்தார். அதுதான் ஞான சத்குருவின் குணாதிசயம். குணங்களையும் கடந்து வாழும் குணாதிசயம்.

ஆழ்ந்து பார்த்தீர்கள் என்றால் கதையில் சில விஷயங்கள் ரொம்ப விளையாட்டாக இருக்கும். அதில் ஒன்று பாலம் கட்டியது. ராமரே இலங்கைக்குச் செல்வதற்குப் பாலம் கட்ட வேண்டியதாக இருந்தது. ஆனால் அனுமன் என்ன செய்தார்? தாண்டிக் குதித்துவிட்டார்.

நினைத்திருந்தால் இவரே என்ன செய்திருக்கலாம்? போய் உடனே சீதையை அழைத்து வந்து இருக்கலாம்.

ஜீவனுடைய துக்கத்தைத் தீர்த்து இருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. ஏனென்றால் அந்த ஜீவனுக்கென்று ஒரு தனிவழி இருக்கிறது.

அந்த ஜீவனுடைய பல்வேறு அம்சங்களையும் ஒன்று திரட்டுகிறார். அதுதான் அந்தப் படை திரட்டுதல். உங்களுக்குள் இருக்கும் ஜீவன் உங்களுடைய புத்தியையே உங்களுடையது என்று உணர மறந்து விட்டது. உங்களுடைய அகங்காரத்தை உங்களுடைய எதிரி என்று உணர்வதை அது மறந்துவிட்டது.

உங்களுடைய ஆனந்தத்தை உங்களுக்குச் சொந்தமான ஒன்று என்று நினைப்பதையும் அது மறந்துவிட்டது. இந்த இழந்துவிட்ட எல்லாத் தெளிவையும் ஜீவனுக்குள் ஒன்றாக்குபவர்தான் அனுமன் ஞான சத்குருநாதர்.

முதலில் ராமரை சுக்ரீவனிடம் அழைத்துச் சென்று காண்பிக்கிறார்.

சுக்ரீவன்தான். புத்தி.

புத்திக்கு என்ன ஆயிற்று?

தான் தோன்றித்தனமாக ஜீவனை விட்டுத் தனியாக இருந்ததால் அது ஆனந்தத்தை இழந்து விட்டது. அதாவது சுக்ரீவன் மனைவியை இழந்துவிட்டது. அகங்காரம் வாலி அந்த ஆனந்தத்தைத் தூக்கிக்கொண்டு போய் விட்டது.

ஜீவான்மாவை விட்டு எப்பொழுது புத்தி ஒதுங்குகிறதோ அப்போ அகங்காரம் என்ன செய்யும்? ஆனந்தத்தைத் தூக்கிக்கொண்டு போய்விடும்.

இதுதான் வாலி மோட்சத்தில் சொல்லப்படும் முதல் முக்கியமான சத்யம். சுக்ரீவனுடைய மனைவிதான் ஆனந்தம்.

ஆனால் சுக்ரீவனின் மனைவியை யார் தூக்கிச் சென்றார்கள்? அகங்காரம் வாலி தூக்கிக்கொண்டு போய்விட்டது!

இப்போது புத்திக்கு என்ன வேண்டும்?
ஆனந்தம் வேண்டும்.
ஜீவான்மாவுக்கு என்ன வேண்டும்?
ஞானம் வேண்டும்.
சுக்ரீவனுக்கு மனைவி வேண்டும்.
ராமருக்குச் சீதை வேண்டும்.

அப்போது புத்தியும் ஜீவான்மாவும் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டால் இருவருமே அடைய வேண்டிய ஆனந்தத்தையும் ஞானத்தையும் அடையலாம்.

அதனால்தான் சுக்ரீவன் ராமருக்கு எந்த அளவுக்குத் தேவைப்பட்டானோ அதே அளவுக்கு ராமரும் சுக்ரீவனுக்குத் தேவைப்பட்டார்.

பார்த்தவுடனேயே இரண்டு பேருக்குமே புரிந்து விட்டது. ஏனென்றால் சரியான குரு இரண்டுபேரையும் அறிமுகம் செய்து வைக்கிறார்.

உங்களின் இழந்த பகுதிகளை உங்களுக்குப் புரியவைத்து உங்களின் ஜீவனையும் புத்தியையும் உங்களுக்கு உதவ வைப்பதுதான் உபநிஷத் தியான முகாம் தீக்ஷை என்பதெல்லாம்.

"உபநிஷத் ' என்றால் அதன் அர்த்தமே வேறொன்றுமில்லை... குருவின் அருகாமையில் அமர்ந்திருத்தல் என்றர்த்தம். அவ்வளவுதான்.

தியான முகாம் என்றால் உங்களின் வாலியையே வெல்வதற்கான வெவ்வேறு யுக்திகளைக் குருவின் துணையோடு நீங்களே உபயோகித்து பார்ப்பது.





கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



**Suren Sornalingam**
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com



காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும்
காப்புறுதி ஆலோசகர்களாவதற்கும்
ஒரு நம்பிக்கையான நிறுவனம்

**FREE CLASSES**
To Become RESP & INSURANCE ADVISORS

LIFE • CRITICAL ILLNESS • HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE
• GROUP BENEFITS • RRSP • RESP
• DISABILITY INSURANCE • LONG TERM CARE

MEDICAL INSURANCE FOR SUPER VISA 100% REFUND IF VISA DENIED



**Sritharan Thurairajah**
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist

Direct: 416.918.9771
Business: 416.321.2500

MDRT Member of Million Dollar Round Table

Life100 INSURANCE & INVESTMENTS INC.

- digi Media -

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca

LaCapitale | IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Assumption Life | BMO Insurance

Are you getting Million Dollar advice?

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்

EXPRESS AIR TRAVELS AND TOURS "Fly with Confidence"
416.828.9696
info@expressairtravelss.com
Flight Services
All Inclusive Packages
Last Minute Deals
Cruise Services
Car Rentals
Hotels
Tourist Visa
Passport Application
Dual Citizen Application
தமிழர்களின் நிர்வாகத்தில் Majestic City Indoor Mall இல் உங்களுக்கான பிரயாண முகவர் நிலையம்
Majestic City Indoor Mall
H1-2900 Markham Road, Scarborough ON, M1X 1E6

உதயம் 1380 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 16, 2022




## CANADIAN TAMIL CONGRESS RAISED 50000 DOLLARS FOR FIVE MAJOR HOSPITALS IN SRILANKA

## கனடிய தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் மாபெரும் நிதி சேர் நடைப் பயணம் வெற்றிகரமாக நடைபெற்றது

இதன் மூலம் சேகரிக்கப்பெற்ற 500000 கனடிய டாலர்கள் இலங்கையில் உள்ள ஐந்து பிரதான வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் கனடா உதயனுக்கு கனடிய தமிழர் பேரவையின் தலைவர் சிவன் இளங்கோ தெரிவிப்பு. (உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)

## தாயகக் குழந்தைகளின் நல்வாழ்வில் குடும்பத்தையே அர்ப்பணித்த மருத்துவர் குகதாசன் ஐயா சிவனடி சார்ந்தார்



போற்றுதற்குரிய கண் சிகிச்சை நிபுணர் சிவபூமி அறக்கட்டளை பொருளாளர் மன விருத்தி தேவைப்பாடு குழந்தைகளின் நல்வாழ்வில் குடும்பத்தையே அர்ப்பணித்த மருத்துவர் குகதாசன் ஐயா சிவனடி சார்ந்தார். 2 தசாப்த்திற்கு மேலாக தனியொரு கண் நிபுணராக குடாநாட்டிற்கு அரும்பணி ஆற்றியவர். கண்தானத்தை ஊக்குவித்தவர்.

## 'தமிழ்ப் பணி' சஞ்சிகையின் ஆசிரியர் வா. மு. சே. திருவள்ளுவர் அவர்கள் கனடா வந்துள்ளார்

தமிழ்நாட்டின் சென்னை மாநகரிலிருந்து வெளிவரும் 'தமிழ்ப் பணி' சஞ்சிகையின் ஆசிரியரும் பெருங்கவிக்கோ என்று புகழோடு அழைக்கப்பெறும் வா. மு. சேதுராமன் அவர்களின் புதல்வருமான வா.மு.சே. திருவள்ளுவர் அவர்கள் நேற்று வியாழக்கிழமை கனடா வந்துள்ளார். இங்கு வெள்ளி சனி ஞாயிறு ஆகிய தினங்களில் பல கலை இலக்கிய மற்றும் பொது நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ள திருவள்ளுவர் அவர்களின் 'உலகவன்' என்னும் கட்டுரைகள் அடங்கிய நூல் பற்றிய உரையாடல் நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 416-732-1608 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.



## "ரொறன்ரோ மனித நேயக்குரல்" அமைப்பின் ஆதரவில் இலங்கை தெனியாய கலைமகள் சிறுவர் பாடசாலையின் வருடாந்த இரவு முகாம் கொண்டாடப்பட்டது




கனடாவில் வெற்றிகரமாக இயங்கிவரும் "ரொறன்ரோ மனித நேயக்குரல்" அமைபப்பின் நிதி அன்பளிப்பில் இலங்கை தெனியாய கலைமகள் சிறுவர் பாடசாலையின் வருடாந்த இரவு முகாம் - **Night Camp** கொண்டாடப்பட்டது.
(உள்ளே விபரமான செய்தி 10ம் பக்கத்தில்)

## ரொறன்ரோ "மதங்கசூளாமணி நாட்டியப் பள்ளி" மாணவிகள் பூங்கவி. பூந்தளிர் சகோதரிகளின் பரத நாட்டிய அரங்கேற்றம்

ரொறன்ரவில் நடன ஆசிரியை ஸ்ரீமதி ராஜநந்தினி லிங்கன் அவர்களின் நிர்வாகத்தில் இயங்கும் "மதங்கசூளாமணி நாட்டியப் பள்ளி" மாணவிகளும் திரு. திருமதி லிங்கன் தம்பதியின் புதல்விகளுமான பூங்கவி. பூந்தளிர் சகோதரிகளின் பரத நாட்டிய அரங்கேற்றம் கடந்த 03-09-2022 சனிக்கிழமையன்று ஸ்காபுறோ ஆர்மேனியன் இளைஞர் கழக மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.
(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)



புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL
COLOMBO • SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136